24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 214 ஆனி 16 ஆம் நாள் திங்கட்கிழமை 01 ஜூலை 2019 வள்ளுவர் ஆண்டு 2050

# ஆயுத பலம் இல்லை என்பதால் அரசு ஏமாற்ற எண்ணக் கூடாது

## இந்த ஆண்டுக்குள் தீர்வுவேண்டும் என கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் இடித்துரைப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 1

ஆயுதம் ஏந்தியவர்கள் எமது சார்பில் செயற்பட முடியாது இருக்கின்ற ஒரு சூழ்நிலையில் அரசியல் தீர்வு தொடர்பான அரசமைப்புப் பின்நகர்த்தப்படும் அல்லது அதை இல்லாது செய்யும் நிலையே ஏற்பட்டுள்ளது. ஆயுதம் ஏந்தினால்தான் அரசியல் தீர்வு சம்பந்தமாக ஆக்கபூர்வமான நடவடிக்கையை முன்னெடுப்பதற்கும், ஆயுத பலம் இல்லாவிட்டால் அதைக் கைவிடும் நிலைப்பாட்டையும் அரசு எடுக்குமானால் அது ஒரு தவறான நிலைப்பாடு.

19

## நாடாளுமன்றின் அலட்சியமே தேர்தல் தாமதிக்கக் காரணம்

*தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 1

நாடாளுமன்றம் மற்றும் நிறைவேற்றதிகாரம் ஆகியவற்றின் அலட்சியமே மாகாண சபைத் தேர்தல் தாமதமடைவதற்கான காரணம் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளதைப் போன்று, மாகாணசபைத் தேர்தல் தாமதமடைவதற்கு அரசு பொறுப்பு

07

# கூட்டாட்சிக் கட்டமைப்புக்குள் இனப் பிரச்சினைக்கு தீர்வு

## தமிழரசுக் கட்சி மாநாட்டில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை இந்த ஆண்டு இறுதிக்குள் ஏற்படுத்த வேண்டும் என்று அரசையும், அரசியல் கட்சிகளையும், அனைத்துச் சமூகங்களிடமும், இந்தியா உள்ளிட்ட பன்னாட்டுச் சமூகத்திடம் வேண்டுகோள் விடுக்கின்றோம். இந்த அரசியல் தீர்வு ஒருமித்த இலங்கை நாட்டில் தமிழ் மக்களின் இறையாண்மை, சுயநிர்ணய உரிமை, மனித உரிமை, வாழும்

19

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவினர்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

19

## 19 ஆவது திருத்தத்தை திருத்துவது அவசியம்

### வலியுறுத்துகிறார் சுமதிபால

கொழும்பு, ஜூலை 1

அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் மீண்டும் திருத்தங்களை மேற்கொள்ளாமல் அடுத்த அரச தலைவராகத் தெரிவு செய்யப்படும் யாரும் நாட்டைக் கொண்டு செல்ல முடியாது. எனவே 19 இல் உடனடியாக திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திர கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

கெஸ்பாவ பிரதேசத்தில் நேற்று நடந்த சிறிலங்கா சுதந்திர கட்சியின் மத்திய செயற்பாட்டு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கூட்டு அரசு அமைக்கப்பட்டதன் பின்னரோ அல்லது அண்மைக் காலமாகவோ நாட்டில் பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டமைக்கு 19 ஆம் அரசியலமைப்பு திருத்தமே காரணமாகும் என்பதே எமது நிலைப்பாடாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(எ)



## கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி, ஜூலை 1

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் நேற்று கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஒவ்வொரு மாதமும் 30 ஆம் திகதி மேற்கொள்ளப்படும் ஆர்ப்பாட்டமே நேற்றும் மேற்கொள்ளப்பட்டது.

கிளிநொச்சி, ஏ-9 வீதிக்கு அருகில் இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. கடந்த 859 நாள்களாக

07

## உடன்பாட்டால் இறைமைக்கு பாதிப்புகள் எவையும் வராது

### மைத்திரியின் கருத்துக்கு அமெரிக்கா பதில்

கொழும்பு, ஜூலை 1

இலங்கை – அமெரிக்கா இடையிலான பாதுகாப்பு உடன்பாடுகளால் இலங்கையின் இறைமைக்கு எந்த பாதிப்பும் வராது. இங்கு அமெரிக்க படைகள் தளங்களை அமைக்கவோ, போர்த் தளபாடங்களை நிறுவவோ அனுமதிக்கப்பட மாட்டாது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்கா முன்மொழிந்துள்ள சோபா உடன்பாடிக்கையால் இலங்கையின் இறைமை மற்றும் சுதந்திரத்துக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்றும்,

19

## அரச தலைவர் பதவிக்கு சமலே மிகப் பொருத்தம்

### வாசுதேவ கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 1

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ச தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதே லங்கா சமசமாஜக் கட்சியின் எதிர்பார்ப்பாகும் என அந்தக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

19

## அலுகோசு பதவிக்கு இருவர் தெரிவு

கொழும்பு, ஜூலை 1

தூக்குத் தண்டனையை நிறைவேற்றும் அலுகோசு பதவிக்கு இருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலை தலைமையக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அவர்களுக்கு இரண்டு வாரங்கள் அடிப்படை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது

07

# மைத்திரியின் தீர்மானத்துக்கு ஒருபோதும் ஆதரவளிக்கோம்

### ரணில் விக்கிரமசிங்க திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை 1

ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளில் உயிர்க் கொலைகளுக்கு இடம் கிடையாது. எந்த காரணத்துக்காகவும் தூக்குத் தண்டனையை நடைமுறைப்படுத்த ஆதரவு வழங்க முடியாது.

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மொனராகலை மாவட்டத்தில் நீர் திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்றுத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்றது.

07



## தூக்குத் தண்டனை விடயத்தில் மைத்திரியுடைய முடிவு மாறாது

*சு.க. பொதுச் செயலர் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 1

போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய நால்வருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எடுத்துள்ள தீர்மானத்தில் எந்த சந்தர்ப்பத்திலும் மாற்றுக் கருத்துக்கு வாய்ப்பில்லை. இந்தத் தீர்மானம் எந்த வகையிலும் சுற்றுலாத்துறையிலோ வேறு காரணிகளிலோ தாக்கம் செலுத்தாது.

19

# சனிப்பெயர்ச்சி பலன்கள் 2020 - 2023





தை மாதம் 10ஆம் திகதி ஜனவரி 24, 2020ஆம் ஆண்டு சனிபகவான் தனுசு ராசியில் இருந்து மகரம் ராசிக்கு நகர்கிறார். இந்த சனிப்பெயர்ச்சியால் தனுசு மகரம் கும்பம் ராசிக்காரர்களுக்கு ஏழரைச் சனி காலமாகும். விருச்சிக ராசிக்காரர்கள் ஏழரைச் சனியில் இருந்து விடுபடுகிறீர்கள்.




உங்களுடைய ராசிக்கு இதுவரை 12ம் இடத்தில் விரய ஸ்தானத்தில் விரய சனியாக சஞ்சரித்த சனி பகவான் இப்பொழுது ஜென்மச் சனியாக உங்களது ராசிக்கு சஞ்சாரம் செய்ய உள்ளார். சனிபகவான் உங்கள் ராசிக்கு அதிபதி அவரே இரண்டாம் அதிபதி. உங்கள் ராசி அதிபதி உங்கள் ராசியில் ஆட்சி பெற்று அமர்வதால் நன்மையும் தீமையும் கலந்த பலன்கள் நடைபெறும்.
ஜென்ம சனி என்றாலே பாதிப்பு வருமே என்று மகரம் ராசிக்காரர்கள் பயப்பட வேண்டாம். எல்லோருக்கும் தனித்தனி ஜாதகம் இருக்கும். அவரவர் தசாபுத்திக்கு ஏற்ப பலன்கள் மாறுபடும். அதையும் தவிர சனிபகவான் உங்கள் ராசி அதிபதி உங்களுக்கு நன்மைகளையே செய்வார். சனிபகவான் உங்கள் ராசியில் அமர்ந்து கொண்டு ராசிக்கு மூன்றாம் இடம், ஏழாம் இடம், பத்தாம் இடத்தைபார்வையிடுவதால் உங்களுக்கு பல நன்மைகள் நடைபெறும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**போராட்டமே வாழ்க்கை**

மனமும் உடலும் கொஞ்சம் ஒத்துழைக்காது. சோம்பல் அதிகரிக்கும். உணர்ச்சி போராட்டம் அதிகரிக்கும். மனம் இனி அறிவு சொன்னபடி வேலை செய்யாது. மனசு சொன்னபடிதான் எல்லாம் நடக்கும். அவ்வப்போது குழப்பம் அதிகரிக்கும் குழப்பத்தோடு செய்யும் காரியங்கள் எல்லாம் சொதப்பலாகத்தானே முடியும். இதனால் குடும்பத்திலும் நிம்மதி இழப்பு.தொழில் செய்யுமிடமும் கவனம் செலுத்த முடியாமல் நஷ்டம் உண்டாகும் வாய்ப்பு இருக்கிறது.

**தொழில் லாபம்**

உங்கள் ராசியிலே சனிபகவான் சஞ்சாரம் செய்வதால் எதிர்பார்த்த வேலை கிடைப்பதில் சற்று தாமதம் ஏற்பட்டாலும் கிடைத்த வேலையில் முதலில் சேர்ந்து வேலை செய்யுங்கள். ஒரு சிலருக்கு அரசு வேலையும் கிடைக்கும். தனியார் நிறுவனங்களில் சக ஊழியர்களின் நட்பும் ஒத்துழைப்பும் கிட்டும். ஒரு சிலருக்கு வெளிநாடு செல்லவும் சந்தர்ப்பம் கிட்டும். பத்தாம் வீட்டை சனி பார்ப்பதால் போராட்டத்திற்கு பின் வேலை கிடைக்கும். எதிர்பார்த்த வேலை கிடைக்கவில்லை என்றாலும் ஆரம்பத்தில் கிடைத்த வேலையில் அமர்ந்து பின் விருப்பமான வேலையை தேர்வு செய்தல் வேண்டும். சம்பள உயர்வு சிலருக்கு சாதகமாக இல்லை என்றாலும் தொடர்ந்து வேலை இருக்கும். சிறு தொழில்கள் சிக்கலின்றி நடைபெறும்.

**உடலை கவனியுங்கள்**

பணப்பிரச்சினை நெருக்கடியாகத்தான் இருக்கும் சமாளிக்கலாம். நெருப்பால் கண்டம் இருக்கு. அவமானம்,பழி சொல் ஏற்பட வாய்ப்பிருக்கு. புதிய ஆட்களிடமும் பழைய நட்புகளாக இருந்தாலும் கவனம் தேவை. உடல் ஆரோக்கியம் கெடும். எனவே கவனமாக செயல்படுங்கள். உடலுக்கும்,மனதுக்கும்,உறவுகளுக்கும் முக்கியத்துவம் கொடுங்கள். குடும்பத்தில் வீண் வாக்குவாதம் தவிருங்கள் எடுக்கும் முடிவுகளை பத்து முறை அலசியபின் செயல்படுத்துங்கள்.
வெற்றி மீது வெற்றி போராட்டமே வாழ்க்கை என்று கவலை வேண்டாம். நீங்கள் செய்யும் முயற்சிகளுக்கு நிச்சயம் வெற்றி கிடைக்கும். மன சஞ்சலங்கள், குழப்பங்கள் குறைந்து தைரியம் அதிகரிக்கும். தேவையற்ற பேச்சுக்களை குறையுங்கள். ஒரு சொல் வெல்லும் ஒரு சொல் கொல்லும் எனவே எச்சரிக்கையுடன் பேசுங்கள்.
வெற்றி மீது வெற்றி போராட்டமே வாழ்க்கை என்று கவலை வேண்டாம். நீங்கள் செய்யும் முயற்சிகளுக்கு நிச்சயம் வெற்றி கிடைக்கும். மன சஞ்சலங்கள், குழப்பங்கள் குறைந்து தைரியம் அதிகரிக்கும். தேவையற்ற பேச்சுக்களை குறையுங்கள். ஒரு சொல் வெல்லும் ஒரு சொல் கொல்லும் எனவே எச்சரிக்கையுடன் பேசுங்கள்.

**கல்வியில் தடை**

மாணவர்கள் கல்வியில் அதிக கவனம் செலுத்துங்கள். உயர்கல்வியில் தடை ஏற்படும். ஒரு சிலருக்கு வீடு மாற்றம், இட மாற்றம், ஊர் மாற்றம் ஏற்படும். வண்டி வாகனங்களில் செல்லும் போது எச்சரிக்கை தேவை. தேவையற்ற மனக் குழப்பத்தை தவிர்த்து எதையும் நன்கு சிந்தித்து செயல்பட்டால் மட்டுமே தேர்வில் வெற்றி பெற முடியும். உற்சாகமாக இருங்கள் நிச்சயம் நல்லது நடக்கும். ஞாபகசக்தியை அதிகரிக்க வேண்டும். தேவையற்ற விஷயங்களில் தலையிடாமல் படிப்பில் கவனம் செலுத்தினால் மட்டுமே நன்கு மதிப்பெண் பெற முடியும். எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருங்கள் நல்லதே நடக்கும்.

**கடனும் நோயும்**


பணம் கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. சிலருக்கு கேட்ட இடத்தில் கடன் கிடைக்கும். பழைய கடனை அடைக்க புதிய கடனை வாங்க வேண்டி வரும். யாருக்கும் தேவை இல்லாமல் கடன் கொடுத்தல் கூடாது. எதிர்பார்த்த பணம், பொருள் வருவதில் சற்று கால தாமதமாகும். உடல் ஆரோக்யத்தில் அதிகக் கவனம் தேவை. அடிக்கடி அசதி, சோர்வு இரத்த அழுத்தம் ஏற்படும். நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து காணப்படும் என்பதால் சிறு பிரச்சினைகளுக்கு கூட மருத்துவரின் ஆலோசனை அவசியம்.

**பெண்களுக்கு நிம்மதி**

சம்பாதிக்கிற பணமெல்லாம் செலவாகுதே கையில் நிக்கலையே என்று கவலைப்பட்ட உங்களுக்கு இனி சற்றே நிம்மதி பெருமூச்சு விடும் காலம் வந்து விட்டது. விரும்பி இடத்தில் வேலை கிடைக்கும். வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தில் மதிப்பு மரியாதை கூடும். பெண்கள் உடல் நலனில் அக்கறை செலுத்துங்கள். நேரத்துக்குச் சாப்பிடுங்கள். கணவரிடரும், குடும்பத்தினரிடமும் உற்சாகமாக நேரத்தை செலவிடுங்கள். 30 மாதத்தில் ஜென்மசனியை சிக்கலின்றி கடந்து விடலாம்.

# மிதுன ராசிக்காரர்களின் குணநலன்கள்

மிதுனம் ராசிக்காரர்கள் புதனின் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள். மிதுனத்தை லக்னமாகவோ ராசியாகவோ கொண்டவர்கள். மற்றவர்கள் வியந்து பார்க்கும் அளவு அறிவாளிகளாக இருப்பார்கள். பள்ளிப் பருவத்தில், கல்லூரி நாள்களில் மற்றவர்கள் இவர்களை மட்டம் தட்டியிருப்பார்கள். ஆனால், படிப்பு முடிந்து சாதனைகள் படைக்கும்போது, “இவரா அப்படி?' என ஆச்சர்யப்பட வைப்பார்கள்.
உலகின் போக்கையே மாற்றிய அறிவாளிகள், புத்திசாலிகள், கண்டுபிடிப்பாளர்கள் எனப் பலரும் மிதுன ராசியில் பிறந்தவர்கள்தான். பணத்தைவிட புகழுக்கே அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள்.
மிதுன ராசிக்காரர்களுக்கு கற்றுக்கொள்ளும் ஆர்வம் அதிகமிருக்கும். எல்லாவற்றையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்று நினைப்பார்கள். அமெரிக்க அதிபரிலிருந்து அவர் வீட்டு அடுப்பங்கரை வரை எதையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல் இவர்களுக்கு அதிகமிருக்கும். ஆனால், ஒன்றைப் பற்றித் முழுமையாகத் தெரிந்துகொள்ளுவதற்கு முன்பே அடுத்து ஒரு விஷயத்தில் ஆர்வம் காட்டத் தொடங்கிவிடுவார்கள். இதனால் இவர்களுக்கு எல்லா விஷயங்களிலும் இரட்டைச்சிந்தனை மனநிலை இருந்துகொண்டே இருக்கும். இது இவர்களின் பலவீனமாகும்.
மற்றவர்களுக்கு அறிவுரைகளை மிகவும் பக்குவமாகச் சொல்வார்கள். ஆனால், அதை இவர்களின் சொந்த வாழ்க்கையில் கடைப்பிடிக்கமாட்டார்கள். எல்லாவற்றிலும் அடுத்தவர்களின் ஆலோசனைகளைக் கேட்டுவைத்துக் கொண்டு இறுதியில் அவர்கள் நினைத்ததையே செய்வார்கள். எல்லோரையும் அரவணைத்து மேலே கொண்டுவரவேண்டுமென நினைப்பார்கள். எவரையும் காலை வாரிவிட மாட்டார்கள்.
மிதுனத்தின் அதிபதியான புதனின் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள், புத்தகம், அறிவின் மூலம் விருத்தியளிக்கும் தொழில்களான நிதி, சட்டம் ஆகியற்றுக்கு ஆலோசனைகள் வழங்கும் தொழில்கள் இவர்களுக்கு ஏற்றவை, பேச்சாளர்கள், வழக்கறிஞர்கள், ஆடிட்டர்கள் இந்த ராசியில் பிறந்தவர்களாக இருப்பார்கள்.



# சமஷ்டிக் கட்டமைப்பில் அரசியல் தீர்வு தமிழ் அரசுக் கட்சி மாநாட்டில் தீர்மானம்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் 16ஆவது தேசிய மாநாடு நேற்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. அந்த மாநாட்டில் அரசியல் தீர்வு உள்ளிட்ட 27 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**அந்தத் தீர்மானங்கள் வருமாறு**

**1.அரசியல் தீர்வு**

இலங்கை நாட்டில் கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழினப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஏற்படாத காரணத்தால் இடம்பெற்று வரும் ஜனநாயக வழிப் போராட்டங்களினாலும், ஆயுதப் போரின் விளைவுகளாலும், 2012 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான ஐ.நா.மனித உரிமைப் பேரவைத் தீர்மானங்களாலும், சர்வதேச சமூகத்தின் தலையீடுகளினாலும் இலங்கை இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும் என்ற அடிப்படையில் இலங்கைப் நாடாளுமன்றத்தில் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன் பொருட்டு இடைக்கால அறிக்கை ஒன்று நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

இருந்த பொழுதிலும் தமிழினப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படவில்லை. தாமதங்களும், தடைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை மிக விரைவில் இவ்வாண்டுக்குள் ஏற்படுத்த வேண்டுமென அரசையும், அரசியல் கட்சிகளையும், அனைத்து சமூகங்களிடமும் இந்தியா உள்ளிட்ட பன்னாட்டுச் சமூகத்திடமும் இம் மாநாடு வேண்டுகோள் விடுக்கிறது.

அந்த அரசியல் தீர்வானது ஒருமித்த இலங்கை நாட்டில் தமிழ் மக்களின் இறையான்மை, சுய நிர்ணய உரிமை, மனித உரிமை வாழும் உரிமை அடிப்படையில் கூட்டாட்சி கட்டமைப்பில் பிராந்தியங்களினதும் தேசிய இனங்களினதும் தன்னாட்சி உரித்தை உறுதிப்படுத்தும் வகையில் அமைய வேண்டும் என இம் மாநாடு வற்புறுத்துகின்றது.

**2. ஐ.நா.மனித உரிமைத் தீர்மானம்**

- ஐ.நா.மனித உரிமைப் பேரவைத் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும். 2012 முதல் 2015 வரை இலங்கை தொடர்பில் ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் 30/1, 34/1, 40/1 ஆகியன முழுமையாக கால அட்டவணையில் நிறைவேற்றவும், நடைமுறைப்படுத்தவும், மக்கள் பயனுறவும் உத்தரவாதம் அளிக்கவும், நம்பகத் தன்மை நிலைநாட்டப்படவும் வேண்டும். ஐ.நா.மனித உரிமைப் பேரவையும் ஐ.நாவும் இத்தீர்மானங்களை முழுமையாக நிறைவேற்றுவதற்கு பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றது இம் மாநாடு.

**3. ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் விடுவிப்பு**

போர்க் காலத்தில் முப்படைகளினாலும், பொலிஸ் துறையினாலும் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் ஆக்கிரமிக்கப்பட்ட தனியார், அரச நிலங்கள் தாமதமின்றி விடுவிக்கப்பட வேண்டுமென மாநாடு வலியுறுத்துகின்றது. அத்தோடு மகாவலித் திட்டத்தின் கீழும், வனவிலங்கு பரிபாலனத்துறை, சுற்றுச் சூழல்துறை, தொல்லியல், கரையோரப் பாதுகாப்பு கனிம முதலான திணைக்களம் அரச மற்றும் அரச துறைகளினால் கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் மக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். நிலமற்ற, வீடு அற்ற, தொழிலற்ற மக்களுக்கு நிலங்கள் வீடுகள், தொழில் வாய்ப்புக்கள் வழங்கும் வகையில் நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என இம் மாநாடு வற்புறுத்துகிறது. இந்த நிறுவனங்களின் நடவடிக்கைகளை உடன் நிறுத்த வேண்டுமென அரசதலைவரையும், அரசையும் வற்புறுத்திக் கோருகின்றது இம் மாநாடு.

**4. காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தீர்வு**

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறிப்பாகப் போர்க் காலத்தில் இராணுவத்திடம் சரணடைந்தவர்கள், உறவினரால் கையளிக்கப்பட்டவர்கள் தொடர்பில் பதில் வழங்க வேண்டிய பொறுப்பு இன்றைய அரசுக்கும் உண்டு. ஐ.நா.மனித உரிமைப் பேரவைத் தீர்மானத்தால் நிறுவப்பட்ட விசாரணைக்குழுவின் நடவடிக்கைகள் மீது பாதிக்கப்பட்டவர்களுக்கும் மக்களுக்கும் நம்பகத்தன்மை ஏற்படும் வகையில் சிபார்சுகளும், நடவடிக்கைகளும் இடம்பெறுவதை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் இப் பிரச்சனைக்கு காலம் தாழ்த்தாமல் தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

**5. மீள்குடியேற்றம்**

போரின் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் தத்தம் நிலங்களில் உடன் மீள்குடியமர்த்தப்பட வேண்டும். மக்கள் வாழ்வுரிமை அங்கீகரிக்கப்பட்டு நிலமற்றவர்களுக்கு நிலம், தொழில் அற்றவர்களுக்கு தொழில், வீடு அற்றவர்களுக்கு வீடு உறுதிப்படுத்தப்பட வேண்டும். வெளிநாடுகளில் குறிப்பாக இந்தியாவில் இடம்பெயர்ந்து வாழ்பவர்களை அவர்கள் விருப்பறிந்து அவர்களது இடங்களில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட வேண்டும் என இம் மாநாடு வற்புறுத்துகின்றது. புலம்பெயர்ந்த மக்கள் இரட்டைக்குடியுரிமை பெறுவதற்கும் முதலீடுகள் செய்வதற்கும் உள்ள பொருத்தமான இலகு முறைகள் சட்ட நடவடிக்கை உருவாக்கப்பட வேண்டும் என இம் மாநாடு வற்புறுத்துகின்றது.

போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் மீளக்குடியேறுவதற்கும் மீள் கட்டுமானப் பணிகளுக்கும் அரசு போதிய நிதியையும் வளங்களையும் உடன் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வற்புறுத்துகிறோம்.

**6.கைதிகள் விடுதலையும் பயங்கரவாத தடைச்சட்டமும்.**

போர் காரணமாக கைது செய்யப்பட்டவர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளவர்களுக்கு அரசியல் தீர்மானம் எடுக்கப்பட்டு மன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்கப்பட வேண்டுமெனவும், அதற்கு வசதியாகவும், நடைமுறைச் சாத்தியமாகவும் பன்னாட்டுத் தரம் மிக்க சட்டமொன்றை தேவைப்படின் கொண்டுவருவதற்குப் பொருத்தமாகத் தற்போதுள்ள கொடிய பயங்கரவாதத் தடைச்சட்டமானது உடன் நீக்கப்படவேண்டுமென இம்மாநாடு வற்புறுத்துகிறது.

**7. தொழில் வேலைவாய்ப்பு**

குறிப்பாக போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் கல்விகற்ற, பட்டப்படிப்பை மேற்கொண்டவர்களுக்கும், மூப்பு அடிப்படையில் 2012ஆம் ஆண்டுக்குப் பின்னரிலிருந்து வேலையற்றவர்களுக்கு வேலைவாய்ப்பை உறுதிப்படுத்த வேண்டுமென்றும் அரசுத்துறையில் வேலைவாய்ப்பைப் பெறத் தகுதியானவர்கள் வயது கூடியவர்கள் இருப்பின் 45வயதுடையவர்களுக்கும் வேலைவாய்ப்பை வழங்க அமைச்சரவைத் தீர்மானமொன்றை உடன் நிறைவேற்றவேண்டும் என இம்மாநாடு வற்புறுத்துகின்றது. மேலும் நீண்டகாலமாக சம்பளம் கூட இல்லாமல் ஆசிரியர்களாக இருக்கும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கவேண்டும். குறைந்தது 15ஆயிரம் ரூபாஆரம்பத்தில் வழங்கவும் அரசும்,மாகாணசபையும் நடவடிக்கை எடுக்கவேண்டும். இறுதியாக தொண்டர் ஆசிரிய நியமனத்தில் குறைபாடுகளை ஆராய்ந்து தகுதியுடையோருக்கு இவ்வாண்டுக்குள் நிரந்தர நியமனம் வழங்கவும் வேண்டும்.

**8.(அ) போராளிகள் ஜனநாயக நீரோட்டத்தில் இணைப்பு:**

போர் காரணமாகக் கல்வி பெற வாய்ப்பு அற்றவர்கள் குறிப்பாக போராளிகளாக இருந்தவர்களுக்கு சிறப்பு பயிற்சி,தொழில்நுட்பப் பயிற்சி வழங்கி அரசுத் துறையிலும், தனியார் துறையிலும் வேலைவாய்ப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும். அவர்களுக்கும் அடிப்படைச் சம்பளம் வாழ்க்கைச் செலவுக்கேற்ப வழங்கவேண்டும். அதுவரை அவ்வாறனவர்கள் வாழ்வதற்கு நிதிஉதவி வழங்கும் முறையொன்றைக் கொண்டுவரவேண்டும். ஜனநாயக நீரோட்டத்தில் இணைக்கப் பொருத்தமான நடவடிக்கைகள் உறுதிப்படுத்தப்படவேண்டும் என இம் மாநாடு வற்புறுத்துகிறது. இராணுவத்திடமுள்ள பண்ணைகள் விடுவிக்கப்பட்டு போராளிகளாய் இருந்தவர்களின் முகாமைத்துவத்திடம் ஒப்படைக்கவும் வேண்டும்.

(ஆ) மேலும் இதற்குப் பொருத்தமாக அரசுத் துறையிலும், ஏற்பட்டுள்ள வெற்றிடங்கள் அவ்வப் பிரதேசங்களிலிருந்தே சிற்றூழியர் ஆயினும் நிரப்புதல் வேண்டும். வேலைவாய்ப்புக்கள் அவ்வப் பிரதேசங்களிலிருந்தே நியமனம் செய்யப்படவேண்டும். அந்த விடயங்களில் தவறாக நிரப்பப்பட்டிருந்தால் அவர்களை திருப்பிப் பெறவேண்டும். உரிய பிரதேசங்களில் இடமாற்றம் வழங்கவேண்டும். பொருத்தமான தொழில் துறைகள் உருவாக்கப்படவும் வேண்டும்.

**9.பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் :**

போரினால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் 90ஆயிரம் குடும்பங்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு மறுவாழ்வு, வாழ்வாதாரம் வேலைவாய்ப்பு பெறக்கூடியவகையில் தொழில் துறைகள் ஏற்படுத்தப்பட்டு அவர்கள் வாழ்வுரிமை உறுதிப்படவேண்டுமென மாநாடு வற்புறுத்துகிறது. வரவு – செலவுத்திட்ட அறிவிப்புக்கள் முழுமையாக பயனுறவில்லை. எனவே புதிய அணுகல் முறைகளில் அந்தக் குடும்பங்கள் வேலைவாய்ப்பு, வாழ்வாதாரம், மறுவாழ்வு பெற உடன் அரசு செயலாற்ற வேண்டுமென வற்புறுத்துகிறது இம் மாநாடு.

**10.(அ) இலங்கை நாட்டில் பெண்களின் குடிசன மதிப்பீடு**

பொதுமக்கள் பிரதிநிதித்துவத்தில் பாராளுமன்றத்திலும், மாகாணத்திலும், உள்ளூராட்சியிலும் போதிய பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும். பெண்கள் ஜனநாயக உரிமைகள் மதிக்கப்படவேண்டும். பாலியல் வன்முறைகளிலிருந்தும் சிறுவர் துஸ்பிரயோகங்களிலிருந்து பெண்களும், சிறுவர்களும் பாதுகாக்கப்பட வேண்டும். பாலியல் வன்முறைகளில், சிறுவர் துஸ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்களுக்கெதிராக தண்டனை வழங்கப்படுதல் துரிதப்படுத்தப்படவேண்டும் என வற்புறுத்துகின்றோம்.

**11. தொழில் துறைகள் :**

போர் காரணமாக அழிக்கப்பட்ட, கைவிடப்பட்ட பெருந் தொழிற்சாலைகள் பொருத்தமான வகையில் நவீனமயமாக்கப்பட்டு மீளக் கட்டியெழுப்புதல், போரினால் பாதிக்கப்பட்டு வேலைவாய்ப்பு அற்றிருக்கும் இளையோர் எதிர்கால வாழ்வாதாரத்தையும், வாழ்க்கையையும் கட்டியெழுப்புவதற்குப் பொருத்தமாக புதிய அறிவியல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி புதியசிறு தொழில்கள், மத்தியதர தொழில்கள் பெருந்தொழில்துறைகளை குறுகியகால, நீண்டகால அடிப்படையில் உருவாக்க வேண்டும். பெரு முதலாளித்துவ முதலீடுகளுக்கு ஈடாக மக்கள் கூட்டாக பங்களிப்பும் முகாமைத்துவமும் செய்து பயனுறும் தொழில்துறைகளும் உருவாக்கப்பட வேண்டும்.

**12. தெங்குபனம் பொருள் அபிவிருத்தி**

(அ) பனம் பொருள்துறைகள், பதநீர், கருப்பட்டி மற்றும் பனைவள உற்பத்திகள் மற்றும் திக்கம் வடிசாலை அபிவிருத்தி, கள்ளு போதையற்ற நிலையில் போத்தலில் அடைத்தல் அதனை சந்தைப்படுத்தல் நவீனமுறையில் ஏற்படுத்தவேண்டும். அதனால் பெறப்படும் இலாபங்கள் கூட்டுறவாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும் என இம் மாநாடு வற்புறுத்துகிறது.

**13. மீன்பிடித்துறை**

மீன்பிடித்துறையில் நவீன தொழில்நுட்பமும் பயிற்சியும், சந்தைப்படுத்தலும் அவசியமாக்கப்பட வேண்டும். மட்டக்களப்பு கல்லடியில் பழுதடைந்த நிலையில் உள்ள ஐஸ் கட்டிதொழிற்சாலை புனரமைக்கப்பட்டு நவீனமயப்படுத்தப்படவேண்டும். மீன் பதனிடுதல் மக்கள் பாவனைக்கு ஏற்ற வகையிலும் ஏற்றுமதி செய்வதற்கும் பாதுகாப்பான தகரத்தில் அடைத்தலுக்கு ஏற்ற தொழில்நுட்பம் பயன்படுத்தப்படவேண்டும். இலாபங்கள் தொழில் செய்பவர்களுக்கே செல்லும் வகையில் திட்டமிடப்பட வேண்டும். உருவாக்கப்படும் மீன்பிடித்துறைகள் பல நாள் மீன்பிடி படகுகள் (ஆரடவி னயல ஆரடவி டீழயவள) பயன்படுத்தவும் அத்துறையில் நவீன பயிற்சிகளும் தொழில் புரிவோர்க்கு வழங்கப்படுதலும் வேண்டும். இப் படகுகளுக்கு 50% நிவாரணம் உண்டு.

**14. கல்வி**

ஆரம்பக் கல்வி கற்பதும் கட்டாயமானதாகும். பல்கலைக்கழக மற்றும் தொழில் துறை கற்கை நிறுவனங்கள், தொழில் நுட்பக் கற்கைகள் வடக்கு-கிழக்கில் பிராந்திய உயர் கற்கை நிறுவனங்களாகவும், அனைத்துப் பீடங்களையும் கொண்டதாகவும் மாணவர் அநுமதியில் 75%க்கு மேல் அந்தந்தப் பிராந்தியங்களிலிருந்தே திட்டமிட்ட அடிப்படையில் தேர்ந்தெடுப்பதும் தொழிலை உறுதிப்படுத்துவதும் அறிவியல், மருத்துவம், பொறியியல் மற்றும் வர்த்தகத் துறைகளுக்கு 65%மானவர்களை உள்வாங்குதலும் உருவாக்குதலும் வேண்டும் என மாநாடு வற்புறுத்துகிறது.

**15. நில.நீர் உரிமை நிலைநாட்டல்**

மகாவலி நீர் வேளாண் அபிவிருத்தியில் குடிசார் மக்கள் இனவீதமாற்றம் (ழெவ வழ உhயபெந னநஅழபசயிhiஉ pயவவநசn) ஏற்படாதவகையில் நீர் பாய்ச்சல்,குளங்கள் என்பவற்றிற்கு நீர்பாசனத்துக்கு மட்டுமே அத்திட்டங்கள் பயனுறவேண்டும். அபிவிருத்தியில், குடியேற்றத்தில் அப்பிராந்திய மக்களுக்கே முற்றிலும் முன்னுரிமை வழங்கப்படவேண்டும். இத் திட்டங்கள் எவ்வகையிலும் இன விகிதாசாரம் மாற்றப்படாமலிருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

**16. வங்கிக் கடன் இரத்து**

போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வங்கிகள், கடன்கள் வழங்கியிருந்தன. அக் கடன்கள் அம் மக்களுக்கு வாழ்வாதரத்தை ஈட்டிக் கொடுக்கவில்லை. கடன் பெற்றவர்கள் போரில் உடமைகளை, தொழிலை இழந்தவர்கள் கடன்களைத் தீர்க்கமுடியாமல் இருந்ததையும் இழக்கும் நிலையில் உள்ளனர். இவர்கள் பெற்ற கடன்களை இரத்துச் செய்யவேண்டும் என வற்புறுத்துகின்றது இம் மாநாடு. தற்போது சில படுகடன்களை அரசு செலுத்தி வருகிறது நன்றேயாகும்.

**17. தொழிற்சங்கஉரிமை**

பல துறைகளிலும் தொழிலாளர்கள் உரிமைகளுக்காக உழைத்துவரும் தொழிற்சங்கங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும். அச்சங்கங்களுடன் அரசு, பிரச்சனைகள் எழும்போது அவர்களுடன் ஜனநாயகரீதியில் பேச்சுக்கள் மூலம் இணக்கம் ஏற்பட முயற்சிப்பதுதான் தேவையென வற்புறுத்துகிறோம்.

18.தேர்தல்களில் மலையகமக்கள், முஸ்லிம் மக்கள், பெண்கள் குறிப்பாக ஏனைய சமூக மக்கள் பெரும்பான்மையாயிருக்கும் நிலையில் அவ் வட்டாரங்களில், தொகுதிகளில் தனியான ஒதுக்கீடுகள் வீதாசார அடிப்படையில் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்படும் வகையில் உருவாக்கப்பட வேண்டும்.

19. வடக்கு, கிழக்கு மீனவர்களின் தொழிலுரிமை பாதுகாக்கப்படுத்தப்படல் வேண்டும். மீன் பிடிப்பதிலும் கலங்களைப் பயன்படுத்துவதிலும் நவீன பயிற்சிகளும், சிறந்த பாவனைக்குரிய கலங்கள் தனித்தும், கூட்டாகவும் தொழிலில் ஈடுபடுவதற்கு அரசு நவீன முறைகளைக் கையாள உதவவேண்டும். சந்தைப்படுத்தலில் தொழிலில் ஈடுபடுபவர்கள் முழு அளவில் வருமானத்தை ஈட்டுவதற்கும் பொருத்தமான வகையில் திட்டங்கள் அறிமுகப்படுத்த வேண்டும்.

வடக்குக்- கிழக்கு மீனவர்கள் தங்கள் வாழ்விடங்களிலிருந்து கடலில் தொழில் செய்வதற்கு தடையாகவும், மீன்வளத்தை அழிக்கும் வகையிலும் தடைசெய்யப்பட்ட மீன்பிடி சாதனங்கள், வள்ளங்கள் பயன்படுத்துதல் தென்னிலங்கை மீனவர்களும் அயல் நாடுகளிலிருந்து பெரும் கலங்களையும், இயந்திரங்களையும் வடக்கு- கிழக்குப் பிராந்தியக் கடலில் வந்து தரித்து நின்று ஆக்கிரமித்து மீன் வளத்தை அள்ளிச் செல்வதினாலும் ஊர் மீனவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமானதாகும்.

20. வடக்கு- கிழக்கில் கூட்டுறவுத்துறை ஒருகாலத்தில் இலாபத்துடன் மக்களுக்குப் பெரும் சேவை ஆற்றி வந்தது. போர் காலத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் பாதிக்கப்பட்ட மக்களிடையே அச்சுறுத்தல் மத்தியிலும் பெரும் உதவியாக விளங்கியது. அக்காலத்திலும், அதன் பின்னரும் கூட்டுறவுச் சங்கங்களின் சொத்துக்கள் அழிக்கபட்டும் கடன்பட்டும் நிலைக்கும் தள்ளப்பட்ட கூட்டுறவு ஊழியர்கள் சம்பளம் பெறாமலே பலகாலம் தம்மை அர்ப்பணித்து மக்களுக்கு உதவி வந்தனர். குறிப்பாக வடபகுதியில் கூட்டுறவுத்துறையடைந்துள்ள நட்டங்களுக்கும், கடன்களுக்கும் அரசு பொருத்தமான உதவி வழங்கவேண்டும். மீண்டும் கூட்டுறவுத்துறைக்குப் புத்துயிர் அளிக்கவேண்டுமென அரசையும், மாகாணசபையையும் வற்புறுத்துகின்றது இம் மாநாடு.

21. அண்மையில் 2018இல் நடைபெற் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்களினால் உருவாக்கப்பட்ட சபைகளுக்கு நிதி உட்பட்ட கூடுதலான அதிகாரங்கள் அரசமைப்பினால் வழங்கப்படவேண்டும். போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களையும், மக்களையும் மீளக் கட்டியெழுப்புவதற்கு போதிய நிதி நன்கொடைகள் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

**22. பனை,தென்னை அபிவிருத்திச் சபை**

**பனை,தென்னை அபிவிருத்திச் சபை**

மாகாண அதிகாரத்துள் கொண்டு வரவேண்டும். பனை தென்னை அபிவிருத்திச் சபைக் கூட்டுறவுக் கட்டமைப்பினால் நிர்வகிக்க முழு அதிகாரம் வழங்கப்பட வேண்டும். திக்கம் வடிசாலை நவீனவசதிகளுடன் மீளக் கட்டியெழுப்ப அரசின் ஒப்புதல் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அரசு தலையிட்டு திக்கம் வடிசாலையை கட்டியமைக்க கூட்டுறவுத் துறையிடம் ஒப்படைக்கவும் அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

23. வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த வேண்டும். வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப சம்பளம் நிர்ணயிக்கப்பட வேண்டும். அரசு, தனியார் தேயிலை, றப்பர் முதலான தொழிலாளர்களுக்கும் வாழ்க்கைச் செலவுக் கேற்பச் சம்பளம் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

24. நெல்,வெங்காயம் முதலான வேளாண் விளைச்சல், மீன் வளம், பனை வளம் முதலான உற்பத்தி பண்டங்களுக்கு நியாய விலை நிர்ணயிக்கப்படவேண்டும். வேளாண்மை அறுவடைக் காலங்களில் அவ்வுற்பத்திகள் இறக்குமதி நிறுத்தப்படவேண்டும். சந்தைப் பொருளாதாரம் வர்த்தகம் உயர்த்துவதற்கு பொருளாதார மையங்கள் உருவாக்கப்படவேண்டும். உலகதர உற்பத்திகளைப் பெருக்க வேண்டும். இயற்கை வேளாண்மைக்கும் சந்தைப்படுத்தலுக்கும் உதவித்திட்டங்கள் வழங்கப்பட வேண்டும்.

(அ)உலக சந்தைப் பொருளாதாரத்துடன் போட்டியிடக் கூடிய புதிய உற்பத்திகள், மாற்றுப் பயிர் விளைச்சல் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். அறிமுகப்படுத்திய அதேவேளை பெருவர்த்தகம் மட்டுப்படுத்தப்பட்டு உள்ளூர் வர்த்தகம் பாதுகாக்கப்படவும் வேண்டும்.

25. உலகதர ஆங்கில மருத்துவம், சித்த மருத்துவம் மற்றும் ஆயுள் வேதம், அதற்குரிய மருத்துவர்கள், தாதிகள் சிற்றூழியர் தேவைக்கேற்றவாறு நியமிக்கப்பட வேண்டும். சித்த மருத்துவபீடம் தரமுயர்த்தப்பட வேண்டும். கல்வித் துறைக்கு அங்கீகாரம் வழங்கவேண்டும். பல்கலைக்கழகத்தில் சித்த மருத்துவம் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

(அ) மக்களின் உடல் நலம் உலகசுகாதார மேம்பாட்டை கொண்டதாகவும் அனைவருக்கும் மருத்துவம் கிடைப்பதையும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். மக்களுக்கு உலகதர மருத்துவம் உறுதிப்படுத்தவும் பொருத்தமான மருத்துவர்கள், தாதிகள் (ரேசளநள) நியமனம் செய்யப்பட வேண்டும்.

**26. ஊடகவியலாளர்**

ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பது ஜனநாயகக் கடமையாகும் இருந்தும் பல ஊடகவியலாளர் தமிழ் சிங்கள ஆசிரியர்களுட்பட மர்மமான முறையிலும் நேரடியாகவும் கொல்லப்பட்டுள்ளனர். ஊடகத்துறை மிகுந்த அச்சுறுத்தலுக்கும், வன்முறைகளுக்கும் உள்ளாகி வருகிறது.

இத்தகைய கொலைகள் அச்சுறுத்தல்கள் பற்றி முழுமையான நேர்மையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இக் கொலைகள் அச்சுறுத்தல்களின் பின்னணிகள்,உண்மைகள் வெளிக் கொணரப்பட வேண்டும். இதற்காக ஆணைக்குழு ஒன்றை நியமிக்கவும் வேண்டும் என இம் மாநாடு வற்புறுத்துகிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு நிவாரணம் வழங்கவும் வேண்டும்.

**27.வடக்குக் கிழக்கிற்கு இணைந்த கூட்டுமானமும் மேற்பார்வையும்**

போரினால் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்குப் பிரதேசங்களையும், மக்களையும் மீளக் கட்டியெழுப்புவதற்கு அனைத்துத் துறைகளிலும் முழுமையான ஒன்றிணைந்த திட்டங்கள் தீர்மானிக்கப்பட்டு அத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தவும் நிறைவேற்றவும் நிபுணத்துவமும், வினைத்திறனும் அர்ப்பணிப்பும் கொண்ட பொறிமுறை நிறுவப்படவேண்டும். போரினால் சீரழிந்த நாடுகளின் மீளக் கட்டியெழுப்புவதில் அனுபவம் நிபுணத்துவம் மிக்கவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவதுடன் காலஅட்டவணையில் அத்திட்டங்கள் நிறைவேற்றப்படுதலும் உறுதிசெய்யப்பட வேண்டும் என இம் மாநாடு வற்புறுத்துகிறது.

இந்தப் பிரகடனத்தில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடயங்களின்பால் அதிக அக்கறையை அரசு செலுத்தவேண்டும் என்றும், கூட்டு எதிர்கட்சி உட்பட அனைத்து அரசியலாளர்கள், சிவில் சமூகத்தினர்,மதத் தலைவர்கள், அரசதுறைசாரா நிறுவனங்கள், அறிவுழைப்பினர்(புத்திஜீவிகள்) உள்ளிட்ட நாட்டு நலனின்பால் அக்கறையுள்ள அனைவரும் தங்களாலான சாதக நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் அக்கறையோடும் அன்போடும் வேண்டி நிற்கின்றோம்.

சென்ற ஏப்ரல் 21ன் பின் நாட்டில் அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டு நடைமுறையில் உள்ளது. அவசரகாலச் சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும். அதைவிட நாட்டில் பயங்கரவாதத் தடைச்சட்டம் பாரதூர்மானது. அரசுத் தலைவர்கள், அரச நிர்வாகிகள் இராணுவத் தரப்பினர், காவல் துறையினர் எதேச்சாரிகரமாகப் பயன்படுத்துவதனால் மக்கள் பாதிக்கப்படுகின்றனர். சிறைகளில் எல்லையற்று கைதிகளாகி வருகின்றனர். ஐ.நா. மனித உரிமைப் பேரவை, மனிதநேய அமைப்புக்கள் வற்புறுத்தியும் இப் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவில்லை. ஆகவே இச்சட்டத்தினை உடன் நீக்கவேண்டுமென இம்மாநாடு வற்புறுத்துகிறது.

பலாலி விமானப் போக்குவரத்து இந்திய அரசுடன் உடன்பட்டவாறு பிராந்திய விமான நிலையமாகத் தரமுயார்த்தி விமானப் போக்குவரத்தை விரைவாக ஆரம்பிக்க வேண்டுமென இந்திய அரசையும், இலங்கை அரசையும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கின்றோம்.

**போதைப்பொருள் ஒழிப்பு**

இலங்கையில் குறிப்பாக வடக்கு- கிழக்கு மாகாணத்தில் தீவிரமடைந்துள்ள போதைப்பொருள் விற்பனை, பாவனையை முற்றாக ஒழிக்க அரசும் காவல்துறையும் மக்கள் ஆதரவைப் பெற்று தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என இம் மாநாடு வற்புறுத்துகிறது.

இலங்கை அரசமைப்பில் 19ஏ விதியை நாட்டின் சாபக்கேடு என்றும் இவ்விதியை நீக்க வேண்டுமென்றும் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனா நாட்டுக்கு அறிவித்திருக்கிறார்;.

நாட்டின் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கையுள்ள எவரும் ஜனாதிபதியின் இக்கருத்தை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். இலங்கைத் தமிழரசுக் கட்சி இம் மாநாட்டுச் சந்தர்ப்பத்தில் இந்நாட்டு அரசியலமைப்பை ஏற்றுக் கொள்ள முடியாது விட்டாலும் ஒரு புது அரசமைப்பை உருவாக்குவதற்கு பாராளுமன்றம் ஏகமனதான தீர்மானத்தை எடுப்பதாலும் 19ஏ அரசமைப்பு விதியை மேலும் மேம்படுத்தி புதிய அரசியலமைப்பை உருவாக்குவது தான் சிறப்பானது என்று நம்புகிறோம்.

எனவே ஜனாதிபதி 19ஏ நாட்டின் சாபக்கேடு என்றும், நீக்க வேண்டுமென்றால் அதனை நாம் எதிர்க்கின்றோம், நிராகரிக்கின்றோம்.

19ஏ அரசியல் திருத்தத்தைப் பாதுகாக்க அனைத்து ஜனநாயக சக்திகளையும் அணிதிரட்டிப் போராட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என கருதுகின்றோம் என்றவாறு அந்தத் தீர்மானங்கள் அமைந்துள்ளன. (21,105)

# சேவை நலன் பாராட்டு வாழ்த்துக்கள்

## சின்னத்துரை சிவகாந்தன் (SLTS 1)

### பிரதீபா பிரபா விருது - 2016

**யாழ்ப்பாணக் கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி**



பிறரை வாழ வைக்க பலர் வழிகாட்டும் தொழில்கள் பலபல. பரம்பரையாகப் பயின்றும். திறம்பட முயன்றும் தேடும் தொழில்கள் தெய்வம் தான். தொழில் செய்து தெய்வங்களாகப் போற்றப்படுபவர்கள் ஆசிரியர்கள். பண்பும். பணிவும். அன்பும் கொண்டு அறியாமையை அகற்றி நல்லறிவைப் பெற்ற நன்மாணாக்கர்கள் ஆசிரியர்களை நடமாடும் தெய்வங்களாகப் போற்று கின்றனர். குனிந்து குருபாதம் தொட்டு கும்பிட்டு குழைந்துருகும் மாணவர்களை தனது சிறந்த சேவையால் நல்வழிப்படுத்தியவர். சின்னத்துரை சிவகாந்தன் அவர்கள் யா/ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயத்திலும். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் கற்பித்து பணி நிறைவு செய்து ஓய்வு பெறும் சின்னத்துரை சிவகாந்தன் அவர்களின் ஓய்வுக் காலமும் சிறப்புற்று பல்லாண்டு காலம் வாழ இறையருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.


**பத்மநாதன் சசிகுமார்**
**உதவிக்கல்விப் பணிப்பாளர்,**
**ஆரம்பக் கல்வி,**
**யாழ் வலயம்.**

**கல்லூரி முதல்வரின் வாழ்த்துச் செய்தி**



சின்னத்துரை சிவகாந்தன் அவர்கள் யாழ் மத்திய கல்லூரி ஆரம்பப்பிரிவில் 21 வருடங்கள் சேவையாற்றி இன்றுடன் சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்றார். அவரை வாழ்த்தி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். சி.சிவகாந்தன் அவர்கள் ஆரம்பப்பிரிவில் நிர்வாகத்திற்கு வலதுகையாகத் தொழிற்பட்டவர். பொறுமை. பொறுப்புணர்ச்சி. உத்வேகம். கடமையுணர்வு போன்ற நல்ல பண்புகளைக் கொண்டவர். பிள்ளைகளை அன்போடும் ஆதரவோடும் அரவணைத்து கல்வி புகட்டியவர். தன்னை முதன்மைப்படுத்தாது ஆரவாரமின்றி அமைதியாக தனது முனைப்பான சேவையை மிகச் சிறப்பாக வழங்கியமைக்காக தேசிய ரீதியில் அதியுயர் விருதான "குரு பிரதீபா பிரபா" விருதினை பெற்றுக் கொண்டவர். இன்று தனது சேவையில் நிறைவு காணுகின்றார். இவரது சேவை மத்தியின் சமூகத்தில் என்றென்றும் பசுமரத்தாணி போல பதிந்திருக்கும். தனது ஓய்வுக்காலத்தில் சகல நலன்களையும் பெற்று சுற்றம் சூழ பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றேன்.

**சி.க.எழில்வேந்தன்**
**அதிபர்**
**யாழ் மத்திய கல்லூரி.**





**சேவை விவரம்**

யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம் (26.03.1990 - 31.08.1998)
யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி (01.09.1998 - இன்று வரை)

**கோட்டக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி**



சின்னத்துரை சிவகாந்தன் அவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள முன்னணித் தேசியப் பாடசாலைகளில் ஒன்றான யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக ஆரம்பப் பிரிவு ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளார். இவர் ஓர் அனுபவமும் திறமையும் வாய்ந்த ஆசிரியர் (Veteran teacher) ஆவார். இவர் தன்னுடைய சேவைக் காலத்தில் பாடசாலையின் ஆரம்பக் கல்வித்துறைக்கு பெரும் பங்காற்றி மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் முன்னின்று செயற்பட்டமை யாவரும் அறிந்ததே.
இவரது நற் சேவ்வயை பெரிதும் பாராட்டுவதுடன் இவரது ஓய்வுக் காலம் சிறக்க எல்லாம் வல்ல இறையருளை வேண்டி நிற்கின்றேன்.

**சி.தேவகுமாரன்**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர்**
**கோட்டக் கல்வி அலுவலகம்,**
**யாழ்ப்பாணம்.**

**ஆசிரியர் வட்டத் தலைவரின் வாழ்த்துச் செய்தி**


நாடுபூராகவும் நன்மாணக்கர்களை உருவாக்கும் நடமாடும் தெய்வங்களே ஆசிரியர்கள். இப் புனிதமான தொழிலை 1998 ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆரம்பப்பிரிவு ஆசிரியராக பணியாற்றிய சின்னத்துரை சிவகாந்தன் அவர்களை ஆசிரியர் வட்டம் சார்பில் வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன். எமது கல்லூரியில் இரண்டு தசாப்தங்களாக மாணவர்களுக்கு சிறந்த ஆசானாக இருந்து கற்பித்து அவர்களின் பெறுபேற்றை உயர்த்தி அவர்களின் வளர்ச்சியிலும். விருத்தியிலும் வித்திட்டவர் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. பல வெற்றியாளர் களை உருவாக்கி கல்லூரிக்கு பெருமை சேர்த்தவர் ஆவார். சிறியவர் முதல் பெரியவர் வரை எல்லோ ருடனும் அன்பாகவும். பண்பாகவும். மென்மையான பேச்சாலும் ஆலோசனையாலும் அனைவரது உள்ளங்களில் இடம் பிடித்தவர் இவர். "சேவையின் முடிவு ஓய்வு " என்பது உலக நியதி. அந்த வகையில் தனது சேவைக் காலத்தில் சிறப்புறப் பணி யாற்றி ஓய்வு பெறும் இவரது ஓய்வுக் காலம் மிகவும் சிறப்பாக அமைய இறைவனை வேண்டுகின்றோம்.

**ச.திலீபன்**
**தலைவர்,**
**ஆசிரியர் வட்டம்,**
**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.**

(CS)26334)(14.17)

**ஆசிரியர் வட்டம் - யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.**

# நீங்காத நினைவலைகளில் பத்து ஆண்டுகள் .....



## அமரர் சுப்பிரமணியம் நாகராஜா

**(Retired MSO Jaffna Post Office)**

திதி:- சதுர்த்தசி (01.07.2019) திங்கட்கிழமை



ஆயிரம் சொந்தங்கள்
அணைத்திட இருந்தாலும்
அப்பா
உங்களைப் போன்று காத்திட
யாரும் இல்லை இவ் உலகில்...
நீங்கள்
எம்மை விட்டுப் பிரிந்து பல்லாண்டு
சென்றிடினும் ஆறவில்லை எம் துயர்
**என்றும் உங்கள் நினைவுடன்**
**ஆத்மா சாந்தியடையப்**
**பிரார்த்திக்கின்றோம்.**

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காக நம் குடும்பத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து அனைவரது வாழ்வினையும் பிரகாசிக்கச் செய்த அமரர் சுப்பிரமணியம் நாகராஜா அவர்களது ஆத்ம சாந்திக்காக இன்று (01.07.2019) திங்கட்கிழமை கைதடி வீரகத்திப் பிள்ளையார் சிவன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று தெல்லிப்பழை மகளிர் இல்லம், கோண்டாவில் சிவபூமி சிறுவர் இல்லம், கிளிநொச்சி சிவபூமி சிறுவர் இல்லம், சிவபூமி முதியோர் இல்லம், ஆகிய பராமரிப்பு நிலையங்களிலுள்ள சிறுவர்கள், முதியோர்களுக்கு உணவு உபசாரமும், 05.07.2019 வெள்ளிக்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்திலும், 07.07.2019 ஞாயிற்றுக்கிழமை கீரிமலை அன்னதான மடத்திலும் அன்னதான நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

மலர்வு 18.07.1930 | உதிர்வு 22.06.2009

**குடும்பத்தினர் சார்பாக**
**மகன் - நாகராஜா விஜயகுமார் - சுவிஸ்.**

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
09.08.1946

மறைவு
01.06.2019

வையத்துள் நாங்கள் வாழ்வாங்கு வாழ
வழிகாட்டிய எங்கள் அப்பாவே - நீங்கள்
வானுறையும் தெய்வமாகி - நாள்கள்
முப்பத்தொன்றாகி விட்டதுவே

நலமுடனே வாழ்ந்து வந்த உங்களை
சற்றும் எதிர்பாராமல் சட்டென்று இழந்துவிட்டோம்
உங்கள் மரணச் செய்தி பொய் என்று
மருத்துவம் நிரூபிக்காதா என்று
வேண்டாத தெய்வமில்லை

நீங்கள் இல்லாத எங்கள் வாழ்க்கை - இனி
எப்போதும் முழுமையானதாய் இருக்காது அப்பா
இனி இன்பத்தில் இன்முகம் காட்டவும்
துன்பத்தில் தோள் கொடுக்கவும்
இறைவனாய் எம்முடன் இருந்து
வழிகாட்ட வேண்டுகின்றோம்

சொர்க்கத்தின் வாசலில் உங்கள் மகள்
உங்களை வரவேற்க காத்திருக்கின்றாள்
சென்று வாருங்கள் அப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

அமரர்
**ஆறுரையா சண்முகரட்ணம்**

"அபூர்வவாசா"
இல. 20/5, சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

(CS 26387)(4.17)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**இராசா சத்தியநாதன் (சச்சி)**

மண்மகிழ
10.08.1952

கண்நெகிழ
11.07.2018

திதி: திரியோதசி 01.07.2019 திங்கட்கிழமை

ஆண்டு ஒன்று ஆனதோ!
ஆறவில்லை எம் துயரம்
மனம் வந்தோ பாராமல் சென்று விட்டீர்!
உங்கள் செல்வங்களை விட்டு விடை பெற்று இன்றுடன்
- ஆண்டு ஒன்று ஆகிவிட்டது!
காலனவன் அம்பு உங்கள் விருப்பம் அற்ற பயணத்தை
- விரைவாக அழைத்துவிட்டான்?
அப்பாவின் முகம் காண ஏங்கி அருமை மகன் அழுவது உங்கள்
- காதில் கேட்கவில்லையா?
அப்பா மீண்டும் எங்களிடம் வருவீர்கள் என எதிர்பார்த்து...

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


2 ஆம் குறுக்குத் தெரு,
வவுனியா.
024 222 3974

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# சிலந்தி தன் வலையில் ஏன் சிக்குவதில்லை?

ஒவ்வொரு சிலந்தியும் தனக்கே உரிதான பாணியில் பிரத்தியேக மாக வலையைப் பின்னும். இது மற்ற பூச்சிகளை தனக்கு இரையாக்க வலை பின்னும்.

சிலந்தி தன் வலையில் மற்ற பூச்சிகளை சிக்க வைக்க சில கண்ணி களை வைக்கும். இவை வலைபின்னிய சிலந்திக ளுக்கு மட்டுமே தெரியும். இதனால் இவைதான் பின் னிய வலையில் சிக்காது. ஆனால், ஒரு சிலந்தி மற்ற சிலந்தி பின்னிய வலை யில் சிக்கிக்கொள் ளக்கூ டும்.



**அறைகள் வாடகைக்குண்டு**

வளாக வீதி, திருநெல்வேலியில் அறைகள் வாடகைக்குண்டு. பெண்களுக்கு மட்டும்.

**077 112 0314**

**அலுவலக உதவியாளர் தேவை**

யாழ்நகரில் வசிக்கும்/ தொழில் புரியும் சட்டத்தரணிக்கு 35 வயதுக்கு மேற்படாத ஆண் அலுவலக உதவியாளர்/ எழுதுவினைஞர் தேவை. தமிழ் தட்டச்சு தெரிந்தவராக இருக்கவேண்டும். பின்நேரம் 5 மணிக்கு பின் தொடர்புகொள்க.

**076 030 4178**

## வடகடல் நிறுவனம்

மீன்பிடி வலை தயாரிப்பு நிறுவனம்

(தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள் குடியமர்வும் புனர்வாழ்வும், வட மாகாண அபிவிருத்தி, இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் கீழ் செயற்படும் ஒரு நிறுவனமாகும்)

### 2019/2020 ஆண்டுக்கான வழங்குநர்களை பதிவு செய்தல்

வடகடல் நிறுவனம் நிறுவனத்திற்கு பின்வரும் பொருட்களை வழங்குவதற்கு அந்நிறுவனத்தில் தம்மை பதிவு செய்துகொள்ள விரும்பும் மதிப்புமிக்க வழங்குநர்கள் / தயாரிப்பாளர்கள் / உள்ளூர் முகவர்கள் ஆகியோரிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பொருள் வழங்கல்**

- பல்வகையான நைலோன் இழை டுவைன் / நூல்.
- மீன்பிடி வலைகள் (பூர்த்தி செய்யப்பட்ட உற்பத்திகள்)
- நைலோன் கயிறு 2mm இருந்து 30mm வரை.
- PP கயிறு 2mm இருந்து 30mm வரை.
- பிணை 6 இருந்து 10 அங்குலம் வரை.
- திசைக்காட்டி 10g, 25g, 50g
- போயா 6", 7", 8", 9"
- நீலமாள் மீன்பிடிவலைகள் சகல அளவுகளில்.
- இந்தியன் மீன்பிடி வலைகள் சகல அளவுகளில்.
- தேக்கி நிறுத்தக்கூடிய நைலோன் கயிறுகள் 6ply இருந்து 90ply வரை.
- குருலோன் நூல் 6ply இருந்து 90ply வரை.
- மீன்பிடி படகுகள் (மரப்பலகை மற்றும் கண்ணாடி இழைகளிலான... சகல அளவுகளில்)
- நீளமான கட்டுமரங்கள் 10', 15' மற்றும் ஏனைய அளவுகள்.
- நீளமான தெப்பங்கள் 8', 15' மற்றும் ஏனைய அளவுகள்.
- கண்ணாடி இழைகளிலான நீளமான வள்ளம் 15', 25' மற்றும் ஏனைய அளவுகள்.
- நீளமான கடல் ஓடங்கள் 8' மற்றும் ஏனைய அளவுகள்.
- மிதவை (6", 7" bar)
- தூண்டில் (12 இலக்க அளவு)
- தூண்டில் (10 இலக்க அளவு)
- குள்ளா (16", 18")
- படகு இயந்திரம் (2.5HP, 2.6HP, 3HP, 8HP, 15HP)
- மீன்வலையை பதப்படுத்துவதற்கான நிறச்சாயங்கள் மற்றும் பிற இரசாயனங்கள்.
- வலைகளுக்கான உதிரிப்பாகங்கள்/முறுக்கும் இயந்திரங்கள்/ நிறமூட்டி இயந்திரங்கள்/ பொய்லர்
- மின்சார மற்றும் இலத்திரனியல் உருப்படிகள்.
- அச்சிடல் மற்றும் எழுதும் கருவிகள்.
- பொதியிடல் பொருட்கள் (பொலித்தீன், P.P)
- போக்குவரத்து (நாடளாவிய ரீதியில்) மூலப்பொருட்கள், முடிக்கப்பட்ட தயாரிப்புகள்.
- மீன்பிடி வலைகளை தயாரிக்கும் உபகரணங்கள்.
- கணினியல் உதிரிப்பாகங்கள்.
- அலுவலக உபகரணங்கள்.
- அலுவலக தளபாடங்கள்.
- பாதுகாப்பு சேவைகள்.
- சுகாதாரத் தெரிவு சேவைகள்.
- சிவில் கட்டிட நிர்மாணத்துறை பணிகள்.

அக்கறையுள்ள வழங்குநர்கள் 356B, 3ஆவது மாடி, காலி வீதி, கொழும்பு 03. என்ற முகவரியில் அல்லது லுணுவில வீரவிலவில் அல்லது யாழ்ப்பாணம் குருநகரில் அமைந்துள்ள தொழிற்சாலைகளில் மீளப்பெற முடியாத வைப்புத் தொகையாக ரூபா 1000.00 அல்லது 10.00 அமெரிக்க டொலர் (வெளிநாட்டு வழங்குநர்களுக்கு பொருந்தும்) செலுத்தி உரிய பதிவு படிவத்தை பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள். சம்பந்தப்பட்ட பொருட்களை வழங்குவதில் அனுபவம் உள்ள வழங்குநர்கள் மட்டுமே மேற்படி பதிவுக்கு விண்ணப்பிக்க வேண்டும். நிறுவன விவரங்களை விண்ணப்பத்துடன் இணைக்கவும்.


விண்ணப்பங்களை, பதிவுத் தபாலில் வடகடல் நிறுவனம் தலைவருக்கு 22-07-2019இல் அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"2019/2020ஆம் ஆண்டுக்கு வழங்குநர்களை பதிவு செய்தல்"** என்று குறிப்பிட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் அல்லது சேவைக்கு விண்ணப்பிப்பதானால் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி விண்ணப்பங்களை ஒரே உறைக்குள் வைக்க வேண்டும்.

வழமையாக, விலைக்குறிகள் பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கோரப்படுகின்ற போதிலும் ஏனைய வழங்குநர் களிடமிருந்தும் விலைக்குறிகளை கோரும் உரிமை வடகடல் நிறுவனத்திற்கு உண்டு.

குறிப்பாக தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ள பிரதேசங்களிலிருந்தும் வழங்குநர்களிடமிருந்து விலைக்குறிகள் பெற்றுக் கொள்ளப்படும்.

தலைவர்
வடகடல் நிறுவனம்
356B, 3ஆவது மாடி,
காலி வீதி, கொழும்பு 03

## பாராட்டி வாழ்த்துகின்றேன்



எனது ஆருயிர் நண்பனும் சாவகச்சேரி லயன்ஸ் கழக பிரதித் தலைவரும் மாவட்டத் தலைவரும் (2018/2019) சமூக சேவைக்கான சிறப்புப் பட்டங்களான சாமசிறி, தேசமான்ய, தேசகீர்த்தி, தேசபந்து போன்ற பட்டங்களைப் பெற்றவரும் சாவகச்சேரி நவீனசந்தை அபிஷா ரெக்ஸ் உரிமையாளரும், பிரபல சமூக சேவையாளருமான

**இரத்தினம் கோகிலன்**

அவர்கள் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி உயர்திரு. ஜெ.கஜநிதியாலன் அவர்கள் முன்னிலையில் கடந்த 27.06.2019 அன்று சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமையையிட்டு மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றேன்.

**கு.சர்வா**
ஐ.தே.கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரும்
சாவகச்சேரி நகராட்சி மன்ற உறுப்பினரும்

**ராசி அதிர்ஷ்டம்**

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
| --- | --- | --- |
| 30.06.2019 | 2550 | ஊதா |

கும்பம்
வெற்றி இலக்கங்கள்: 16 18 20 28
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,445,454 /=

02.07.2019ம் திகதி செவ்வாய்க் கிழமை சிகப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

**SUPER BALL**

சீட்டிழுப்பு வாரம் 996
சீட்டிழுப்பு திகதி 2019.06.29 சனிக்கிழமை

T 23 35 69 71

தொ.பே: 0112 333 546747 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

ஊதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**கோடீபதி ஷனிதா**

சீட்டிழுப்பு வாரம்: 461 சீட்டிழுப்பு திகதி: 2019.06.28
வர்ணம்: செம்மஞ்சள் வெள்ளிக்கிழமை

J 01 18 58 72

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

பச்சை, இளஞ்சிவப்பு, செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் முறையே ஞாயிற்றுக்கிழமை, செவ்வாய்க்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**அத கோடிபதி**


சீட்டிழுப்பு வாரம்: 655
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.06.30
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 65,468,580/-

வெற்றி இலக்கங்கள்: 11 44 52 63 K

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது நேரடி அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## மரண அறிவித்தல்

### இளையதம்பி முத்துலிங்கம் (ஆச்சாரியார்)



யாழ். திருநெல்வேலியூர் ஆச்சாரியார் இளையதம்பி முத்துலிங்கம் அவர்கள் நேற்று (30.06.2019) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கமலாம்பிகையின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் ஞானம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் மனோகர் (ஜேர்மனி), பாஸ்கர் (இலண்டன்), யசோதா (கனடா), சேகர் (இலண்டன்), சங்கர், சுபாகர் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான செல்லையா (ஆசிரியர்), சிவபாக்கியம் மற்றும் இரத்தினசிங்கம் (கனடா), பழனித்துரை (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.


**அம்மன்வீதி, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி.**

**தகவல்: குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்கள்

### தங்கவடிவேல் உதயகுமார்.

(ஓய்வுபெற்ற மின்சாரசபை சாரதி)



பிறப்பு 25.06.1960 இறப்பு 30.06.2019

நேற்று 30.06.2019 சிவபதமடைந்த குடும்பத்தலைவர் தங்கவடிவேல் உதயகுமார் அவர்களின் இறுதிக்கிரியைகள் 01.07.2019 திங்கட்கிழமை பி.ப 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப4.00 மணியளவில் பூதவுடல் எள்ளங்குளம் இந்துமயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

0775027554 தகவல்: குடும்பத்தினர்

### வீரகத்திப்பிள்ளை குகமலர்



கேணிக்குள வீதி, இருபாலை கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்திப்பிள்ளை குகமலர் நேற்று (30.06.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளையின் பாசமிகு மனைவியும் மனோன்மணி (கனடா), பராசக்தி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பத்மலோக, ஜோதிவர்மன், வரதன், சுமதி, குகதாசன், இந்துமதி மற்றும் வசந்தன், ரவிச்சந்திரன்,(பாவு), விக்னேஸ்வரன் (இந்தியா), மலர்மதி, தேவராசா ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2019) திங்கட்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 01.00 மணியளவில் இருபாலை கிழக்கு கோப்பாய் தெற்கு நொச்சிகாடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தேவராசா(மகன்)

## நாடாளுமன்றின்...

கூற வேண்டுமே தவிர அதிகாரிகள் இல்லை எனவும் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடாத்துவதற்கு நாடாளுமன்றம், அமைச்சரவை ஆகியன இணைந்து நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதுள்ள நிலைமையின் அடிப்படையில், மாகாண சபை தேர்தல் எதிர்வரும் ஒகஸ்ட் மாத இறுதியில் அல்லது செப்ரெம்பர் மாதம் முதல் வாரத்தில் நடைபெறும் என தேர்தல்கள் ஆணைக்குழு நம்பிக்கை வெளியிட்டுள்ளது. அரச தலைவர் தேர்தலானது, நவம்பர் மாதத்தின் இறுதி வாரங்களில் அல்லது டிசெம்பர் மாதம் முதல் வாரங்களில் நடத்தப்பட வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மாகாண சபை தேர்தலை முதலில் நடத்தினால் அரச தலைவர் தேர்தலுக்கு பாதிப்பு ஏற்படும் என சிலர் கருத்துக்களை முன்வைத்தாலும், அவ்வாறு எந்தவொரு தடைகளும் ஏற்படாது என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (எ)

## மரண அறிவித்தல்



பிறப்பு 06 . 01 . 1934 இறப்பு 29 . 06 . 2019

### செல்லப்பா அமிர்தலிங்கம்

B.Sc (LOND)

(இராமநாதன் கல்லூரி பௌதீகவியல் இளைப்பாறிய ஆசிரியர், இளைப்பாறிய உப அதிபர், உரும்பிராய் இந்துக் கல்லூரி)

பூநகரி நல்லூரைப் பிறப்பிடமாகவும், கந்தர் மடம், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா அமிர்தலிங்கம் 29.06.2019 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆனந்தர் - செல்லம்மா தம்பதியரின் மருமகனும், மீனலோஜனியின் அன்புக் கணவரும், லதா, அருணன், கீதா ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற பிரபாகரன் மற்றும் கேதாரநாயகி, ஜெயலிங்கம் ஆகியோரின் மாமனும், நிவேதிதா, தினேஷ்கரன், விசாகசரண், கௌசிகன் ஆகியோரின் பாட்டனாரும், இந்திராணி, இந்திரசேனன், இரவீந்திரன், நகுலேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (02.07.2019) செவ்வாய்க்கிழமை பொரளை ஜயரட்ண பார்லரில் 8.30a.m - 7.00pm வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை மறுதினம் (03.07.2019) புதன்கிழமை 1.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பின்னர் பொரளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகள் - லதா பிரபாகரன்
077 9915147

## அலுகோசு...

டன் , எந்த நேரத்திலும் தூக்கிலுடும் பணியை நிறைவேற்ற அவர்கள் தயாராக உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இறுதிச் சுற்றுக்கு தேர்வு செய்யப்பட்ட மொத்தம் 26 விண்ணப்பதாரிகளின் தகுதி மற்றும் அவர்களின் தகுதி புள்ளிவிவரங்கள் அரச தலைவர் செயலகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து பொருத்தமான இரண்டு பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இருவரும் ஏற்கனவே இரண்டு வார அடிப்படை பயிற்சிக்கு உட்பட்டுள்ளதுடன் ,மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று அறியப்படுகிறது. ஆள்சேர்ப்பு செய்யப்பட்ட இருவரின் அடையாளத்தை எந்த ஊடகத்திற்கும் வெளிப்படுத்தாதிருக்க சிறை அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர். (எ)

## கிளிநொச்சியில்...

போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில் தமக்குத் தீர்வு எதுவும் வழங்கப்படவில்லை என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

தமது கோரிக்கைக்கு தீர்வு வழங்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினார்கள். (எ)

## மைத்திரியின்...

அங்கு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரசமைப்பில் தூக்குத் தண்டனை தொடர்பான சட்ட ஏற்பாடுகள் காணப்பட்டாலும் வரலாற்றில் எந்த தலைவர்களும் அதை நடைமுறைப்படுத்தவில்லை. 2016ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை தூக்குத் தண்டனையை தடைசெய்வதற்கான யோசனையை முன்வைத்தபோது அதற்கு இலங்கையும் இணக்கம் தெரிவித்துள்ளது. அந்த யோசனைக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் நானும் அன்று ஆதரவளித்திருந்தோம். இந்த காரணத்துக்காகவும் தூக்குத் தண்டனையை நடைமுறைப்படுத்த ஆதரவு வழங்க முடியாது - என்றார். (எ)

## விடுகதைகள்

1. படபடக்கும், பளபளக்கும், பண்டிகை வந்தால் வானில் பறக்கும். அது என்ன ?
2. ஓர் அரண்மனையில் முப்பத்திரெண்டு காவலர்கள் அது என்ன?
3. உணவை எடுப்பான் ஆனால் உண்ணமாட்டான் அவன் யார்?
4. காலையில் வந்த விருந்தாளியை மாலையில் காணவில்லை. அது என்ன?
5. கடல் நீரில் வளர்ந்து , மழை நீரில் மடிவது என்ன ?
6. ஓயாமல் இரையும் இயந்திரமல்ல, உருண்டோடிவரும் பந்து அல்ல அது என்ன?
7. காலையிலும் மாலையிலும் நெட்டை மதியம் குட்டை நான் யார்?
8. இரு கொம்புகள் உண்டு மாடு அல்ல, வேகமாய் ஓடும் மான் அல்ல, கால்கள் உண்டு மனிதனல்ல. - அது என்ன?

1.பட்டாசு 2. பற்கள் 3. அகப்பை
4. சூரியன் 5. உப்பு 6. கடல்
7. நிழல் 8. சைக்கிள்

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

### அமரர் முருகையா முகுந்தராஜ்



தோற்றம் 12.07.1986 மறைவு 19.05.2019

கடந்த 19.05.2019 இறைபதமடைந்த எமது குடும்பத்தின் அன்புச் செல்வனின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து ஆறுதல் கூறியும், பல வழிகளில் உதவிகள் புரிந்தும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலுமிருந்தும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் நாளை (02.07.2019 ) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

இல.30, பரியாரியார் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர். 077 675 8524

advt@uthayan.com, 021 493 1111

## மரண அறிவித்தல்

### கந்தையா பற்குணசிவசோதி (சோதி அண்ணை)



சிவன் கோவிலடி புத்தூரைப்பிறப்பிடமாகவும் கோவிற்கடவை, துன்னாலை மத்தி கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பற்குணசிவசோதி 29.06.2019 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான புத்தூரைச் சேர்ந்த கந்தையா உபாத்தியார் - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை செல்லையா - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் தவமலரின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான சிவகாமிப்பிள்ளை, சின்னம்மா, கண்மணி , இராசலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் வெற்றிவேலு, விக்கினராசா, விநாயகமூர்த்தி , கணேசமூர்த்தி றோஸ்மலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் செல்வமணி, செல்வராசா ஆகியோரின் சகலனும் தாணு, விமலன், நிறஞ்சன், நிறோஜா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2019) திங்கட்கிழமை மு.ப 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேரூண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோவிற்கடவை, துன்னாலை மத்தி, கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# பிரபாகரனின் தீர்க்கதரிசனம்

ஆயுதம்ஏந்தியவர்கள்தமிழர்கள்சார்பில்செயற்படாமல் இருக்கின்ற ஒரு சூழ்நிலையில் அதிகாரப் பகிர்வு முயற்சிகள் பின்நகர்த்தப்படும் அல்லது இல்லாமல் செய்யப்படும்நிலைஏற்பட்டுள்ளது. ஆயுதம்ஏந்தினால்தான் அரசியல்தீர்வு தொடர்பாக கொழும்பு அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கையைஎடுக்கலாம்என்றும், ஆயுதபலம்இல்லாது விட்டால் அவற்றைக் கைவிடலாம் என்றும் கொழும்பு ஆட்சி நினைக்குமானால் அது ஒரு தவறான நிலைப்பாடு.

இவ்வாறுதெரிவித்துள்ளார்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன்.

தற்போதைய அரசின் அரசியல் நிலைப்பாடு குறித்து தமிழரசுக் க்ட்சியின் பேராளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார். யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று மாநாடு நடைபெற்றது.

விடுதலைப்புலிகள்அழிக்கப்படுவதற்குமுன்னர்அதிகாரப் பகிர்வு தொடர்பில் முன்னேற்றம் காண எல்லா ஆட்சியாளர்களுமேமுயற்சிகளைஎடுத்தார்கள்என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கும் சம்பந்தன், புலிகள் இல்லாத நிலையில் அந்த முயற்சிகளில் இருந்து ஆட்சியாளர்கள் பின்வாங்குகின்றார்கள்அல்லது அந்த முயற்சியில்இருந்தே விலகிக் கொள்கிறார்கள் என்றும் விளக்கியிருக்கிறார்.

2015ஆம் ஆண்டு தை மாதம் மைத்திரி – ரணில் புதிய அரசை ஆட்சியில் அமர வைத்தது முதல் கடந்த சுமார் நான்கரைஆண்டுகளாகஒருதீர்வைப்பெற்றுக்கொள்வதற்காக ஆட்சியாளர்களுடனும் இந்தியாவுடனும் பன்னாட்டுச் சமூகத்துடனும் மிக மிக நெருங்கிச் செயற்பட்டு வந்தவர் இரா.சம்பந்தன். இந்த முயற்சிகளுக்காக அவர்தன்னாலான மட்டும் கீழிறங்கி வந்தார். இந்த முயற்சியின் பயனாக ஒரு கட்டத்தில் சொந்த மக்கள் கூட்டத்தையே பகைத்துக்கொள்ளும் நிலை ஏற்பட்டபோதும்கூட தளராத நம்பிக்கையோடு அவர் முயற்சித்துக் கொண்டேயிருந்தார்.

அதே சம்பந்தர்தான் இப்போது, புலிகள் இல்லை என்பதற்காகஏமாற்றுவதுதவறு என்று ஆட்சியாளர்களைப் பார்த்துக்கேட்கின்றார். அதாவதுசிங்களஆட்சியாளர்களிடம் இருந்துவன்வலுவிற்குக்கிடைத்தமதிப்பும்மரியாதையும் மென் வலுவுக்குக் கிடைக்கவில்லை என்பதையே அவர் நாசூக்காகஇப்படி மெல்லச்சொல்கிறார். தமது ஆதரவோடு கொண்டு வரப்பட்ட மைத்திரி – ரணில் ஆட்சியும் தம்மை ஏமாற்றிவிட்டது என்பதையே அவர்இப்படிச்சொல்கிறார்.

சிங்களஆட்சியாளர்களின்இந்தப்பண்பைத்துல்லியமாகக் கணக்கிட்டு வெளிப்படுத்தியும் செயற்பட்டும் வந்தவர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன். சிங்களவர்கள் தாமாக முன்வந்து ஒருபோதும் தமிழர்களுக்குத் தீர்வைத் தரப்போவதில்லை என்பதை அவர் திட்டவட்டமாக நம்பினார். அதன்அடிப்படையிலேயே அவர்செயற்பட்டும் வந்தார். இதற்காக அவர் அதிகமாக விமர்சிக்கப்பட்டிருக்கிறார்.

விடுதலைப்புலிகளுக்கும்கொழும்பு ஆட்சியாளர்களுக்கும் இடையில்நடக்கும்எல்லாப்பேச்சுக்களையும்விடுதலைப் புலிகளே உடைத்துக்கொண்டார்கள், மீண்டும் போரைத் தொடக்கினார்கள் என்றும் குற்றஞ்சாட்டுபவர்கள் பலர் உண்டு. அவர்களுக்கு எல்லாம் காலம் தந்திருக்கும் பதில்தான்இன்றைய அரசியல்சூழல். அதனையேசம்பந்தர் தனது பேச்சில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அதேநேரம் ஆப்பிழுத்த குரங்கின் கதையாக இன்றைய ஆட்சியாளர்களை இப்படிக் கடுமையாக விமர்சனம் செய்கின்றபோதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே அதனைத் தாங்கிப் பிடித்து வைத்திருக்கின்றது என்பதும் அரசியல் முரணே சம்பந்தரின் கருத்து தேர்தலை இலக்கு வைத்ததாக இல்லாமல் மக்கள் நலனை மையப்படுத்தியதாக இருக்கும் என்று நம்புவோம்!




# நீதிக்கான போராட்டத்தில் எவருக்கும் இடம் உள்ளது

■ இந்துமதி

கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துவதற்கு அந்தப் பகுதி முஸ்லிம்கள் எதிர்ப்புத் தெரிவித்து வரும் நிலையில் பௌத்த தேரர்கள் தமது ஆதரவைத் தெரிவித்திருப்பதை ஆச்சரியத்துடன் பார்க்க முடிகின்றது. கடந்த காலங்களில் தமிழர்கள் ஏதாவது கோரிக்கை விடுத்தால் அதற்கு எதிராகக் கிழம்பி விடுவது பௌத்த தேரர்களின் வழக்கமாகும். அதையொரு சம்பிரதாயமாகவும் அவர்கள் கருதினர் என்று கொள்ளமுடிந்தது. கல்முனையில் அந்தச் சரித்திரம் மாறியுள்ளதாகக் கருதமுடிகிறது.

**முஸ்லிம்களின் எதிர்ப்பு எத்தகைய வகையறா?**

கல்முனை வடக்கில் உள்ள தமிழ் மக்கள் தமக்கென முழுமையான அதிகாரங்களைக் கொண்ட பிரதேச செயலகம் அமைக்கப்படாததால் நீண்ட காலமாகவே இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். தற்போது உள்ள அலுவலகம் பெயருக்கு மட்டுமே இயங்குவதால் அதனால் தமது தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலையில் அந்த மக்கள் உள்ளனர். அதனால் மேற்படி அலுவலகத்தைத் தரமுயர்த்துமாறு அவர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தனர். ஆனால் உள்ளூர் முஸ்லிம்கள் அதற்குக் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.

இந்தியா - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒன்றாக இணைக்கப்பட்டிருந்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இன்று பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றை மீண்டும் இணைப்பதில் முஸ்லிம் மக்களுக்கு விருப்பமில்லை. இவ்வாறு நடந்துவிட்டால் கிழக்கில் தமது பிடி தளர்ந்துவிடும் என அவர்கள் அஞ்சுகின்றனர். கிழக்கு மாகாண சபையின் அதிகாரத்தை இழப்பதற்கும் அவர்கள் தயாராகவில்லை என்பதும் வெளிப்படையாகத் தெரிகின்றது. முஸ்லிம்களும் தாய் மொழியைத் தமிழாகக் கொண்டுள்ளதால் தமிழர்களுக்கும் அவர்களுக்குமிடையில் நெருங்கிய தொடர்பு காணப்பட்டது. இவர்கள் இனத்தால் வேறுபட்டிருந்தாலும் மொழி யில் ஒன்றிணைந்தமையே இதற்கான காரணமாகும். ஆனால் காலப்போக்கில் இந்தப் பிணைப்பு வலுவிழந்து காணப்படுகிறது. தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தின் போது இது தெளிவாகத் தெரிந்தது.

> கல்முனை வடக்கில் உள்ள தமிழ் மக்கள் தமக்கென முழுமையான அதிகாரங்களைக் கொண்ட பிரதேச செயலகம் அமைக்கப்படாததால் நீண்டகாலமாகவே இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். தற்போது உள்ள அலுவலகம் பெயருக்கு மட்டுமே இயங்குவதால் அதனால் தமது தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலையில் அந்த மக்க்ள் உள்ளனர். அதனால் மேற்படி அலுவலகத்தைத் தரமுயர்த்துமாறு அவர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தனர். ஆனால் உள்ளூர் முஸ்லிம்கள் அதற்குக் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.

புலிகளின் தலைவர் பிரபாகரன் காரணமின்மையால் எதையும் செய்ததில்லை. யாழ்ப்பாணத்தை விட்டு முஸ்லிம்களை வெளியேற்றிமைக்கும் வலுவானதொரு காரணம் இருந்திருக்க வேண்டும். கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம் 30 ஆண்டுகளுக்கு முற்பட்டது. ஆட்சியாளர்களின் பலவீனம் காரணமாக இந்தப் பிரச்சினை தீர்வு காணப்படாமல் இழுபட்டு நிற்கின்றது. இன்று பொத்த தேரர்களே தமிழர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் அளவுக்கு நிலமை மாறியுள்ளது.

**தேரர்களில் மாற்றம் மிகமிக அவசியமே**

இந்து மதத்தில் இருந்து தான் பௌத்தம் பிறந்தது. பௌத்த மதத்தை நிறுவிய கௌதம புத்தர் சித்தர்கள் என்ற இயற்பெயரைக் கொண்டிருந்த ஒரு இந்துவாக அவதரித்தவர் என்பதை நாம் மறந்து விட முடியாது. இதைவிட வேறு சில ஒற்றுமைகளும் பௌத்தர்களும்கும் இந்துக்களுக்குமிடையே காணப்படுகின்றன. ஆனால் மொழிகளால் ஏற்பட்ட பேதம் சகலதையும் மூடிமறைத்து விட்டது. தமிழர்கின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இனி மேலும் பௌத்த தேரர்கள் தடையாக இருக்கக் கூடாது.

தமிழர்களை அரவணைத்துச் செல்வதன் ஊடாக இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய முடியுமென்பதை அவர்கள் இனியாவது உணர்ந்து கொள்ள வேண்டும்.

**முஸ்லிம் இனவாதிகளின் கடும்போக்கு ஆபத்தானது**

இதேவேளை பௌத்த பிக்குகளை அழைத்து கல்முனையில் தமிழர்கள் போராட்டத்தை முன்னெடுக்கின்றனர் என்று இனவாத நோக்கம் கொண்ட சில உள்ளூர் அரசியல் வாதிகள் மக்கள் மத்தியில் பரப்புரை செய்து வருகின்றனர். தாம் பேசுவது தமிழ் அல்லவென்றும் அரபுத் தமிழயே பேசுகின்றோம் என்றும் கூறுகின்ற னர். மேலும் தமிழர்கள் நடத்திய ஆயுதப் போராட்டத்தை யும் கொச்சைப்படுத்துகின்றனர். அவர்கள் தமிழர்களுடன் இணைந்து வாழப் போவதுமில்லையென்பது இதன் மூலமாகத் தெரியவருகின்றது. தமிழர்களை இவர்கள் எதிரிகளாகவே பாக்கின்றனர்என்பதும் தெளிவாகத் தெரிகின்றது.

தமிழ்த் தலைவர்கள் முஸ், லிம் மக்களையும் அரவணைத்துச் செல்ல வேண்டும் என்றுதான் இப்போதும் கூறிவருவதை அவதானிக்க முடிகிறது. அத்தகையபோக்கு முஸ்லிம் தலைமைகளிடமும் உருவாக வேண்டும். அரசின் சார்பில் வழங்கப்பட்ட வாக்குரிமையை ஏற்றுக்கொள்ளாத போராட்டக்காரர்கள் ஞானசாரதேரரின் வாக்குறுதியை ஏற்றுக்கொண்டமைபெரும் திருப்பமாகவே அமைந்துள்ளது. நீதிக்காகப் போராடும்போது அதற்கு ஆதரவு தருபவர்களை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். நிர்க்கதியான நிலையில் உள்ள தமிழர்கள் தமக்கு ஆதரவுக்கரம் நீட்டியவர்களைப் புற மொதுக்குதல் நல்லதல்ல. இதுவோரு நீதிக்கான போராட்டம் இதில் எவரும் இணைந்துகொள்ள முடியும்.



## தந்தை செல்வா நினைவிடத்தில் தமிழ் அரசுக் கட்சியினர் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா நினைவிடத்தில் நேற்று இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் அஞ்சலி செலுத்தினர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 16ஆவது தேசிய மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நேற்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராஜா தலைமையில் நடைபெற்றது.

மாநாடு ஆரம்பமாவதற்கு முன்னர் தந்தை செல்வா நினை விடத்துக்குச் சென்று தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், கட்சி உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் அதில் கலந்து கொண்டனர்.

(எ-7)

# தமிழ் அரசுக் கட்சியுடைய பேராளர் மாநாடு நேற்று

## *24 தீர்மானங்கள் நிறைவேற்றம்*

*யாழ்ப்பாணம், ஜூலை 1*

*தமிழரசுக் கட்சியின் 16ஆவது தேசிய மாநாட்டின் போராளர் மாநாடு நேற்றுக் கட்சித் தலைவர் மாவை சோ.சேனாதிராசா தலைமையில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.*

மாநாட்டில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான புளொட் அமைப்பின் தலைவர் த. சித்தார்த்தன், ரொலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், ஈ.சரவணபவன், சி.சிறீதரன், சாந்தி சிறிஸ்கந்தராஜா, சிவமோகன், துரைரட்ணசிங்கம், சீனித்தம்பி யோகேஸ்வரன், கோடீஸ்வரன், சிறிநேசன் ஆகியோரும் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலர்கள், முக்கியஸ்தர்கள் எனப் பலர் இந்த மாநாட்டில் பங்கு கொண்டனர்.

வரவேற்புரையை இணைப் பொருளாளர்களில் ஒருவரான பெ.கனக சபாபதி வழங்கினார். அதன்பின்னர் கட்சித் தலைவர் உரை. புளொட் அமைப்பின் தலைவர் உரை என்பன நடைபெற்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் உரையின் பின்னர் மாநாட்டில் 24 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தீர்மானங்களை கட்சியின் தலைவர் வாசித்து ஆரம்பித்து வைக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது தீர்மானங்களை வைத்தனர். மாநாட்டில் 24 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(எ-105)

## 1,114 கிலோ பீடி இலைகள் மன்னாரில் கண்டுபிடிப்பு



மன்னார், ஜூலை 1


மன்னார், தலைமன்னார் பிரதான வீதியில் ஓலைத்தொடுவாய் காட்டுப்பகுதியிலும், நடுக்குடா கடற்கரைப் பகுதியில் இருந்தும் ஆயிரத்து 114 கிலோ 9 கிராம் பீடி சுற்றும் இலைகள் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டு ள்ளன என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

ஓலைத்தொடுவாயில் உள்ள காட்டுப் பகுதிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 126.5 கிலோகிராம் பீடி சுற்றும் இலைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்றும், நடுக்குடாக் கடற்கரைப் பிரதேசத்தில் கடற்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் 988.4 கிலோ பீடி சுற்றும் இலைகள் மீட்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்ப ட்டது.


கைப்பற்றப்பட்ட பீடி சுற்றும் இலைகள் யாழ்ப்பாணம் சுங்க அலுவலகத்தில் மேலதிக நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

(எ-56)













# நீராவிப்பிட்டி பிள்ளையாரில் சனியன்று தமிழர் திருவிழா

*முல்லைத்தீவு, ஜூலை 1*

*முல்லைத்தீவு செம்மலை நீராவிப்பிட்டி பிள்ளையார் ஆலயத்தில் எதிர்வரும் சனிக்கிழமை தமிழர் திருவிழா கோலாகலமாக இடம்பெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

கொக்குத்தொடுவாய் கோட்டைக் கேணி பிள்ளையார் ஆலயத்தில் இருந்து நீராவிப்பிட்டி பிள்ளையார் ஆலயத்துக்கு மட்பாண்டம் எடுத்துவருதலும், 108 பானைகளில் பொங்கலும் எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை ஆலய அறங்காவல் குழுவினரும், ஆர்வலர்களும் மேற்கொண்டு வருகின்றனர். மிகவும் கோலாகலமாக இந்தத் திருவிழா இடம்பெறவுள்ளது என்று ஏற்பாட்டார்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவில் பழைமையவாய்ந்த இந்து ஆலயங்களில் ஒன்றாக நீராவிப்பிட்டி பிள்ளையார் ஆலயம் காணப்படுகிறது. போருக்குப் பின்னர் ஆலய வளாகத்தில் பிக்கு ஒருவர் விகாரை ஒன்றை அமைக்க கட்டுமானங்களை ஆரம்பித்தார். அது தொடர்பான வழக்கு முல்லைத்தீவு நீதிவான் மன்றில் இடம்பெற்று வருகிறது. பிள்ளையார் ஆலயத்தை ஆக்கிரமிக்கும் நோக்கில் கடந்த காலங்களில் தென்னிலங்கையில் இருந்து வந்தோர் பல முயற்சிகளில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-21)

## தொடருந்துகளின் நிறுத்தத்தால் தபால் சேவையில் பாதிப்பில்லை

*யாழ். தலைமைத் தபாலக வட்டாரம் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜூலை 1

தொடருந்து ஊழியர்கள் மேற்கொண்ட வேலைநிறுத்தப் போராட்டத்தால் வடக்கு மாகாணத்துக்கான தபால் சேவைகளில் பாதிப்புக்கள் ஏற்படவில்லை என்று யாழ். தலைமைத் தபாலக வட்டாரம் தெரிவித்துள்ளது.

தபால் தொடருந்து ஓடாததை அடுத்து வடக்குக்கான தபால்கள் யர்வும் வாகனங்கள் மூலம் எடுத்து வரப்பட்டன என்று யாழ்ப்பாணம் தலைமைத் தபாலகம் மேலும் தெரிவித்தது. (ம-17)



## கெற்பேலி கிராமம் தொடர்பான அபிவிருத்திக் கலந்துரையாடல்

கொடிகாமம், ஜூலை 1

கெற்பேலி சிறி செம்பவள வலஞ்சுழிப் பிள்ளையார் ஆலய அறநெறி பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை ஆலயத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி பிரதேச சபை உபதவிசாளர் செ.மயூரன், மதிப்புறு விருந்தினர்களாக மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், சமூக சேவையாளர் கிருஸ்ணபிள்ளை, நகரசபை முன்னாள் உறுப்பினர் எஸ்.கிசோர் ஆலய நிர்வாகத்தினர், அறநெறிப் பாடசாலயின் ஆசிரியர், அறநெறிப் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலில் அறநெறிப் பாடசாலைக்கான தளபாட வசதிகள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு, மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், ஆலய சுற்றுவீதி சீரமைப்பு, ஆலயத்துக்கு வெளி மண்டபம் அமைத்தல், கிரா மத்தின் வீதி சீரமைப்பு ஆகிய தேவைகள் முன்வைக்கப்பட்டன .

கட்டங்கட்டமாக அறிநெறிப் பாடசாலையின் தேவைகள், ஆலயத்தின் தேவைகள் மற்றும் கிராமத்தின் தேவைகள் நிறை வேற்றப்படும் என்று முதன்மை விருந்தினர் தெரிவித்தார். (ஜ-159)

## தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஸ்ரீ இராஜஇராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்தத் தேர்த் திருவிழா இன்று முதலாம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 5.30 மணிக்கு அபிசேக பூசை, மூலஸ்தான பூசை, ஸ்தம்ப பூசை, வசந்தமண்டப பூசை என்பன இடம்பெற்று காலை 8.30 மணிக்குத் தேர்த்திருவிழா நடைபெறும். நாளை இரண்டாம் திகதி செவ்வாய்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் 3ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் நான்காம் திகதி காலை 10 மணிக்கு பிராயசித்த அபிசேகமும் அன்றைய தினம் காலை 6 மணிக்கு வைரவர் பொங்கலும் இடம்பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம)

## கிளி. சர்வமதக் குழுவால் நல்லிணக்க விழிப்புணர்வு



கிளிநொச்சி, ஜூலை 1

தேசிய சமாதான பேரவையின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட சர்வ மத குழுவினரின் ஏற்பாட்டில் பொசன் பண்டிகையை முன்னிட்டு சமய நல்லிணக்க விழிப்புணர்வுநிகழ்வும்கலைநிகழ்வுகளும் கிளிநொச்சி நாச்சிக்குடா சென். ஜேம்ஸ் பொது நோக்கு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.

சமயங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த குறித்த நிகழ்வில் சமய தலைவர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். இதன்போது சமய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் விழிப்புணர்வு கலை நிகழ்வுகள், தெரு நாடகம் ஆகியனவும் இடம்பெற்றன. (ம)



## செல்வநாயகபுரத்தினது 51ஆவது ஆண்டு விழா

கொடிகாமம், ஜூலை 1

அச்சுவேலி மேற்கு செல்வநாயகபுரம் கிராமத்தின் 51ஆவது ஆண்டு விழாவும், தந்தை செல்வா சனசமூக நிலைய வீதி திறப்பும், மின் கட்டமைப்பு வழங்கல் நிகழ்வும் கடந்த வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக புளொட் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய தர்மலிங்கம் சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராக முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், மதிப்புறு விருந்தினர்களாக வலிகிழக்கு பிரதேச சபை உறுப்பினர் த.நிர்மலானந்தன், வலிகிழக்கு பிரதேசசபை உறுப்பினர் சி.அகீபன், அச்சுவேலி மேற்கு கிராம சேவையாளர் வீ.கோபாலதாஸ், அச்சுவேலி மேற்கு சமுர்த்தி அலுவலர், அபிவிருத்தி அலுவலர் பொது மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

அச்சுவேலி மேற்கு செல்வநாயகபுரம் கிராமத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனின் நிதி ஒதுக்கீட்டில் கிராம எழுச்சி சிறப்பு நிதி மூலம் மேற்படி முழுமைப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை திறந்து வைக்கும் நிகழ்வும் இடம்பெற்றது. (ம-159)

## மதுபோதையில் சாரத்தியம் மூன்று பேருக்குத் தண்டம்!

கொடிகாமம், ஜூலை 1

போதையில் உந்துருகளைச் செலுத்திய மூன்று பேருக்குத் தண்டம் விதித்தது சாவகச்சேரி நீதிமன்றம்.

சாவகச்சேரி போக்குவரத்துப் பொலிசாரால் மது போதையில் உந்துருளியைச் செலுத்தியமைக்காக மூன்று பேருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. கடந்த வெள்ளிக்கிழமை வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இருவருக்கு தலா 9 ஆயிரத்து 500 ரூபா வீதமும் மூன்றாவது நபருக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது.

இதேவேளை சாரதிய அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய இருவருக்கு தலா நான்காயிரம் ரூபா வீதமும் வரிப்பத்திரமின்றி உந்துருளி செலுத்தியவருக்கு மூவாயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது. (ம-159)

## ஹெரோய்ன் வைத்திருந்தாரென சந்தேக நபரொருவர் மறியலில்!

கொடிகாமம், ஜூலை 1

ஹெரரோய்ன் வைத்திருந்த குற்றச்சாட்டில் சாவகச்சேரி பொலிசாரால் கைது செய்யப்பட்ட நபரொருவர் எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

குறித்த நபருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றத்தில் கடந்த 29ஆம் திகதி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அவரை எதிர்வரும் 12ஆம் திகதிவரை மறியலில் வைக்க மன்று உத்தரவிட்டது. (ம-159)

# யாழ். குடாநாட்டில் தற்போது மரவள்ளிக் கிழங்குக்கு மவுசு

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்ப்பாண குடாநாட்டில் மரவள்ளிக் கிழக்குக்கு பெரும் மவுசு ஏற்பட்டுள்ளது. சந்தையில் அவை வந்து சேராததினால் மரவள்ளிக் கிழங்கின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது.

இந்த விலை அதிகரிப்பை அடுத்து வியாபாரிகள் வெளிமாவட்டங்களில் இருந்து மரவள்ளிக்கிழங்கை எடுத்து வந்து அவற்றை விற்பனை செய்தும் வருகின்றனர். திருநெல்வேலி சந்தையில் மரவள்ளிக்கிழக்கு தற்போது கிலோ 150 ரூபா முதல் 200 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது. (ம-17)



உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கல்லூரி சிதம்பரப்பிள்ளை திறந்த வெளியரங்கில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கல்லூரியின் முன்னைநாள் பிரதி அதிபரும் கற்கோவளம் மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலை அதிபருமான செ.ஜெயமோகன் கலந்து கொண்டார். (ம-422)

## பெருந்திருவிழா

அளவெட்டி, ஜூலை1

அளவெட்டி வடக்கு தவளகிரி முத்துமாரி அம்மன் கோயில்வருடாந்த பெருந்திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை 28ஆம் திகதி காலை10மணிக்குக்கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும்7ஆம்திகதிமுற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும். மறுநாள் 8ஆம் திகதி முற்பகல் 10 மணிக்குதீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும் என ஆலயப் பரிபாலன சபையின் தலைவர் தெரிவித்துள்ளார். (ம-36)

## சித்திவிநாயகர் ஆலயத்தின் பெருந்திருவிழா

அளவெட்டி, ஜூலை1

அளவெட்டி பெருமாக்கடலை அருள்மிகு சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்துபத்து தினங்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் 13ஆம் திகதி மாலை 6.30 மணிக்கு சப்பறத் திருவிழாவும் மறுநாள்14ஆம்திகதிகாலை6 மணிக்கு சிறப்புபூசைகள், ஆராதனைகள் இடம்பெற்று காலை 11 மணிக்கு தேர்த்திருவிழா நடைபெறும். மறுநாள்15ஆம்திகதி காலை 11 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெற்று மகாயாக குடமுழுக்கு இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-36)

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் போதையொழிப்பு விழிப்புணர்வு

கிளிநொச்சி, ஜூலை1

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையில் போதை எதிர்ப்பு வேலைத்திட்டக் கருத்தரங்கு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையில் போதை ஒழிப்பு வேலைத்திட்டம் பகுதிபகுதியாகமுன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதன் ஒரு பகுதியாககடந்தவெள்ளிக்கிழமைசபையின்உறுப்பினர்களுக்கும், சபையின் அலுவலர்களுக்கும்,போதை எதிர்ப்புதொடர்பானவிழிப்புணர்வு கருத்தரங்கம் மற்றும் துண்டறிக்கை விநியோகம்என்பனஇடம்பெற்றன. பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர்சுப்பிரமணியம்சுரேன் தலைமையில்இடம்பெற்ற நிகழ்வில் பளை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மருத்துவர் நிரோசன் கலந்துகொண்டு விழிப்புணர்வுக் கருத்தரங்கைநடத்தினார். (ம-6)

# காணிப்பிரச்சினை தொடர்பில் விரைவில் பெரிய போராட்டம்

## தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் கலந்துரையாடலில் இப்படித் தீர்மானம்

*யாழ்ப்பாணம், ஜூலை 1*

*வடக்கு மாகாணத்தில் நிலவும் காணிப்பிரச்சினைக்கு அரசு உரிய நடவடிக்கை முன்னெடுக்கத் தவறினால், தேசிய ரீதியிலான மிகப்பெரும் போராட்டத்தை முன்னெடுப்பது என்று தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண பாடி விருந்தினர் விடுதியில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

இந்தக் கலந்துரையாடலில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளாகிய நாம் வடக்கு மாகாணத்தில் காணப்படும் நில ஆக்கிரமிப்பு உட்பட காணிப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அரச தலைவர், தலைமை அமைச்சர் மற்றும் பொறுப்புமிக்கவர்கள் உரிய கவனத்தைச் செலுத்தி உடனடியான தீர்வுகளை பெற்றுத்தர வேண்டுமென்று எதிர்பார்க்கின்றோம்.

உயிர்த்தஞாயிறு தாக்குதலின் பின்னர் இலங்கையில் நடந்த கொடூர சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு போரால் பாதிக்கப்பட்ட மக்களின் காணிகளை மீளக் கையளிப்பதை மறந்து அரசு இராணுவத்தைப் பலப்படுத்தி வருகின்றது. எனவே அரசு சாக்குப்போக்குச் சொல்லிக்கொண்டுதனது பொறுப்பிலிருந்து விலகி நிற்க முடியாது. பொறுப்பு வாய்ந்த அரசாக வடக்கு மாகாண மக்களின் காணிப் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட வேண்டும். கேப்பாபிலவு மக்களுக்குச் சொந்தமான 171 ஏக்கர் காணி உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். கொக்கிளாய் முகத்து வாரத்தில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான வயல்காணிகள் மற்றும் குடியிருப்புக் காணிகளைச் சிங்கள மக்கள் தங்களுக்குத் தரவேண்டும் எனக் கோருகின்றனர். எனவே இது தொடர்பாக அரசு கூடிய கவனத்தைச் செலுத்தி தமிழ் மக்களின் பக்கமாக நியாயத்தை நிலைநாட்ட வேண்டும்.

தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த பல காணிகளில் புத்த விகாரைகள் கட்டப்பட்டுள்ளதோடு பல இடங்களில் மேலும் பல விகாரைகள் உருவாக்கப்படுவதற்கான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இவை நிறுத்தப்பட வேண்டும். இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டள்ள காணிகள், ஆலயங்கள் மீளவும் மக்களுக்கு கையளிக்கப்பட வேண்டும்.

வடபகுதியில் காணப்படும் பல காணிகளை வனவளத் திணைக்களம், வன உயிரியல் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் தமக்கு உரிய காணிகள் என உரிமைக் கோருகின்றன. அரசுதான் திட்டமிட்டு வடபகுதி மக்களின் காணிகளை சூறையாடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றதோ என்ற சந்தேகம் எழுகின்றது. எனவே அரச தலைவர், தலைமை அமைச்சர் இதுதொடர்பில் தமது கவ்னத்தைச் செலுத்த வேண்டும்.

இவைகளுக்கு சரியான தீர்வை அரசு வழங்கவில்லையெனின் நாம் அரசுக்குச் சரியான பாடத்தைப் புகட்டுவோம். தொடர் மக்கள் போராட்டத்தை மாகாண மட்டத்தில் மற்றும் தேசிய ரீதியில் முன்னெடுப்போம் என்று தெரி


## பருத்தித்துறைப் பகுதியில் போதைவிழிப்புணர்வுகள்!

பருத்தித்துறை, ஜூலை1

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் தேசிய போதைப் பொருள் ஒழிப்பு வாரத்தையொட்டிய கருத்தமர்வுகள் அந்தந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறைபிரிவு11பிரதேசபொது சுகாதாரப்பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் நாகர்கோவில் அ.மி.த.க.பாடசாலையில் போதைப் பொருள்களின் பாவனையால் ஏற்படக்கூடிய விளைவுகள் தொடர்பான கருத்தமர்வைக் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தினார். (ம-9)





## சகலகலாவல்லி வித்தியில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு

கொடிகாமம், ஜூலை1

மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயத்தில் போதை ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு கடந்த வெள்ளிக்கிழமைகாலை9மணிக்குஅதிபர்வை.ஜெயகாந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சாவகச்சேரி மதுவரி நிலைய மதுவரிப் பரிசோதகர் ஏ.ராஜேந்திரகும்ார், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். சாவகச்சேரி மதுவரி நிலைய மதுவரிப் பரிசோதகர் ஏ.ராஜேந்திரகுமார் வளவாளராக கலந்து கொண்டு போதை தொடர்பான கருத்துக்களை வழங்கினார். (ம-159)

## போதைஒழிப்பு விழிப்புணர்வு

கொழும்புத்துறை, ஜூலை1

குருநகர் கிழக்கு ஜே/72 மூத்தோர் சங்கத்தின் ஏற்பாட்டில் போதை ஒழிப்பு விழிப்புணர்வும்நடைபயணமும் போதை ஒழிப்பு வாரத்தையொட்டி அண்மையில் நடைபெற்றது.

ஜே/72 கிராம அலுவலர் பணிமனையிலிருந்து ஆரம்பமான இந்த நடைபவனியில் பலரும் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். (ம-135)

## சுற்றுமதில் அமைப்பு

அளவெட்டி, ஜூலை1

அளவெட்டி தெற்கு கலைவாணி விளையாட்டுக் கழக மைதானத்தைச் சுற்றிதுரிதகிராமியஅபிவிருத்திநிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஊரெழுச்சி அபிவிருத்தி நிதியிலிருந்து ஒரு மில்லியன்ரூபாசெலவில் சுற்றுமதில் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதி ஒதுக்கீட்டை வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் க.மயூரதனின் பரிந்துரைக்கமைய நாடாளுமன்றஉறுப்பினரும்தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமான சோ.மாவை சேனாதிராசாவினால் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்று விளையாட்டுக்கழகத்தின்தலைவர்த.தவசீத் தெரிவித்தார். (ம-36)

## கருத்தமர்வு

வவுனியா, ஜூலை1

வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான நிலைமாறுகாலநீதிதொடர்பான கருத்தமர்வு நேற்றுமுன்தினம் பிற்பகல் நகரசபை பழைய மண்டபத்தில் ஆஸ்திரேலியா நாட்டின் அனுசரணையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சட்டத்தரணி ஜெகநாதன் தற்பரன், மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர்திருமதி சரோஜா சிவச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு தகவல்களை வழங்கினர். (ம)

# கிராம அலுவலர் பிரிவுகள்தோறும் வீட்டுத் தோட்டம் அமைக்க வேண்டும்

## இதனூடாக நஞ்சற்ற உணவைப் பெறலாம் என்று கமநல சேவை நிலைய அலுவலர் அறிவுறுத்து

அளவெட்டி, ஜூலை 1

நாடு முழுவதும் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் மகளிர் விவசாய அமைப்புக்களை நிறுவி வீட்டுத்தோட்டத்தை ஊக்குவிக்க வேண்டும். அதன் மூலமாக நாளாந்த வீட்டுத் தேவைக்கு நஞ்சற்ற தாவர உணவு வகைகளை உற்பத்தி செய்யவும், நஞ்சு கலந்த உணவு வகைகளிலிருந்து விடுபடவும் முடியும்.

இவ்வாறு வலிகாமம் வடக்கு கீரிமலை கமநல சேவை நிலைய கமநல அபிவிருத்தி அலுவலர் கு.முரளிதரன் தெரிவித்தார்.

அளவெட்டி தெற்கு கிராம அலுவலர் பிரிவுக்கான மகளிர் விவசாய அமைப்புக்கான பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் நேற்று முன்தினம் 28ஆம் திகதி அளவெட்டி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற்றது.

அதில், தலைமையுரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

இவ்வாறான விவசாய அமைப்புக்கள் மூலம் வீட்டுத்தோட்ட முக்கியம் பற்றியும் உற்பத்தி தொடர்பான ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றோம். இதற்கு பெரியளவில் நிலமோ தண்ணீரோ தேவைப்படாது.

தற்போது தாராளமாக கிடைக்கின்ற பைகளைப் பயன்படுத்தி குறுகிய நிலப்பரப்பில் வீட்டு முற்றத்தில் கணிசமான அல்லது குறைந்தளவு பயிர்களை உற்பத்தி செய்து நஞ்சற்ற உணவை உண்டு ஆரோக்கியமாக வாழ முடியும்.

தற்போது அதிகளவிலான உணவு வகைகள் கிருமி நாசினி கலந்தவையாகவே சந்தைக்கு வருகின்றன. இவற்றை வாங்கி உண்பதால் மனித வாழ்வுக்கே சவால் விடும் கொடிய நோய்களுக்குள்ளாக வேண்டியுள்ளது என்பது ஆய்வு மூலம் தெரிந்த உண்மை.

எனவே வீட்டுத்தோட்டம் பற்றிய தெளிவான விளக்கங்களைப் பெற்று ஒவ்வொருவரும் மகளிர் விவசாய அமைப்புக்களில் உறுப்பினர்களாக இணைந்து கொள்வதுடன் சிறந்த வீட்டுத்தோட்ட உற்பத்தியாளராகத் திகழ்வதுடன் விவசாயத் திணைக்களம், கமநலசேவை நிலையம், அரச திணைக்களங்கள் நடத்தும் போட்டிகளில் கலந்து கொண்டு சிறந்த வீட்டுத் தோட்டச் செய்கையாளர், சிறந்த விவசாயி என்று கிராம, பிரதேச, மாவட்ட, தேசிய மட்டத்துக்கான விருதுகளைப் பெறுவதற்கான வாய்ப்பையும் நீங்கள் பெற்றுக் கொள்ளமுடியும்.

அத்துடன் நாளாந்த சேமிப்பாக குறைந்தது ஐந்து ரூபாவை சேமிப்பதன் மூலம் வருட இறுதியில் சிறு சிறு தேவைகளை மகிழ்ச்சியுடன் பூர்த்தி செய்வதற்கு இந்த நிதி உதவும்.

எனவே வீட்டுத்தோட்டத்தில் நாட்டம் கொண்டு சகலரும் நஞ்சற்ற தாவர உணவுகளை உற்பத்தி செய்யப் பாடுபட வேண்டும் என்றார்.

இந்த நிகழ்வுக்கு கிராமிய வீட்டுத் தோட்ட உற்பத்தியாளர்கள், கிராம அபிவிருத்திச் சங்க உபதலைவர் மு.சந்திரசேகரம், ஜே/129 பிரிவு கிராம அலுவலர் ம.ஜெயந்தினி, கிராம சக்தி குழுத் தலைவர் வ.நல்லதம்பி ஆகியோரும் கலந்து கொண்டனர். (த-36)

# தமிழ் அரசின் செயலர் தெரிவில் காரசாரம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயற்குழுக் கூட்டத்தில் செயலர் தேர்வின்போது கடும் காரசார விவாதம் இடம்பெற்ற நிலையில் இறுதியில் தலைவரின் உறுதிமொழியின் பெயரில் சுமூகமடைந்தது.

யாழ்ப்பாணம் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடந்த செயற்குழுக் கூட்டத்தில் கட்சியின் முக்கிய பதவிகளுக்கான தேர்வு நடைபெற்றது.

கட்சித் தலைவர் தேர்வுக்கு கட்சி யாப்பின் பிரகாரம் 14 நாள்களுக்கு முன்பு 6 உறுப்பினர்கள் ஒப்பமிட்டு விண்ணப்பித்திருத்தல் வேண்டும். அவர்களே தலைவராகப் போட்டியிட முடியும். அதன் அடிப்படையில் குறித்த தலைவர் தேர்வுக்கு ஒருவரின் பெயர் மட்டுமே ஏற்கனவே பரிந்துரைக்கப்பட்ட நிலையில் வேறு எவரின் பெயரும் பரிந்துரைக்கப்படவில்லை.

இதனையடுத்து கட்சியின் ஏனைய முக்கிய பதவிகளான, செயலர், பொருளாளர் உள்ளிட்ட பதவிகளுக்கான. தேர்வுகள் நடைபெற்றன.

செயலர் பதவிக்குத் தற்போதைய செயலரின் பெயரை தலைவர் முன்மொழிந்தார்.

மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்.

துரைராசசிங்கம் செயற்றிறனான செயலரல்லர். அவரது பதவிக்காலத்தில் கிழக்கில் கட்சி வீழ்ச்சியைச் சந்தித்தது. அவர் மட்டக்களப்புக்கான செயலராக மட்டுமே இருக்கிறார். கிழக்கின் ஏனைய பகுதிகளைக் கவனிக்கிறாரில்லை. உள்ளூராட்சித் தேர்தலில் அவரது தொகுதியிலேயே கோட்டை விட்டார் என்று குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார். அதுமட்டுமன்றி, பொதுச்செயலர் பதவிக்கு பா.அரியநேத்திரனின் பெயரை முன்மொழிந்தார்.

இவ்வாறு போட்டி நிலவிய சமயம் முல்லைத்தீவு பிரதிநிதி ஒருவர் குலநாயகத்தின் பெயரை பொதுச் செயலர் பதவிக்கு முன்மொழிந்தார்.

தலைமைப் பதவிகளை வடக்குக்கும் கிழக்குக்கும் பகிரும் அடிப்படையில் தலைவரின் தேர்வான, துரைராசசிங்கமே செயலராகத் தொடர வேண்டும் என்று சுமந்திரன் அங்கு கூறினார்.

இதன்போது, "துரைராசசிங்கம் தனது அணுகுமுறையையும், நடவடிக்கைகளையும் மாற்றிக் கொள்வார். அதற்கு நான் உத்தரவாதம் அளிக்கிறேன். 3 மாதங்கள் அவகாசம் தாருங்கள். அவரது நடவடிக்கையில் மாற்றங்களை நீங்கள் அவதானிப்பீர்கள் அதற்காக நான் கிழக்குக்கு வருவேன்" என்று கட்சித் தலைவர் தெரிவித்தார். இறுதியில் குறித்த தேர்வு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதேபோன்று முல்லைத்தீவு மாவட்ட பிரதிநிதி தேர்வின்போதும் சர்ச்சை ஏற்பட்டு தலைவரின் தலையீட்டால் சமரசமானது என்று தெரிவிக்கப்பட்டது. (த-105)

# சிறப்புத் தேவையுடையோருக்கு அலைபேசி திருத்தும் பயிற்சி

வவுனியா, ஜூலை 1

சிறப்புத் தேவையுடையோருக்கு அலைபேசி திருத்தும் பயிற்சி நெறியின் முதலாம் அணியினருக்கான இரண்டாம் கட்டப் பயிற்சிகள் நேற்று ஆரம்பித்தன.

வடக்கு மாகாண சமூகசேவை திணைக்களத்தின் குறித்தொதுக்கப்பட்ட நிதி உதவியில் வவுனியா மாவட்ட சமூகசேவை அலுவலகத்தில் மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் செ.சிறிநிவாசன் தலைமையில் இது ஆரம்பமானது.

வளவாளர்களாக ந. கிருஷ்ணமேனன், செ. டார்வின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பயிற்சி நெறியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பேசுவதில் சிரமமுடையவர்கள் கலந்து கொண்டனர்.

இரண்டாவது அணியினருக்கான பயிற்சி நெறி இந்த மாத நடுப்பகுதியில் ஆரம்பமாகவுள்ளது.

இதில் ஏனைய வகை மாற்றுத்திறனாளிகள் கலந்து கொள்ள முடியுமென்றும் விரும்பியோர் வவுனியா மாவட்ட பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சமூக சேவை அலுவலர்களைத் தொடர்பு கொள்ளமுடியும் என்று வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம் தெரிவித்தார். (த-222)



# முதலாவது கிராம நூலகம் நாவிதன்வெளியில் அமைப்பு

அம்பாறை, ஜூலை 1



முதலாவது கிராம நூலகம் அம்பாறை நாவிதன்வெளி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 15ஆம் கிராமம் விளாவடி அறநெறிப் பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ளது.

சிறகுகள் அமையத்தின் படிப்பகம் செயற்றிட்டமூடாக அமைக்கப்பட்ட கிராம நூலகம் கடந்த சனிக்கிழமை திறக்கப்பட்டது.

நாவிதன்வெளி விஞ்ஞான மாணவர் ஒன்றியத்தின் தலைவர் செல்வன் வ.யதுர்ஷன் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில், நாவிதன்வெளி பிரதேச செயலர் எஸ்.ரங்கநாதன், நாவிதன்வெளி பிரதேச சபைத் தவிசாளர் த.கலையரசன், வேப்பையடி கலைமகள் வித்தியாலய அதிபர் சி.பாலசிங்கன், நாவிதன்வெளி 2 கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் மு.இராஜகோபால், சிறகுகள் அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் வாசிப்புத் திறனை விருத்தி செய்யும் நோக்குடன் சிறகுகள் அமையத்தின் படிப்பகம் செயற்றிட்டமூடாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 30 பாடசாலைகளில் நூலக வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. (ம)

# அருணாசலம் வித்தியாலயத்தில் கலைவாணி சிலை அமைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 1

ஓய்வுபெற்ற ஆசிரியை செல்லம்மா சுப்பிரமணியத்தின் ஞாபகார்த்தமாக அவரது புதல்வர்களால், அளவெட்டி தெற்கு அருணாசலம் வித்தியாலயத்தில் கொடிக்கம்பத்துடன் இணைந்த கலைவாணி சிலை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. வித்தியாலயத்தின் மத்திய பகுதியில் அமைக்கப்பட்ட சிலை கடந்த 25ஆம் திகதி ஆசிரியையின் புதல்வர்க ளால், அதிபர் கு.லங்காதீபனிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (36)

# கண்ணிவெடி அகற்றும் பகுதியை ஜப்பான் பிரதிநிதிகள் அவதானிப்பு

ஸார்ப் கண்ணிவெடியகற்றும் நிறுவனத்துக்கு ஜப்பான் தூதரக பிரதிநிதிகள் பயணம் செய்து நிலமைகளை ஆராய்ந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. இலங்கைக்கான ஜப்பானியத் தூதரகப் பிரதிநிதி இற்றோ பியுமி கடந்தவாரம் இலங்கை வந்திருந்தார்.

இலங்கையின் வடக்குப் பகுதியில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றலில் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் செயற்படும் 'ஸார்ப்' மனிதாபிமானக் கண்ணிவெடியகற்றும் அரசசார்பற்ற நிறுவனத்துக்கே அவர் சென்றதோடு, முகமாலை கண்ணிவெடியகற்றும் தளத்தையும் பார்வையிட்டார்.

இதன்போது கண்ணிவெடியகற்றப்பட்டு கையளிக்கப்பட்ட பகுதிகள், தற்போது வேலை நடைபெறும் பகுதிகள் மற்றும் எதிர்கால திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன.

முகமாலைப் பகுதியில் கண்ணிவெடியகற்றலில் ஈடுபடும் ஸார்ப் நிறுவனம் 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2019 ஜூன் மாதம் 20ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதியிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலையிலும் எட்டு இலட்சத்து 25 ஆயிரத்து 670 சதுரமீற்றர் பரப்பளவிலிருந்து 18 ஆயிரத்து 444 அபாயகரமான வெடிபொருள்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் முன்னாள் கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

தற்போது நான்கு அணிகள் கண்ணிவெடியகற்றும் பணிகளை முகமாலையில் முன்னெடுத்துள்ளன. (த-6)

# இணக்கப்பாட்டுக்கு எதிராக எமது தரப்பினர் செயற்பட்டிருந்தால் மன்னிப்புக் கேட்கிறோம்

## மன்னார் ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ தெரிவிப்பு

தலைமன்னார், ஜூலை 1

எங்கள் பக்கத்திலிருந்து இணக்கப்பாட்டுக்கு எதிராக நாங்கள் செயற்பட்டிருந்தால் நாங்கள் மன்னிப்புக் கோருகின்றோம். ஆனால் எங்கள் மத்தியில் நல்லிணக்கம் இருக்க வேண்டும். நாம் நன்மை செய்ய வேண்டும். நாம் ஒன்றுபட்டுச் செயற்பட்டால் நீதியும் அமைதியும் நிலை கொள்ளும். அப்பொழுது நாம் சமாதானத்துடனும் அமைதியுடனும் வாழலாம்.

இவ்வாறு மன்னார் ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்தார். மன்னார் குடிமக்கள் குழுத் தலைவர் ஞானப்பிரகாசம் அடிகள் தலைமையில் மன்னார் மாவட்டத்திலுள்ள சகல மதத் தலைவர்களுக்கும், திணைக்கள உயர்மட்டத் தலைவர்களுக்கும் நல்லிணக்க சம்பந்தமான ஆலோசனைக்கான கருத்தமர்வு மன்னார் நகர சபை மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. அதில் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கருத்தமர்வில் கலந்து கொள்ளுமாறு மன்னார் குடிமக்கள் குழு சகல மதத் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்திருந்தது என்றும் அதில் அனைத்து மதத் தலைவர்களும் கலந்து கொண்டபோதும் இந்து மதத் தலைவர்கள் கலந்து கொள்ளவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

புராதனமான திருக்கேதீச்சர கோவில் வீதி அலங்கார வளைவை கடந்த சிவராத்திரியன்று பாதிரியார் ஒருவர் முன்னிலையில் கிறிஸ்தவர்கள் உடைத்து எறிந்திருந்தனர். அதனால் பெரும் இக்கட்டான நிலை ஏற்பட்டது. அலங்கார வளைவு உடைக்கப்பட்டதற்கு இந்து மதத் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர். மன்னார் சர்வமதக் குழுவிலிருந்து இந்து மதத் தலைவர்கள் வெளியேறினர். அதன்பின்னரும் கோவில் அலங்கார வளைவு பிரச்சினை இன்னும் தீர்ந்தபாடில்லை. இந்த நிலையில் மன்னார் ஆயர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மதத் தலைவர்கள் மக்களை வழிகாட்டுகின்ற வேளையில் மற்ற மதங்களை மதித்து, மற்ற மதங்களுக்கான இடங்களை வழங்கிச் செல்லும் மதத் தலைவர்களாகநாங்கள் இருக்க வேண்டும். எமது மதங்கள் ஊடாக நாம் மற்றைய மதங்களை மிதிக்க வேண்டும் என்று நாம் ஒருபோதும் எண்ணக் கூடாது. மற்றைய மதங்களைச்சார்ந்தவர்கள் எல்லோரும் எமது சகோதரத்துவம் என்பதை நாம் மனதில் இருத்திக் கொள்ள வேண்டும்.


நாங்கள் வாழும் இந்தக்கால கட்டத்தில் எமது சமூகத்தில் மதங்கள் மத்தியில் நல்ல இணக்கப்பாடு இருக்க வேண்டும். நாம் ஒருவரை ஒருவர் புரிந்து ஒருவருக்கொருவர் பக்கபலமாக இருந்து செயல்பட வேண்டும். நாம் சிறு பராயத்திலிருந்து ஒரு சமயத்தை சார்ந்து வாழ்ந்தால் நாம் அந்த மதத்தை சார்ந்து செயல்படுகின்றோம். நாம் ஒரு மதத்துக்காக இருந்து செயற்படுகின்றபோது மற்ற மதங்களைப் பாதிக்கும் போதுதான் நாம் அதில் கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு இருக்கும்போது நாம் எந்தப் பதவிகளில் இருந்தாலும் அவர் சார்ந்த மதங்களுக்கு மட்டும் சேவை செய்யும் நபராக அல்லாது அனைவருக்கும் நீதியான முறையில் தங்கள் கடமைகளைச் செய்யக்கூடியவராக எப்பொழுதுஇருக்கின்றோமோ அப்பொழுதுதான் இந்த நல்லிணக்கம் ஏற்படும் ? என்றார்.

**நல்வழிப்படுத்துவது கடினம்**

அருட்பணி ஞானப்பிரகாசம் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

"நாம் எல்லோரும் ஒன்றாகச் செயற்பட வேண்டும் என்ற தேவை ஏற்பட்டுள்ளது. சமாதானத்துக்கான சமய, சமூக முன்னெடுப்புக்களை எடுத்துச் செல்லலாம் என்று ஆராய்வதற்கான அமர்வாகவே இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரசியல்வாதிகளாக இருந்தாலென்ன சமய வாதிகளாக இருந்தாலென்ன மக்களைத் திசைத்திருப்பி நல்வழிப்படுத்த வேண்டிய கட்டாயம் இருக்கின்றது. பலவேளைகளிலே மக்களை பிழையான வழிகளில் திசை திருப்புவது இலேசான விடயமாகவும் நல்வழிப்படுத்துவது கடினமான விடயமாகவும் இருப்பதை பார்க்கின்றோம். நாம் விரும்பும் கடவுள் மட்டும்தான் தேவையென்று இல்லாமல் சமய சமூக மனித வாழ்வையும் மனித நேயத்தையும் நாம் மதித்து வாழ வேண்டியவர்களாக இருக்கின்றோம்.



இப்பொழுது நிலவி வரும் பிணக்குகள், பிரிவினைகளுக்கு மத்தியில் நாம் எவ்வாறு ஒன்றுபட்டுச் செயற்படலாம் என்பதைச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்" - என்றார்.

(த-60)

# சமயப் போதை மேலோங்கினால் நாங்கள் தோற்கடிக்கப்படுவோம்!

## மன்னார் மாவட்டச் செயலர் கூறுகிறார்

மன்னார், ஜூலை 1

எங்களுக்குள் மது போதை, உணவுப் போதை, சமயப் போதை என பலவிதமான போதைகள் எம்மை ஆட்கொள்கின்றன. எமக்குள் இந்தப் போதைகள் மேலோங்குமாகில் நாம் தோற்கடிக்கப் படுவோம்.

இவைகளுக்குள் எம்மை நாம் அடக்கிவிடாது எம்மைப் பாதுகாத்துக் கொள்வோமாகில் நல்லிணக்கம் ஏற்பட வாய்ப்பு ஏற்படும். இவ்வாறு மன்னார் மாவட்டச் செயலர் சீ.ஏ.மோகன்ராஸ் தெரிவித்தார்.

மன்னார் குடிமக்கள் குழு ஏற்பாட்டில் மன்னார் மாவட்டத்திலுள்ள சகல மதத் தலைவர்களுக்கும், திணைக்கள உயர்மட்டத் தலைவர்களுக்கும் நல்லிணக்கம் சம்பந்தமானஆலோசனைக்கான கருத்தமர்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"பொதுவாக நல்லிணக்கம் என்பது விட்டுக் கொடுப்பு என்பார்கள். எல்லோர் மட்டிலும் விட்டுக் கொடுப்பு இருக்குமாகில் பிரச்சினைகளுக்கு இடம் இருக்காது. ஒருவருக்கொருவர் புரிந்து கொண்டால் சிறப்பு. மனிதனுக்கு இறைவன் ஆறறிவைப் படைத்துள்ளான். இதை ஒவ்வொரு மனிதனும் பயன்படுத்தி ஒவ்வொன்றையும் அறிந்து கொண்டால் மனிதம் வாழும். ஒவ்வொருவருக்கும் தங்கள் தாய் எவ்வாறு பெறுமதியானவரே அவ்வாறு ஒவ்வொருவருக்கும் அவரவர் நாடு, மதம், மொழி பெறுமதியானவை. ஆகவே முதலில் நாம் இதை அங்கீகரிக்க வேண்டும்.

**முரண்பாடு அதிகரிப்பு**

தற்பொழுது முரண்பாட்டு முகாமைத்துவம் என்ற கலாநிதி பாடவிதானம் ஒன்று உருவாகியுள்ளது என்றால் எங்கள் மத்தியில் முரண்பாடு அதிகரித்துள்ளது எனலாம். இப்பொழுது போதை ஒழிப்பு வாரத்தை கொண்டாடி வருகின்றோம்.

ஆகவே எம் மத்தியில் ஒற்றுமையும் சகோதரத்துவமும் இருக்குமாகில் இந்த முரண்பாடு முகாமைத்துவம் எமக்குத் தேவையில்லை. சகோதரத்துவம் இல்லையென்றாலும் பரவாயில்லை ஆனால் எதிரிகள் இல்லை என்று நினைத்து வாழ்ந்து கொள்வோம் - என்றார்.

**அயலவனைப் புண்படுத்தக்கூடாது**

மன்னார் பிரதேச செயலர் திருமதி கே.சிவதம்பு தனது உரையில், "நாம் மத நல்லிணக்கம் நல்லிணக்கம் என சொல்லிக் கொண்டிருப்பதை விட அதை செயல்உருவில்கொஞ்சம் கொஞ்சமாவது கொண்டு வர கற்றுக் கொள்ள வேண்டும். எம்மிடையே முரண்பாடு தோன்றுகின்றபோதுதான் நல்லிணக்கம் இல்லாமல் போகின்றது. மதத்தில் உண்மையாக நம்பிக்கை கொண்ட மனிதன், ஆன்மீகத்தை நூறு வீதமாக மதிக்கின்ற மனிதன் அயலவனை புண்படுத்த மாட்டான்.

மனிதத் தன்மையிலிருந்து நாங்கள் விலகிப் போகின்றபோதுதான் மற்றவர்கள் எம் குறைகளைச் சுட்டிக்காட்ட முற்படுகின்றனர். நாம் எமது மனச்சாட்சிக்கு ஏற்றவாறுநடந்து கொள்ள வேண்டும்.

**இறைவனே தீர்மானம்**

மனச்சாட்சிக்கு ஏற்றவாறு ஒவ்வொரு மனிதனும் வாழும்போது எம்மில் நல்லிணக்கம் தானாகவே உருவாகி விடும். நாம் எந்த குடும்பத்தில் எந்த மதத்தில் எந்த நாட்டில் ஊரில் பிறக்க வேண்டும் என்பதை நாம் தெரிந்து கொண்ட விடயமல்ல. ஆனால் இறைவன்தான் நாம் எங்கே எப்படி எந்த சூழலில் பிறக்க வேண்டும் என்று எம்மை தெரிந்து கொண்டவன் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஆண்டவனால் எமக்கு கொடுக்கப்பட்ட வாழ்க்கை மிக குறுகிய வாழ்க்கை. இந்த வாழ்க்கையின் போது நாம் எமது உரிமையை மதிக்கும்போது மற்றையவர்களின் உரிமைகளுக்கும் மதிப்பளிக்க வேண்டும். அப்பொழுது எம் மத்தியில் எந்த முரண்பாடுகளும் தோன்ற வழி பிறக்காது" - என்றார்.

(த-60)

# புள்ளி சுறா சிக்கிய மீனவருக்குச் சிக்கல்

கிளிநொச்சி, ஜூலை 1

புள்ளி சுறா வலையில் சிக்கி பிடிபட்ட நிலையில், அதைப் பிடித்த மீனவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். எனினும் அதைப் பிடிக்கத் தடைசெய்யப்பட்டுள்ளமை தனக்குத் தெரியாது என்று அவர் கூறுகிறார்.

கிளிநொச்சி இரணைதீவு கடல்பரப்பில் கடற்றொழிலாளர்களின் வலையில் புள்ளி சுறா சிக்கியது. குறித்த மீனவரின் 13 இலட்சம் பெறுமதியான படகு, இயந்திரம், மற்றும் ஏழு இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் என்பன கடற்படையினரின் கட்டுபாட்டில் உள்ளன

வழமை போன்று தொழில் நடவடிக்கைகளுக்காக நேற்றுமுன்தினம் இரவு வலை விரித்து விட்டு வந்தேன். நேற்று அதிகாலை சென்று வலையை இழுத்த போது சுமார் 1200 கிலோகிராம் நிறையுடைய புள்ளி சுறா சிக்கியுள்ளது. இது தடை செய்யப்பட்ட மீனினம் என்று எங்களுக்குத் தெரியாது. இதுவரைக்கும் நீரியல் வளத் திணைக்களமோ கடற்றொழிலாளர்களுக்கு இந்த வகை சுறா மீன் தடைசெய்யப்பட்டது என்று எந்த தகவலையும் தரவில்லை.

எங்களை பொறுத்தவரை ஆமை, கடற்பன்றி, டொல்பின், திமிங்கலம், ஓங்கில் போன்ற கடல்வாழ் உயிரிணங்களையே பிடிக்க முடியாது என்று குறித்த பிரதேச கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

15 அடி ஆழமான இந்த கடற்பரப்பில் இவ்வகை சுறா மீன்கள் வருவது அரிது. அதற்கான சாத்தியம் இல்லை. இந்தச் சுறா பாதிக்கப்பட்டு, அல்லது கப்பல்களில் தாக்கப்பட்டு கரையொதுங்கிய போது எங்களது சாதாரண வலையில் சிச்சியிருக்கிறது. இது ஆரோக்கியமாகக் காணப்பட்டிருக்குமானால் எங்களது படகு மற்றும் வலை என்பவற்றுக்கு பெரும் சேதம் ஏற்படுத்திவிட்டுச் சென்றிருக்கும். எனவே ஆரோக்கிய மற்ற நிலையில் கரையொதுங்கிய போதே எமது வலையில் சிக்கி யிருக்கிறது. என்று சக தொழிலாளர்கள் தெரிவித்தனர். வலையில் சிக்கிய புள்ளி சுறா தற்போது கடற்கரை பிரதேசத்தில் புதைக்கப்பட்டுள்ளது. (த-35)

# கட்டடப் பொருள்களின் தட்டுப்பாட்டால் ஒப்பந்த வேலைகள் முடங்கியுள்ளன

## வடக்கு மாகாண கட்டட அமைப்பினர் சங்கம் தெரிவிப்பு ஆளுநர் உள்ளிட்ட தரப்பினருக்குக் கடிதத்தில் அறிவிப்பு

*யாழ்ப்பாணம், ஜூலை 1*

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக கட்டட மூலப் பொருள்களான அனைத்து வகைக் கற்கள் மற்றும் மணல் என்பவற்றைப் பெற்றுக் கொள்வதில் ஒப்பந்தகாரர்களுக்கு ஏற்பட்ட சிக்கல்களால், கட்டட ஒப்பந்தங்களை உரிய தவணையில் நிறைவுசெய்ய முடியவில்லை என்று கட்டட ஒப்பந்தகாரர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒப்பந்த காரர்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைச் சுட்டிக்காட்டி வடக்கு மாகாண கட்டட அமைப்பினர் சங்கத்தினர் வடக்கு மாகாண ஆளுநர் உள்ளிட்ட அதிகாரிகளுக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக கட்டட மூலப் பொருள்களான அனைத்து வகைக் கற்களை வழங்குவதில் மிக நெருக்கடியான நிலையை விநியோகஸ்தர்கள் எதிர்நோக்கியிருந்தனர்.

கல் அகழும் குவாரிகளில் அனுமதிக்கப்பட்ட வெடிபொருள்களைப் பயன்படுத்துவதற்குத் தற்காலிகமாக விதிக்கப்பட்ட தடை காரணமாக குவாரிகள் மற்றும் கல் உடைக்கும் ஆலைகள் போன்றவற்றிலிருந்து கற்களை உரிய காலப்பகுதியில் விநியோகிக்க முடியாத நிலை காணப்படுகிறது.


வடக்கு மாகாணத்தில் இடம்பெறும் உட்கட்டுமான மற்றும் அபிவிருத்தி வேலைகள் இந்தக் காரணத்தால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தன. அவற்றுக்கான விலை பெறுமானங்களும் சடுதியாக அதிகரித்தன. ஒப்பந்த வேலைகளைப் பொறுப்பேற்று நிறைவேற்றுகின்ற ஒப்பந்தகாரர்கள் பாதிப்படைந்துள்ளனர். அரச வீட்டுத் திட்டப் பயனாளிகளும் இந்த நிலமையால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆயினும் வெடிப் பொருள்களைப் பாவிப்பதற்கு மட்டுப்படுத்தப்பட்ட அனுமதியே தற்போது வழங்கப்பட்டிருப்பதால் மேற்படி மூலப் பொருள்களை விநியோகிப்பதிலுள்ள தாமதம் மற்றும் விலை அதிகரிப்பில் எவ்வித மாற்றங்களும் காணப்படவில்லை என்று தெரிவித்துள்ள வடக்கு மாகாண கட்டட அமைப்பினர் சங்கத்தினர், கற்கள் மட்டுமன்றி ஆற்று மணல் மற்றும் கிரவல் போன்ற மூலப்பொருள்களைப் பெறுவதிலும் நெருக்கடி நிலையை எதிர்கொண்டுள்ளோம் என்றும் அவற்றின் விலைப் பெறுமானங்களும் மாறுபட்டதாகவே உள்ளன என்றும் தெரிவிக்கின்றனர்.

ஒப்பந்த வேலைகளை நிறை வேற்றுவதில் ஒப்பந்தகாரர்கள் பல சிர மங்களையும் எதிர்கொள்கின்றனர் என்றும் தெரிவித்தனர். இந்த விடயங்களைச் சுட்டிக்காட்டி வடக்கு மாகாண ஆளுநர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு அந்த அமைப்பினர் கடிதம் அனுப்பியுள்ளனர்.

அந்தக் கடிதத்தில், மூலப் பொருள்களை விநியோகிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதங்கள் காரணமாக ஒப்பந்தக்காரர்களுக்கு தேவை ஏற்படின் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு காலநீடிப்பு வழங்குதல், அசாதாரண நிலைமைகளால் சடுதியாக ஏற்பட்டுள்ள விலை வேறுபாடுகளைச் சிறப்புக் கவனத்தில்கொண்டு அதனை ஒப்பந்தகாரர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஒப்பந்தக்காரர்களால் நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்த வேலைகளுக்குரிய கொடுப்பனவுகள் உரிய திணைக்களங்களால் நீண்டகாலமாக வழங்கப் படாது இழுத்தடிக்கப்படுவதால் நிதி நெருக்கடி மற்றும் கடன் கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளன என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-21)



# பரந்து விரிந்து பயன்தரும் மரத்தை படச் செய்ய அசிட் ஊற்றப்பட்டதா?

## ஒருவர் கைதாகி விசாரணை அசிட் ஊற்றப்பட்ட மண் மாற்றப்பட்டது

கிளிநொச்சி, ஜூலை 1

ஏ9 முதன்மை வீதி கிளிநொச்சியில் மரம் ஒன்றைப் பட்டுப் போகச் செய்யும் நோக்கில் அசிட் திரவம் ஊற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. அது கண்டறியப்பட்டதால் அதனைச் சூழவுள்ள மண் அகற்றப்பட்டு வேறு மண் போடப்பட்டது. அசிட் ஊற்றினர் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பல வருடங்கள் கொண்ட குறித்த மரம் பரந்து விரிந்து நிழல் பரப்பியுள்ளது. நாளாந்தம் ஏராளமானோர் நேரடியாகப் பயனடைகின்றனர். அதற்குக் கீழ் பயணிகள் ஏராளம் பேர் நின்று செல்வர். முச்சக்கரவண்டித் தரிப்பிடமும் உள்ளது. அந்தளவுக்குப் பயன் கொடுக்கிறது அந்த மரம்.

ஆனால் அந்த மரம் நிற்பதால் தமக்கு வியாபார நடவடிக்கை பாதிக்கப்படுகிறது என்றுகூறிக்கொண்டு கடைக்காரர் ஒருவரே அசிட் ஊற்றக் காரணமாகவுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

நேற்று அதிகாலை மரத்தைச் சுற்றி அசிட் நச்சுத் திரவம் ஊற்றப்பட்டுள்ளது. இதனை அருகில் உள்ள வியாபார நிலையத்தில் பணியாற்றுகின்ற ஒருவர் அவதானித்து முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்குக் கூறியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. மரத்துக்கு அருகில் சென்ற போது அசிட் நாற்றம் வீசியுள்ளது.

உடனடியாக கிளிநொச்சிப் பொலிஸார் மற்றும் கரைச்சிப் பிரதேச சபைக்கு அறிவிக்கப்பட்டது.

பொலிஸார் இருவரை விசாரணைக்கு உட்படுத்தி ஒருவரைக் கைது செய்தனர். மற்றையவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அசிட் ஊற்றப்பட்ட மரத்தைச்சுற்றியுள்ள மண் அகற்றப்பட்டு வேறு மண் போடப்பட்டுள்ளது என்று முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் தெரிவித்தனர். இருப்பினும் மரம் உயிரோடு இருக்குமா? இறந்து போகுமா? என்பது சில நாள்களின் பின்னரே தெரியவரும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (த-35)

# தமிழ்க் கூட்டமைப்பின் 7 வருடகால போராட்டத்தால் சமுர்த்தி கிடைத்தது

*சிவமோகன் எம்.பி. தெரிவிக்கிறார்*

மன்னார், ஜூலை 1

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏழு வருட கால போராட்டங்களின் பின்னரே சமுர்த்தி உதவி கிடைத்துள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவமோகன் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவின் சமுர்த்தி பயனாளிகளுக்கான உரித்துப்படிவம் வழங்கும் நிகழ்வு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் கடந்த 28ஆம் திகதி நடைபெற்றது.

அந்த நிகழ்வில் உரையாற்றும்போது மேலும் தெரிவித்ததாவது:

சமுர்த்திக் கொடுப்பனவில் மிக அதிகளவில் பாதிக்கப்பட்டது புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகம்தான். 2012ஆம் ஆண்டு தொடக்கம் ஆறு கிராம அலுவலர் பிரிவுகளுக்கு மட்டும்தான் சமுர்த்தி கிடைத்திருந்தது. தற்போது அதிலிருந்து அதிகரித்து பத்தொன்பது கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் சமுர்த்தி கிடைக்கின்றது. 2012லிருந்து 2019வரையான ஏழு வருடங்கள் இழந்திருந்த சமுர்த்தி உதவி தற்போது கிடைத்துள்ளது - என்றார். (த-213)



# குப்பை அகற்றவில்லை கண்டித்துப் போராட்டம்

முல்லைத்தீவு, ஜூலை 1

குப்பை அகற்றாததைக் கண்டித்து நேற்றுப் போராட்டம் நடத்தப்பட்டது. எனினும், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைக்கிடையில் குப்பைகள் அகற்றப்படும் என்று செம்மலை உப பிரதேசசபை அலுவலக பொறுப்பதிகாரி கூறியதால் போராட்டக் காரர்கள் கலைந்து சென்றனர்.

இந்தச் சம்பவம் செம்மலையில் நேற்றுமுற்பகல் நடைபெற்றது. பிரதேச மக்கள் மற்றும் சந்தை வியாபாரிகளே கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

அவர்களிடம் சென்ற செம்மலை உப பிரதேசசபை அலுவலக பொறுப்பதிகாரி நிலமையை எடுத்துக்கூறினார்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைக்குள் சந்தை வளாகத்தில் காணப்படும் கழிவுகள் அகற்றப்பட வேண்டும் எனவும், குடி தண்ணீர்ப் பிரச்சினைக்கும் தீர்வு காணப்படுதல் வேண்டும் எனவும் செம்மலை உபபிரதேசசபை அலுவலக பொறுப்பதிகாரியிடம் தெரிவித்தனர்.

அத்துடன் அவர்களுடைய கோரிக்கையை குறித்த பொறுப்பதிகாரி ஏற்றுக்கொண்டமையினை அடுத்து கவனயீர்ப்பில் ஈடுபட்டிருந்தவர்கள் அவ்விடத்தை விட்டு அகன்றனர். (த-246)

# திறன் வகுப்பறைக்கென 4 லட்சம் ரூபா ஒதுக்கீடு

கொடிகாமம், ஜூலை 1

தென்மராட்சி கரம்பைக்குறிச்சி அ. த.க பாடசாலையில் திறன் வகுப்பறை அமைப்பதற்கு நான்கு லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதியிலிருந்து பாடசாலையின் திறன் வகுப்பறை அமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்காக இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-159)

# வீட்டுத் திட்டத்தில் உள்வாங்க மறுப்பு

## மனித உரிமை ஆணைக்குழுவில் பாதிக்கப்பட்டவர் முறைப்பாடு

மன்னார், ஜூலை 1

மீள் குடியமர்ந்து சுமார் 10 வருடங்களைக் கடந்த நிலையில் இதுவரை எவ்வித வீட்டுத் திட்டமும் கிடைக்கவில்லை. கிடைக்கின்ற வீட்டுத்திட்டங்கள் இடை நிறுத்தப்படுகின்றன என்றும் தமக்கு வீடு கிடைக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரி மனித உரிமைகள் ஆணைக் குழுவின் மன்னார் அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

போரால் பாதிக்கப்பட்டு மாந்தை மேற்கு பிரதேசச் செயலர் பிரிவில் விடத்தல் தீவு 7ஆம் வட்டாரத்தில் வசிக்கும் யாக்கோப்பிள்ளை மதுரநாயகம் என்பவரே முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நலன்புரி முகாமில் இருந்து விடத்தல் தீவு 7 ஆம் வட்டாரத்தில் மீள் குடியேறியுள்ளார். "மகள் ஒருவர் போரில் உயிரிழந்துள்ளார். மனைவி மற்றும் திருமணமான மகளுடன் மகளின் தற்காலிக வீட்டில் வசித்து வருகின்றோம். வீட்டுத்திட்டம் பெற்றுக் கொள்ளும் வகையில் பல்வேறு தரப்பினருக்கு எழுத்து மூலம் சமர்ப்பித்திருந்தேன். வீட்டுத்திட்டத்தை பெற்றுக்கொள்ள எல்லா நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளேன். இனி வரும் வீட்டுத் திட்டத்தில் வீட்டுத்திட்டம் தரப்படும் என்று மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தால் உறுதி மொழி வழங்கப்பட்டது.

இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. வீட்டுத்திட்டப் பயனாளிகள் தெரிவில் எனது பெயர் இல்லை. இறுதியில் பிரதேச செயலரிம் கேட்ட போது உங்களுக்கு வீடு இருக்கின்றது. புதிய வீட்டுத்திட்டம் தர முடியாது என்று தெரிவித்தார்.

என்னையும், எனது மனைவியையும் திருமணமான மகளுடன் இருக்கும் படி அதிகாரிகள் கூறுகின்றனர் என்று அவர் பாதிக்கப்பட்டவர் தெரிவித்தார்.

இது பற்றி மன்னார் மனித உரிமைகள் ஆணைக் குழு மாந்தை மேற்கு பிரதேசச் செயலகத்துக்குக் கடிதம் அனுப்பியுள்ளது. (த-56)

# வட பகுதியில் எத்தனை தீவிரவாதிகளை இதுவரை கைது செய்தீர்கள் கூறுங்கள்?

## படையினரிடம் சிவமோகன் எம்.பி. ஆவேசக் கேள்வி

மன்னார், ஜூலை 1

வடக்குப் பகுதியில் இதுவரை எத்தனை தீவிரவாதிகளைக் கைது செய்துள்ளீர்கள் என்பதைக் கணக்கிட்டு சொல்ல முடியுமா? என்று படையினரிடம் நாடாளு மன்ற உறுப்பினர் எஸ்.சிவமோகன் ஆவேசமாகக் கேள்வியெழுப்பியுள்ளார்.

கடந்த உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத்தாக்குதலின் பின் நாடெங்கிலும் இறுக்கமடைந்த பாதுகாப்பு மற்றும் சோதனைக் கெடுபிடிகள் அனைத்து இடங்களிலும் தளர்த்தப்பட்டுள்ளன. ஆனால் மன்னார் மாவட்டத்தில் வங்காலை கடற்படையினர் மாத்திரமே சோதனைக் கெடுபிடிகளை அதிகரித்துக் கொண்டே போகிறார்கள் என்று மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

ஏனைய இடங்களில் உள்ள சோதனைச்சாவடிகள் அகற்றப்பட்டுவிட்டன. அதே போல் கொழும்பு செல்வதாயின் புத்தளம் மாவட்டத்தில் ஒரு இடத்தில் சோதனைச்சாவடி உள்ளது. ஆனால் நானாட்டான் முசலியில் இருந்து மன்னார் நகருக்குள் செல்வதாயின் இரண்டு இடங்களில் சோதனைக் கெடுபிடிகளை மக்கள் சந்திக்க வேண்டியுள்ளது. ஒன்று வங்காலை கடற்படையினர் அமைத்துள்ள வீதிச் சோதனைச்சாவடி மற்றயது மன்னார் பெரியபாலத்தருகில் உள்ள சோதனைச்சாவடி. இவை இரண்டிலும் பயணிகள் இறக்கி நடத்தி விடப்படுகின்றனர்.

பொருள்கள் அனைத்தும் சோதனை செய்யப்படுகின்றன என்றும் மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

இது வரைகாலமும் நறுவிலிக்குளம் கடற்படை முகாம் அருகில் அமைக்கப்பட்டிருந்த வங்காலை கடற்படையினரின் சோதனைச்சாவடி தற்போது வங்காலை பெரிய பாலத்தருகில் அமைக்கப்பட்டு முன்பை விட அதிகமான கடற்படையினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

இது பற்றி என்னிடம் மக்கள் முறைப்பாடு செய்துவருகின்றனர்.

குண்டுத்தாக்குதல் நடந்த இடங்களை விட்டு வடபகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபடும் படையினரிடம் கேட்கிறேன் இதுவரையில் வடபகுதியில் எத்தனை ஆயிரம் தீவிரவாதிகளைக் கைது செய்துள்ளீர்கள்? அதைக் கணக்கிட்டு சொல்லுங்கள்.

போர் முடிந்த பின் உங்களுக்கு வேலை இல்லை என்பதற்காக மக்களைத் துன்பப்படுத்தாதீர்கள். எங்களின் பாதுகாப்பை எங்களுக்குப் பார்க்கத் தெரியும். இராணுவப் பாதுகாப்பைக் கேட்டு மக்கள் அழவில்லை. ஐ.எஸ்.ஐ.தீவிரவாதத்தை அடக்குவதாயின் ஐ.எஸ்.ஐ.எஸ். எங்கு உள்ளதோ அங்கே சென்று அடக்குங்கள். பன்னாட்டுப் பயங்கரவாதத்தை அடக்குவது என்றால் பன்னாடுகளுடன் இணைந்து செயற்படுங்கள். சோதனை என்னும் பெயரில் மன்னார் மக்களின் அடிப்படை வாழ்க்கைப் பிரச்சினைகளில் தலையிடாதீர்கள். படையினரின் சோதனைச்சாவடிகளுக்கு எதிராக மக்களைப் போராட வைத்து தமிழ் மக்களை நெருக்கடிக்குள் தள்ளாதீர்கள் என்று மேலும் தெரிவித்தார். (த-213)



## மடு பணியில் 300 பொலிஸார்

தலைமன்னார், ஜூலை 1

மன்னார் மடு ஆலய பெருவிழாவில் 300 பொலிஸாரும் 25 சிறப்பு அதிரடிப் படையினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட் டது.

ஆலய பெருவிழா கடந்த 23ஆம்தி கதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நாளை திருப்பலி நடைபெறுகின்றது. (த-60)

## பதவி ஆசைகளை காட்டாது கொள்கையை வளர்க்கவேண்டும்

### தமிழ் அரசின் இளையோர் அணிச் செயலர் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூலை 1

இளையோர் கட்சி கொள்கைகளுடன் வளர்க்கப்பட வேண்டுமே தவிர அவர்களுக்குப் பதவிகளைக் காட்டி வளர்க்க கூடாது என்று பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணிச் செயலருமான சு.சுரேன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் மாநாடு நேற்று முன்தினம் பிற்பகல் கட்சியின் வாலிபர் முன்னணித் தலைவர் சோயோன் தலைமையில் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் இடம்பெற்றது.

அதில் மாநாட்டுத் தீர்மானங்கள் மீது உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

தலைவர்கள் இளைஞர்களுக்குக் கொள்கைப் பற்றை வளர்க்க வேண்டுமே தவிர, அவர்களைக் கொள்கைப் பற்றற்று வெறும் பதவிகளுக்காக வளர்க்கக் கூடாது எனவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா மற்றும் கட்சியை பிரதி நிதித்துவப்படுத்துகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள் உள்ளூராட்சி மன்றத் தவிசாளர்கள், உபதவிசாளர்கள், உறுப்பினர்கள், இளையோர் பலரும் கலந்து கொண்டனர். (த-6)

## சாந்தை வீரபத்திரர் ஆலயத்தில் அன்னதான மண்டபத்துக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்ப்பாணம் சில்லாலை சாந்தை வீரபத்திரர் ஆலயத்தில் அன்னதான மண்டபத்துக்கு கடந்த வெள்ளிக்கிழமை அடிக்கல் நடப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், வடக்கு மாகாணசபை முன்னார் உறுப்பினர் பா.கஜதீபன், பிரதேச சபை உறுப்பினர் ஜிப்ரிகோ, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்) செயற்குழு உறுப்பினர் ந. கணேந்திரன், ஆசிரியர் இதயராஜ், செல்வக்குமார், ஆலய தலைவர் தெனிசன் மற்றும் ஆலய நிர்வாகத்தினர், கிராம மக்கள் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டனர். நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனின் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் அன்னதான மண்டபம் அமைக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (159)



## மாந்தை மேற்கு இளையோருக்கு கணினி நிலையம் திறந்துவைப்பு

முல்லைத்தீவு, ஜூலை 1

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் பாலிநகர் கொல்லவிளாங்குளம் சிவபுரம் ஆகிய கிராமங்களின் இளையோருக்கென 9 லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியில் கணினிப் பயிற்சி வகுப்பு அமைக்கப்பட்டு இயங்கத் தொடங்கியுள்ளது. வன்னிக்குறோஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் இது ஆரம்பிக்கப்பட்டது. வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சி.சிவமோகனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் வன்னிக்குறோஸ் திரிசாரணர் அமைப்பின் இணைப்பாளர் விக்கி அதைத் தொடக்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் வன்னிக்குறோஸ் நிறுவனத்தின் வன்னி இணைப்பாளர் ச.ரூபன், மாந்தைகிழக்கு பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா, உதவித்திட்டமிடல் பணிப்பாளர் நளாயினி ஆகியோரும் இணைந்திருந்தனர். (த-ரி3)



## சிறுத்தைக் குட்டி சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்ப்பாணம் செம்மணி மயானத்துக்கு அண்மையில் சிறுத்தைக் குட்டி சடலமாக மீட்கப்பட்டுள்ளது. ஹைஏஸ் வாகனத்துடன் விபத்துக்கு உள்ளாகி அது இறந்துள்ளதாகப் பயணிகள் தெரிவித்தனர்.

வாகானம் வேகமாக சென்றுகொண்டிருக்கும்போது அரியாலைக்குச் செல்லும் வழியில் சிறுத்தைக் குட்டி வேகமாகச் சென்றபொது வாகனத்தில் மோதுண்டு தலையில் பலத்த அடி காரணமாக உயிரிழந்துள்ளது. இந்தச் சிறுத்தைக் குட்டி பூநகரி காட்டுப் பகுதியூடாக இங்கு வந்திருக்கலாம் என்று மக்கள் தெரிவிக்கின்றனர். (த-7-288)

## அமைச்சர் மனோ கணேசன் – ஆளுநர் ராகவன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூலை1

தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடுமற்றும்இந்துசமயஅலுவலகள்அமைச்சர்மனோகணேசனுக்கும் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் குமிடை யிலான சந்திப்பு கொழும்பிலுள்ளஅமைச்சரின் அலுவலகத்தில்அண்மையில் நடைபெற்றது.

யாழ்ப்பாண குடாநாட்டு மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்கும் நோக்கோடு முன்னெடுக்கப்பட்டுவரும் "வடமராட்சி களப்பு" நன்னீர் திட்டத்துக்கு அமைச்சின் சார்பில் நிதியுதவி வழங்க முன்வந்திருக்கும் அமைச்சர் மனோ கணேசன், வடக்கு மாகாணத்தின் தண்ணீர்ப் பிரச்சினைக்குச் சிறந்த தீர்வு காண்பதற்கு தனது அமைச்சினூடாகஉதவிபுரிவதற்குத் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கு மாகாணத்தில் வளர்ந்துவரும் சமயங்களுக்கிடையிலானபிரச்சினையை உடனடியாக முடிவுக்கு கொண்டுவர வேண்டிய தன் அவசியம் குறித்தும் அதற்காக முன்னெடுக்கக்கூடிய செயற்றிட்டங்கள் குறித்தும் இந்த கலந்துரையாடலின் போதுவிரிவாகஆராயப்பட்டது என்று ஆளுநர் அலுவலகத் தரப்புத்தெரிவித்தது. (த-7)



# குருநாகல் மருத்துவர் மொஹமட் ஷாபி தொடர்பான அறிக்கையைக் கோரினார் பதில் பொலிஸ்மா அதிபர்

கொழும்பு, ஜூலை 1

குருணாகலை போதனா மருத்துவமனையின்யின் பிரசவ மற்றும் மகப்பேற்றுப் பிரிவின் மருத்துவர் சேகு ஷியாப்தீன் மொஹமட் சாபி தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணை குறித்த அறிக்கையைத் தன்னிடம் சமர்ப்பிக்குமாறு பதில் பொலிஸ்மா அதிபர் சந்தன விக்கிரமரட்ன குற்றப்புலனாய்வுப் பிரிவின் மூத்த பிரதி பொலிஸ்மா அதிபர் டி.டபள்யு.ஆர்.பீ.செனவிரத்னவிடம் கேட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

மருத்துவர் சாபி மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணைகள் முறையாக மேற்கொள்ளப்படவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் கடந்த வெள்ளிக்கிழமை பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்திருந்தார். அந்த முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் வகையில் இன்று பதில் பொலிஸ்மா அதிபர் நடவடிக்கைகளை எடுக்கவுள்ளார்.

மருத்துவர் ஷாபி மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான வழக்கு விசாரணைகள் கடந்த வியாழக்கிழமை குருநாகல் நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள கருத்தடை விவகாரம் தொடர்பிலான குற்றச்சாட்டு குறித்து இதுவரை சாட்சிகள் வெளிப்படுத்தப்படவில்லை என குற்றப்புலனாய்வுப்பிரிவு மன்றில் அறிவித்திருந்தது.

அத்துடன், மருத்துவர் ஷாபிக்கு எதிராக முன்வைக்கப்பட்ட பயங்கரவாத ,அடிப்படைவாத அமைப்புக்களுடன் தொடர்புகளைப் பேணியதான குற்றச்சாட்டும் உண்மைக்குபுறம்பானது என விசாரணைகளில் உறுதியாகியுள்ளதாகவும் சி.ஐ.டி நீதி மன்றுக்கு அறிவித்திருந்தது.

இந்தநிலையில், மருத்துவர் ஷாபி தொடர்பிலான விசாரணைகள் முறையாக மேற்கொள்ளப்படவில்லை என்று அத்துரலிய தேரரினால் முறைப்பாடு அளிக்கப்பட்டிருந்த நிலையிலேயே அறிக்கையைத் தருமாறு பதில் பொலிஸ்மா அதிபர் கேட்டிருக்கின்றார். (ம-22)

# குமார வெல்கம பதவி நீக்கம்

கொழும்பு, ஜூலை 1

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் பதுளை மாவட்ட அமைப்பாளர் பதவியிலிருந்து சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம நீக்கப்பட்டுள்ளார்.

இவருக்குப் பதிலாக பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தேனுக விதானகமகே புதிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள் ளார்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பொதுமக்கள் முன்னணிக்கு எதிராகக் கருத்துக்களை வெளியிட்டு வருவதனாலேயே இவர் நீக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. அரச தலைவர் வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ச வரக்கூடாது என்ற கருத்தை இவர் தொடர்ந்தும் தெரிவித்து வந்தமை யும் குறிப்பிடத்தக்கது. (ம)

# இராணுவக் கட்டமைப்பில் பல்வேறுபட்ட மாற்றங்கள்

கொழும்பு, ஜூலை 1

இராணுவத்தின் உயர்மட்ட அதிகாரிகள் பலரது பதவிகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஷ் சேனாநாயக்கவின் உத்தரவின் பேரில் இராணுவ செயலகம் ஆகியவற்றில் பணிபுரியும் அதிகாரிகளின் பதவிகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் மேஜர் ஜெனரல் சத்யபிரிய லியனகே, இராணுவ தொண்டர் படைகளின் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளதுடன் ஏற்கனவே அவர் வகித்து வந்த, மேல் மாகாணம் மற்றும் புத்தளம் மாவட்டத்தை உள்ளடக்கிய கூட்டு நடவடிக்கைத் தளபதி பதவியையும் அவர் தொடரவுள்ளதாக கூறப்படுகின்றது.

அதேபோன்று யாழ்.படைகளின் தலைமையக தளபதியாக இருக்கும் மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி அப்பதவியில் இருந்து நீக்கப்பட்டு ஜூலை 17ஆம் திகதி முதல் பாதுகாப்பு அமைச்சில் மத தீவிரவாதம், வன்முறை அடிப்படைவாதம் மற்றும் தீவிரவாதத்தை தடுக்கும் மற்றும் முறியடிக்கும் தேசிய திட்டத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும்புதியஇராணுவபிரதி தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் குமுது பெரேரா நியமிக்கப்பட்டுள்ளதுடன் 59ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியான மேஜர் ஜெனரல் ருவன் வணிகசூரிய, யாழ். படைகளின் தலைமையக தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் இராணுவத் தலைமையகத்தில் ஆயுத தளபாடப் பிரிவின் மாஸ்டர் ஜெனரலாக இருந்த மேஜர் ஜெனரல் ஜெகத் குணவர்த்தன அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டு வன்னிப் படைகளின் தலைமையக தளபதியாகவும் 24ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாக இருக்கும் மேஜர் ஜெனரல் மகிந்த முதலிகே, அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டு மேற்கு படைகளின் தலைமையக தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேபோன்று முதன்மை களபொறியலாளராக இருந்த மேஜர் ஜெனரல் ஆர்.கே.பிபீரிஸ், இராணுவ தலைமையக ஆயுத தளபாடப் பிரிவின் மாஸ்டர் ஜெனரலாகவும் 11ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாகப் பணியாற்றிய, மேஜர் ஜெனரல் திஸ்ஸ நாணயக்கார, இராணுவத் தலைமையகத்தின் முதன்மை கள பொறியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

54ஆவது டிவிசன் கட்டளை அதிகாரியான மேஜர் ஜெனரல் சேனாரத் பண்டார, 11ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இதேவேளை 14 பிரிகேடியர்களின் பதவிகளிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (ம-22)

# குருநாகல் மருத்துவர் ஷாபியை தடுத்து வைத்திருக்க முடியாது!

## குற்றப்புலனாய்வுத் திணைக்களம் அறிவிப்பு

*கொழும்பு, ஜூலை 1*

குருநாகல் போதனா மருத்துவமனையின் மகப்பேற்று மருத்துவர் சேகு சிஹாப்தீன் ஷாபியை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தொடர்ந்தும் தடுத்து வைக்க முடியாது எனப் பாதுகாப்பு அமைச்சுக்கு அறிக்கையிடுவதற்கு குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.




மருத்துவர் ஷாபிக்கு எதிராக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியாது என குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது. குருநாகல் போதனா மருத்துவமனையில் சேவையாற்றிய மருத்துவர் ஷாபி, கடந்த மே மாதம் 24ஆம் திகதி இரவு மூன்று குற்றச்சாட்டுக்களின் கீழ் கைதுசெய்யப்பட்டார்.

பயங்கரவாதக் குழுவிடம் பணம் பெற்று அந்தக் குழுவின் நோக்கங்களை நிறைவேற்றியமை, அந்த நிதியூடாக சொத்துக்களைக் கொள்வனவு செய்தமை, பிரதேசத்தில் காணப்படும் அமைதியற்ற நிலமையில் இனங்களுக்கிடையில் பிரச்சினை ஏற்படுவதைத் தடுக்காமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் அவர் கைதுசெய்யப்பட்டார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், 90 நாள்கள் தடுத்து வைக்கும் உத்தரவுக்கமைய, அவரைத் தடுத்து வைத்து விசாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்தநிலையில், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தி னரால், பி 210 அறிக்கையுடன் குருநாகல் நீதிவான் நீதிமன்றத்தில் சந்தேகநபர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முன்னிலைப்படுத்தப்பட்டார். மருத்து வர் பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புபடவில்லை என்று மன்றில் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபர் மற்றும் அவரின் குடும்பத்தினரின் சொத்துக்களை அதிகாரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தியபோது முறையற்ற வகையில் பணம் சம்பாதித்துள்ளமை குறித்து தெரியவரவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, குறித்த மகப்பேற்று மருத்துவர் ஷாபி, சிசேரியன் அறுவைச் சிகிச்சை என்ற போர்வையில் சிங்களப் பெண்களுக்குக் கருத்தடை அறுவை சிகிச்சை செய்தார் எனக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணைகளூடாக தகவல்கள் வெளியாகவில்லை என்றும் குற்றப்பு லனாய்வுப் திணைக்களம் நீதிமன்று க்கு அறிவித்துள்ளது.

மருத்துவர் ஷாபி, தொடர்ந்தும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பொறுப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், விசாரணையின் முன்னேற்ற அறிக்கை அடுத்த மாதம் 11ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (ம)

# சாவுத் தண்டனை குறித்த அரசதலைவரின் உத்தரவு இன்னும் கிடைக்கவில்லை

## நீதி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 1

சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட நான்கு போதைப் பொருள் குற்றவாளி களைத் தூக்கிலிடுவது தொடர்பான அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவு, இன்னமும் நீதி அமைச்சுக்கு அனுப்பப்படவில்லை என நீதி அமைச்சு அறிவித்துள்ளது.



நான்கு குற்றவாளிகளுக்கு சாவுத் தண்டனையை நிறைவேற்றும் ஆணையில் தான் கைச்சாத்திட்டுள்ளார் என்றும் அதற்கிணங்க விரைவில் நால்வருக்கு முதற்கட்டமாக சாவுத் தண்டனை விதிக்கப்படும் என்றும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

இவரது இந்த கருத்தானது சமகால அரசியலில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. எனினும், சாவுத் தண்டனையை நிறைவேற்றுவது குறித்து, அரச தலைவர் கைச்சாத்திட்ட ஆணை எதுவும், நீதியமைச்சுக்கு இன்னமும் கிடைக்கவில்லை என்று நீதியமைச்சின் செயலர் மீகஸ்முல்ல தெரிவித்துள்ளார். (ம)


# அதிகாலை கோர விபத்து 3 பெண்கள் துயரச் சாவு!

## *6 பேர் படுகாயம்*

அனுராதபுரம், ஜூலை 1

அனுராதபுரம் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் மூன்று பெண்கள் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். அத்துடன், மேலும் மூன்று பெண்கள் உட்பட 6 பேர் படுகாயமடைந்தனர்.

தலாவ மொரகொட சந்தியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




தம்புத்தேகமயில் இருந்து அனுராதபுரம் நோக்கிப் பயணித்த மூடுந்தும, அனுராதபுரத்தில் இருந்து தம்புத்தேகம நோக்கிப் பயணித்த லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

வானில் பயணித்த கல்நேவ பிரதேசத்தைச் சேர்ந்த பெண்களே உயிரிழந்துள்ளனர். அத்துடன், அந்த வானில் பயணித்த மேலும் 3 பெண்கள் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அதேவேளை, லொறியின் சாரதி மற்றும் இரு உதவியாளர்களும் இந்த விபத்தில் காயமடைந்துள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-22)

# சர்வதிகார ஆட்சியை கொண்டுவர மீண்டும் முயற்சிக்கிறார் மைத்திரி

## மக்கள் கருத்தைப் பெறும் குழுவின் தலைவர் சட்டத்தரணி லால் விஜேநாயக்க தெரிவித்தார்

*கொழும்பு, ஜூலை 1*

சர்வாதிகார ஆட்சியை மீண்டும் கொண்டுவருவதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முயற்சிக்கின்றார் என்று புதிய அரசமைப்புத் தொடர்பாக மக்கள் கருத்தைப் பெறும் குழுவின் தலைவர், சட்டத்தரணி லால் விஜேநாயக்க தெரிவித்தார்.

அரச தலைவரின் அதிகாரங்களை வரையறுப்பதாக உறுதிமொழியளித்துவிட்டு ஆட்சிக்கு வந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மீண்டும் நிறைவேற்று அதிகாரத்தைக் கோரி பலவித கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

கண்டி மனிதவுரிமைகள் காரியாலயத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற சித்திரவதைகளுக்கு உள்ளானவர்களுக்கான பன்னாட்டுத் தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: சுயாதீன நிறுவனங்களுக்காக தமக்கு தேவையானவர்களை நியமிக்க முடியாது என்றும், நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாது என்றும் கூறும் அரச தலைவர், முன்னாள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர்கள் நாடாளுமன்றத்தை பணயம் வைத்து செயற்பட்ட விதத்தில் தனக்கும் செயற்பட முடியாதுள்ளது என்பது குறித்து கவலையடைந்திருப்பதை சுட்டிக்காட்டுவதற்கு முயற்சிக்கிறார். இதனூடாக பொதுமக்கள் கோரியிருந்த சுயாதீன ஆட்சி முறைக்கு பதிலாக மீண்டும் சர்வாதிகார ஆட்சியை அமைக்க அவர் திட்டமிடுகிறார்.

இன்றளவில் இலங்கை மக்களின் மனிதவுரிமைகள் 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் ஊடாகவே பாதுகாக்கப்பட்டுள்ளன. அதன் முழு கட்டுப்பாடும் சுயாதீன ஆணைக்குழுவின் வசம் உள்ளது.

பொலிஸ் துறையை சுயாதீனமாக செயற்படுவதற்கும் இந்த 19ஆவது திருத்தமே வழிவகுத்துள்ளது. அதனால், அமைச்சர்களின் மனைவியையோ, மகளையோ சட்டத்தின் முன் கொண்டு வருவதற்கும் பொலிஸாருக்கு இன்று சுயாதீன அதிகாரம் உள்ளது. அதற்கு உதாரணமாக அரச தலைவர் செயலகத்தின் செயற்குழு பிரதானியை கைது செய்வதற்கு அண்மையில் வாய்ப்பு கிடைத்தது.

அதேபோன்று கடந்த ஒகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற அரசியல் சதித்திட்டத்தை முறியடிக்கும் வகையில் நீதிமன்றத்தினால் சுயாதீன தீர்ப்பை வழங்க முடியுமாக இருந்தது. எனினும் துரதிஷ்டவசமாக இந்த போராட்டத்தை மறுபுறம் புரட்டுவதற்கு நாட்டின் பிரதானியான அரச தலைவர் செயற்பட்டமை வருந்தத்தக்கது. தனக்கு ஏறத்தாழ 60 இலட்சம் பேர் வாக்களித்தார்கள் என்று அரச தலைவர் கூறுகிறார். எனினும் 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நடைமுறைக்கு கொண்டு வருமாறு வலியுறுத்திதான் பொதுமக்கள் வாக்களித்தார்கள். அதிலுள்ள விதிகளை நடைமுறைப்படுத்துமாறும், சுயாதீன ஆணைக்குழுவை அமைப்பது அவசியம் என்று வலியுறுத்தியே நாட்டு மக்கள் வாக்களித்தார்கள் என்பதை அவர் நினைவில் கொள்ள வேண்டும்.

அரச தலைவரின் அதிகாரத்தை குறைத்து, அவற்றை நாடாளுமன்றத்திடம் கையளிக்குமாறு பொதுமக்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியிருந்தார்கள். எனினும் துரதிஷ்டவசமாக அந்த செயற்பாடுகள் எதுவும் சீராக இடம்பெறவில்லை - என்றார். (ம)

# தென்மாகாண பாடசாலைகளில் கற்கைநேரங்கள் நீடிக்கப்பட்டன

கொழும்பு, ஜூலை 1

தென் மாகாண சபைக்குச் சொந்தமான அரச பாடசாலைகள் அனைத்தும் எதிர்வரும் திங்கள் முதல் பிற்பகல் 2.30 மணி வரை செயற்பட வேண்டும் என தென்மாகாண ஆளுநர் காரியாலயத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் தென் மாகாண ஆளுநர் அலுவலகத்திலிருந்து தொலைபேசி மூலம் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இருப்பினும், இதற்கான காரணம் இதுவரையில் அறிவிக்கப்படவில்லையெனவும் கூறப்படுகின்றது.

தென் மாகாணத்திலுள்ள தேசிய பாடசாலைகளுக்கு இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படாது. அந்தப் பாடசாலைகள் வழமை போன்று 1.30 மணிக்கு விடப்படும் எனவும் குறிப்பிடப்படுகின்றது. (ம)



கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயத்தக்கோரி கதிர்காம யாத்திரை நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு முன்பாக கடந்த வாரம் உணவொறுப்பை மேற்கொண்டிருந்த உண்ணாவிரதிகளுள் ஒருவரான பாண்டிருப்பு அனைத்து ஆலயங்களின் தலைவர் கி.லிங்கேஸ்வரன் தலைமையில் வடக்கு பிரதேச செயலகமுன்பாக இந்த யாத்திரை ஆரம்பிக்கப்பட்டது. (ம)

# சட்டவிரோத தொடர்பாடல் நிலையங்கள் சுற்றிவளைப்பு

கொழும்பு, ஜூலை 1

முல்லேரியா, கல்ஹேன வீதியிலுள்ள பிரதேசத்தில் அனுமதிப் பத்திரம் இன்றி நடத்தப்பட்டு வந்த சட்டவிரோத தொடர்பாடல் நிலையங்கள் நேற்றுமுன்தினம் சுற்றிவளைக்கப்பட்டன. அவை தொடர்பான மேலதிகவிசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த பெண்ணொருவரும், இலங்கையைச் சேர்ந்த அவரது கணவரும், இன்னொருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் இருந்து ஆயிரத்து 764 சிம்காட்டுகள், 30 கையடக்கத் தொலைபேசிகள், 7 ரவுட்டர்கள் உட்பட முக்கிய பல பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. (ம)

# சிதைந்த நிலையில் இரண்டு சடலங்கள்

கொழும்பு, ஜூலை 1



புத்தளம் மாவட்டத்தின் இரண்டு பிரதேசங்களின் கடற்கரைப் பகுதியில் இருந்து இரண்டு சடலங்கள் கரை ஒதுங்கியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நுரைச்சோலைபொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலுவ நிர்மலபுர கடற்கரை பகுதியில் இருந்து ஒரு சடலமும், ஆராச்சிக்கட்டு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முத்துபந்தி கடற்கரையில் இருந்து மற்றொருவரின் சடலமும் கரை ஒதுங்கியுள்ளன.

மீட்கப்பட்ட சடலங்கள் அடையாளங்காண முடியாத வகையில் சிதைவடைந்துள்ளன. அதில் நுரைச்சோலை பகுதியில் கண்டெடுக்கப்பட்ட சடலத்தின் உடலில் காணப்பட்ட தடயப் பொருள்களை ஆராய்ந்ததில் இந்திய நாட்டவராக இருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

# சுகாதாரத் துறையில் பல்வேறு ஊழல்கள்!

## மைத்திரி அதிருப்தி

கொழும்பு, ஜூலை 1



மருந்துப் பொருள்களும், வைத்திய உபகரணங்களும் கொள்வனவு செய்யும் போது அதனால், மக்களுக்கு கிடைக்கும் பயன்களை விடவும், பாரியளவு நிதி மோசடி செய்யப்படுகிறது. மேலைத்தேய மருத்துவ துறையில் இது பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது என்று தெரிவித்தார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன.

மனம்பிட்டிய கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலையின் புதிய கட்டடத் தொகுதியை திறந்து வைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அரச தலைவர் இதைத் தெரிவித்தார்.

மேலைத்தேய மருத்துவத்துறை எவ்வளவுதான் முன்னேற்றம் கண்டிருந்த போதிலும், எமது நாட்டின் சுதேச மருத்துவத்துறையின் பெறுமதியை இதுவரையில் மிஞ்ச முடியாதுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ம)

# அரசுக்கெதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்துக்கு கூட்டு எதிரணி ஆதரவு வழங்காதமை ஆச்சரியமே!

## இது சிந்திக்க வேண்டிய பிரச்சினை என்று தெரிவித்தார் ரில்வின் சில்வா

கொழும்பு, ஜூலை 1

அரசுக்கு எதிராகக் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவு வழங்க அரசைக் கடுமையாக எதிர்த்து வரும் கூட்டு எதிரணி மறுப்புத் தெரிவித்துள்ளமை சிந்திக்க வேண்டிய ஒரு பிரச்சினையாகும் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

அனுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற பொதுக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

கடந்த ஏப்ரல் 21 பயங்கரவாதத் தாக்குதலுக்கு எதிராக முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டது. ஆனால் தலைமை அமைச்சர் உட்பட சம்பந்தப்பட்ட அமைச்சுக்களில் உள்ள சகலரும் இந்தத் தாக்குதல் சம்பவத்துக்குப் பொறுப்புச் சொல்ல வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி கருதுகின்றது. இதனாலேயே நம்பிக்கையில்லாப் பிரேரணையை அரசுக்கு எதிராக கொண்டு வந்தோம். அரசை எதிர்க்கும் கூட்டு எதிரணி ஏன் இதற்கு ஆதரவு வழங்காமல் இருக்கின்றது என்பது ஆச்சரியமாகவுள்ளது -



என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# கண்டியில் சுமார் 10 ஆயிரம் பிக்குகளை திரட்டவுள்ளது பொதுபலசேனா அமைப்பு

கொழும்பு, ஜூலை 1
கண்டி தலதா மாளிகை திடலில் எதிர்வரும் 7ஆம் திகதி பௌத்த பிக்குகள் மாநாடு ஒன்றைப் பொதுபலசேனா அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது. சுமார் ஒரு இலட்சம் பொது மக்கள்மற்றும்10ஆயிரம்பிக்குகள்கலந்துகொள்ள உள்ள இந்த மாநாட்டில் முக்கி யமான தீர்மானங்கள் எடுக்கப்பட உள்ளதாககூறப்படுகிறது.

இலங்கையில் இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்கவும் அனைத்து இன மக்களையும் ஒரு சட்டத்துக்குக் கீழ் கொண்டு வருவதுமே இந்த மாநாட்டின் முக்கிய நோக்கம் என்று பொது பலசேனா தெரிவித்துள்ளது.
இதன்போது முஸ்லிம் மக்களின் ஆடை விவகாரம், ஹலால், மத்ரஷா, காதிக்கோர்ட் சட்டம் மற்றும் தௌஹீத் பள்ளிவாசல்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு எதிராக தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு அவை அரசிடம் கையளிக்கப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.
உயிர்த்தஞாயிறு தாக்குதலின் பின்னர் முஸ்லிம்க ளுக்கு எதிரான அடக்குமுறை நாடளாவிய ரீதியில் பரவலாக இடம்பெற்று வருகின்றது. பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொடஅத்தே ஞானசார தேரர், அத்துரலிய ரதன தேரர் ஆகியோர் அத்தகைய அடக்குமுறைகளுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றனர், அனுசரணை வழங்குகின்றனர் என்று குற்றச்சாட்டு உள்ளது. இவ்வாறிருக்க பொதுபலசேனா அமைப்பு ஏற்பாடு செய்துள்ள இந்த மாநாடு இலங்கை அரசியலரங்கைப் பரபரப்பாக்கியுள்ளது. (ம)

## ஆளுநர் முஸம்மில் மீது குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 1
பியகம - மாபிம பகுதியில் நுகர்விற்கு உதவாத தானியங்களைக் கொண்டிருந்த களஞ்சியசாலை மீது சட்ட நடவடிக்கை எடுப்பதை தடுப்பதற்கு மேல் மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் நடவடிக்கை எடுத்தார் என்று இலங்கை பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கம் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளது.
கடந்த 25ஆம் திகதி நூர் மொஹமட் மொஹமட் சித்திக் எனும் நபருக்கு உரித்தான களஞ்சியசாலையைப் பரிசோதனைக்கு உட்படுத்தியபோது நுகர்வுக்கு உதவாத சுமார் 7 லட்சத்து 58 ஆயிரம் கிலோகிராம் தானியங்கள் கைப்பற்றப்பட்டதாகக் குறித்த சங்கம் அறிக்கையூடாக தெரிவித்துள்ளது.
இதனையடுத்து, மாகொல்ல தெற்கு மற்றும் ஹெய்யன்துட்டுவ பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் குறித்த களஞ்சியசாலைக்கு சீல் வைக்கப்பட்டது.
நுகர்வுக்கு உதவாத பருப்பு, பாசிப்பருப்பு, கௌப்பி ஆகியன அதில் அடங்குவதுடன், அவற்றில் வண்டுகள் காணப்பட்டதாகப் பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.
மேல் மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில், சுற்றிவளைப்பை மேற்கொண்டிருந்த அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு ஏற்படும் வகையில் அச்சுறுத்தல் விடுத்ததாக இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் செயலர் மஹேந்திர பாலசூரிய குறிப்பிட்டுள்ளார். (ம)

# இனரீதியான பிளவுகள் ஒருபோதும் நல்லதல்ல

## மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 1
நாட்டில் இன ரீதியாகப் பிரிந்து வேறுபட்டு பிரச்சினைகளை ஏற்படுத்திக்கொள்வது எந்தவொரு இனத்துக்கும் நல்லதல்ல என அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாட்டின் அனைத்து இனங்களும் சகோதரத்துவத்துடனும் ஐக்கியத்துடனும் வாழக்கூடிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துக்காக நான் அர்ப்பணிப்புடன் உள்ளேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.
பொலன்னறுவை, தம்பாளை அல்ஹிலால் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் புதிய மூன்று மாடி விஞ்ஞான ஆய்வுகூடக் கட்டடத்தை மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வில் நேற்றுமுன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அரச தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.
அனைத்து மக்களும் சகோதரத்துவத்துடன் வாழக்கூடிய ஒழுக்கப் பண்பாட்டையும் அமைதியையும் கொண்ட ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு, நாட்டின் அனைத்துப் பிள்ளைகளுக்கும் சிறந்த கல்வியை பெற்றுக்கொடுப்பது அவசியமாகும் எனவும் அரச தலைவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ம)




## மட்டு. சீயோன் தேவாலயத்துக்கு ரணில் நேற்றுமுன்தினம் பயணம்



கொழும்பு, ஜூலை 1
கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி பயங்கரவாத தாக்குதலுக்குள்ளான மட்டக்களப்பு சீயோன் கிறிஸ்தவ ஆலயத்துக்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் கண்காணிப்புப் பயணமொன்றை மேற்கொண்டார்.
இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் மறுசீரமைப்புப் பணிகள் தொடர்பில் தலைமை அமைச்சர் இதன்போது கேட்டறிந்து கொண்டுள்ளார். இந்தப் பணிகளில் ஈடுபட்டுள்ள படையினருக்குத் தலைமை அமைச்சர் தமது பாராட்டுக்களையும் தெரிவித்தார். (ம)

## சட்டவிரோதமாகக் கடத்தப்பட்ட பெருந்தொகை நகைகள் மீட்பு



கொழும்பு, ஜூலை 1
சிங்கப்பூர் தம்பதியினரால் சட்டவிரோதமான முறையில் கடத்தி வரப்பட்ட 2 கோடியே 60 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை கட்டுநாயக்க வானூர்தி நிலைய சுங்கப் பிரிவு அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.
55 மற்றும் 45 வயது மதிக்கதக்க இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
சம்பவம் தொடர்பில் சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## இலங்கைக்கு புலனாய்வுத் தகவலை வழங்க பன்னாட்டுச் சமூகம் இணக்கம்

கொழும்பு, ஜூலை 1
இலங்கைக்கு பயங்கரவாத செயற்பாடுகள் தொடர்பாக புலனாய்வுத் தகவல்களைப் பரிமாறிக்கொள்ள சில வலய நாடுகள் இணக்கம் தெரிவித்துள்ளன.
சட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஒத்துழைப்புக்கான ஜகார்த்தா மத்திய நிலையம் ஏற்பாடு செய்திருந்த பயங்கரவாத ஒழிப்பு மாநாடு இந்தோனேசியாவில் நடைபெற்றது. இதன்போதே இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க சில நாடுகள் இணக்கம் தெரிவித்தன.
இதற்காக ஒத்துழைப்பு வழங்கும் நாடுகளில் அமெரிக்கா, பிரிட்டன், நெதர்லாந்து, இந்தோனேசியா, ஆஸ்ரேலியா மற்றும் கனடா ஆகிய நாடுகள் உள்ளடங்குகின்றன.
இந்த பயங்கரவாத ஒழிப்பு மாநாட்டில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி, பயங்கரவாத தடுப்பு பிரிவு, அரச புலனாய்வு பிரிவு மற்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் சிலர் கலந்துகொண்டனர்.
இதன்போது, பயங்கரவாதத் தடுப்பு தொடர்பாக அதிகாரிகளுக்குப் பயிற்சியளிக்கும்போது இலங்கைக்கு முன்னுரிமை வழங்குவதற்கு வலய நாடுகள் இணக்கம் தெரிவித்துள்ளன. (ம)

# ஒரு நாட்டுக்குள் இரு அதிகார அலகு இருப்பது ஆரோக்கியமாக அமையா

## மகிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 1
ஒரு நாட்டுக்குள் இரு அதிகார அலகுகள் இருக்கக் கூடாது எனவும், ஒன்றில் அரச தலைவர் முறைமையின் கீழ் ஆட்சி இடம்பெற வேண்டும் அல்லது நாடாளுமன்றத்துக்கு அதிகாரத்தைக் கொடுத்து தலைமை அமைச்சர் ஆட்சி இடம்பெற வேண்டும் எனவும் எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
மாத்தறையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.
18ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தின் கீழ் மன்னர் ஆட்சி முறைமையை நான் ஏற்படுத்தியதாக சிலர் குற்றம்சாட்டினர். இப்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலமையை தெளிவாக புரிந்துகொள்ள முடிகிறது - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## ஆயுத...

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

நேற்றுத் தமிழரசுக் கட்சியின் பேராளர் மாநாடு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

போர்க் காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அழிக்கப்படுவதற்கு முன்னர் ஒவ்வொரு அரசின் காலத்திலும் தீர்வு தொடர்பாக முன்னேற்றங்கள் ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் இடம்பெற்றன. சந்திரிகாவுடைய காலத்தில், மகிந்த காலத்திலும் கூட பல பேச்சுக்கள் இடம்பெற்றன.

புலிகள் அழிக்கப்பட்டதன் பின்னர் அவர்கள் இல்லாமல் போனதன் பின்னர் புதிய அரசின் கீழ் புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டும் என்று 2011ஆம் ஆண்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் நாடாளுமன்றம் மாற்றியமைக்கப்பட்டு, பல குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு பல முயற்சிகள் நடைபெற்றன.

தற்போது ஆயுதம் ஏந்தியவர்கள் எங்கள் சார்பில் செயற்பட இல்லாமல் இருக்கின்ற ஒரு சூழ்நிலையில் அந்த அரசமைப்பு பின்நகர்த்தப்படும் அல்லது அதை இல்லாமல் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆயுதம் ஏந்தினால்தான் அரசியல் தீர்வு தொடர்பாக நீங்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுக்கலாம் என்றும், ஆயுதப் போராட்டம் இல்லாதுவிட்டால், ஆயுத பலம் இல்லாது விட்டால் அவற்றைக் கைவிடலாம் என்று நீங்கள் நினைப்பீர்களானால் அது ஒரு தவறான நிலைப்பாடு.

#### வாக்குறுதிகள்

போர் நடைபெற்ற போது அரசுகள் ஐரோப்பா, இந்தியா, ஐக்கியநாடுகள் சபை உள்ளிட்ட பலருக்கு ஒரு வாக்குறுதி கொடுத்தார்கள் நாங்கள் இந்தப் பிரச்சினையை அரசியல் ரீதியாகத் தீர்ப்போம் என்று. அந்த வாக்குறுதியின் அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு பன்னாடுகளும் இலங்கை அரசுக்கு பல்வேறு உதவிகளை வழங்கினார்கள். அதிகமான உதவிகள் வழங்கப்பட்டதால் விடுதலைப் புலிகள் இல்லாமல் செய்யப்பட்டார்கள். அவர்கள் இன்று இல்லாமல் செய்யப்பட்டன் பின்னர் உங்களுடைய (அரசு) வாக்குறுதிகள் காற்றில் பறக்கின்றன. வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் நிலையில் இருப்பதாக எமக்கு தெரியவில்லை. ஆனால் அதை நிறைவேற்ற வேண்டிய ஒரு கடப்பாடு உங்களுக்கு இருக்கிறது.

#### முழுமை இல்லை

ராஜீவ்காந்தியின் காலத்தில் அவருடைய தலையீட்டின் காரணமாக 13ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு முதன்முறையாக ஓர் அதிகாரப் பகிர்வு ஏற்பட்டது. அதனடிப்படையில் எங்களுக்கு ஓரளவுக்கு இணைந்த வடக்கு, கிழக்கில் சுயாட்சி கிடைத்தது. ஆனால் அதுவும் போதுமானது அல்ல. அது முழுமை பெற வேண்டும், அது நிறைவுபெறவேண்டும்.

உலகில் பல்வேறு நாடுகளில் பல்வேறு ஆட்சி முறைகள் அதிகாரப் பகிர்வின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட வரலாறும் உண்டு. ஆசியாவில், ஐரோப்பாவில், கனடாவில் ஆஸ்திரேலியாவில் பலநாடுகளில் பலவிதமான ஆட்சி முறைகள் இருந்தன. 13ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்ட பின்னர் பிரேமதாசா, சந்திரிக்கா, மகிந்த ஆகியோரது ஆட்சிக் காலத்தில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அது உறுதி செய்யப்படவில்லை. அரசியல் யாப்புக்குள் உள்வாங்கப்படவில்லை. அது நிறைவு செய்யப்பட வேண்டும்.

#### நிர்ப்பந்தம்

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதம் ஏந்திப் போராடியது எமது பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் நீண்டகாலமாக நாங்கள் ஏமாற்றப்பட்டதற்கு நீதி கேட்டே. ஏறத்தாழ 40 வருடங்களாக எமது இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடவில்லை. சாத்வீக வழியில் போராடினோம், இராஜதந்திர ரீதியில் போராடினோம், எங்களிடம் ஒப்பந்தம் செய்தார்கள், பேச்சுக்களை நடத்தினார்கள், ஆனால் பிரச்சினை தீரவில்லை. அதற்கு மாறாக தமிழ் மக்கள் மீது அட்டூழியம், பலாத்காரம் பயன்படுத்தப்பட்டது. அந்தச் சூழலில் தான் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆயுதம் ஏந்திப் போராடிய போது அவர்கள் பலவிதமான தாக்குதல்களில் ஈடுபட்டார்கள்.

#### ஒன்றுமை அவசியம்

அந்தச் சூழலிலேயே நீங்கள் பன்னாடுகளுக்கும் வாக்குறுதி வழங்கினீர்கள். உங்களுடைய உதவி தேவை, விடுதலைப் புலிகளை அழிக்க வேண்டும், இவர்களை அழித்தால் நாங்கள் அரசில் தீர்வை ஏற்படுத்துவோம் என்று நீங்கள் பன்னாடுகளிடமும் கேட்டீர்கள். இப்போது அதை மறந்து பேசுகின்றீர்கள். அதனை ஞாபகமூட்டுகின்றோம். இந்தச் சூழலிலேயே இந்த மாநாடு இடம்பெறுகின்றது. எமது மக்கள் உறுதியாகவுள்ளனர். ஒற்றுமையாக நிற்கின்றனர், எமது மக்கள் ஒருமித்து நிக்கின்றனர் அவர்கள் எமக்குப் பின்னால் நிற்பார்கள். அவர்களுடைய ஆதரவு எமக்கு இருக்கிறது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு இருக்கிறது. தந்தை செல்வாவுடைய கொள்கை இருக்கிறது. அந்த அடிப்டையில் எமக்குள் ஒற்றுமை இருக்கவேண்டும். ஒற்றுமை மிகவும் பலமான ஆயுதம். நாட்டில் அரசியல் குழப்பம் ஏற்பட்டபோது எமது ஒற்றுமை நாட்டினுடைய ஆட்சி முறையைக் கூடத் தீர்மானித்துள்ளது. நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாக நிற்க வேண்டும் எமது இலக்கை அடைய வேண்டும்.

#### விகிதாசாரத்தை மாற்ற முயற்சி

எமது பிரதேசங்களில் விசேடமாக கிழக்கு மாகாணத்தில், தற்போது வடக்கு மாகாணத்தில் குடியேற்றங்கள் இடம்பெற்று வருகின்றன. சனத்தொகையின் விகிதாசாரத்தை மாற்றியமைக்கும் வகையில் பல்வேறு முனைகளில் பல்வேறு வழிகளில் பல கருமங்கள் ஏற்படுகின்றன.

காணி விடயத்தில் வனவளத் திணைக்களம் , வனஜீவராசிகள் திணைக்களம், மகாவலி திணைக்களம் என பல்வேறு காணி அதிகாரங்களைப் பயன்படுத்தி அதன் மூலமாக குடிபெயர்ந்த மக்கள் தமது சொந்தக் காணிக்குத் திரும்ப முடியாத நிலைமையையும், சொந்தக் காணியில் விவசாயம் செய்யமுடியாத நிலையையும், அதே நேரத்தில் வெவ்வேறு மாவட்டங்களைச்சேர்ந்த மக்களைக் கொண்டுவந்து நாங்கள் வாழ்ந்த, விவசாயம் செய்த நிலங்களில் கூட குடியமர்த்தும் நிலைமை உருவாகி வருவதை நாங்கள் காண்கின்றோம். இந்தவிதமான நிகழ்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக அதிகாரப் பகிர்வைத் தமிழர்களுக்கு வழங்காமல் தட்டிக்கழிப்பது போல் எமக்குத் தெரிகிறது. இதை நாங்கள் அனுமதிக்க முடியாது. அனுமதிக்கவும் மாட்டோம். விரைவில் ஒரு முடிவு காணுவோம். என்றார். (எ-21)

## கூட்டாட்சி....

உரிமை அடிப்படையில் கூட்டாட்சிக் கட்டமைப்பில் பிராந்தியங்களினதும், ,தேசிய இனங்களினதும் தன்னாட்சி உரித்தை உறுதிப்படுத்தும் வகையில் அமைய வேண்டும். இவ்வாறு நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேராளர் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேராளர் மாநாடு அந்தக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா தலைமையில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் உட்படக் கட்சியின் முக்கியஸ்தர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டிருந்தனர். அந்த மாநாட்டில் 27 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானங்களைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாநாட்டில் ஒப்பிவித்தனர்.

மாநாட்டில் அரசியல் தீர்வு, ஐ.நா.மனித உரிமைத் தீர்மானம், ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தீர்வு, மீள்குடியேற்றம், கைதிகள் விடுவிப்பம் பயங்கரவாத தடைச்சட்டமும், தொழில் வேலைவாய்ப்பு, போராளிகள் ஜனநாயக நீரோட்டத்தில் இணைப்பு, பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், தொழில் துறைகள், தெங்குபனம் பொருள் அபிவிருத்தி, கல்வி, நில,நீர் உரிமை நிலைநாட்டல், வங்கிக் கடன் இரத்து, தொழிற்சங்க உரிமை, ஊடகவியலாளர், போதைப்பொருள் ஒழிப்பு போன்ற விடயதானங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இலங்கையில் கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழினப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஏற்படாத காரணத்தால் இடம்பெற்று வரும் ஜனநாயக வழிப் போராட்டங்களாலும், ஆயுதப் போரின் விளைவுகளாலும், 2012 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான ஐ.நா.மனித உரிமைப் பேரவைத் தீர்மானங்களாலும், சர்வதேச சமூகத்தின் தலையீடுகளாலும் இலங்கை இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும் என்ற அடிப்படையில் இலங்கைப் நாடாளுமன்றத்தில் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன் பொருட்டு இடைக்கால அறிக்கை ஒன்று பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. இருந்த பொழுதிலும் தமிழினப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படவில்லை. தாமதங்களும், தடைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை மிக விரைவில் இவ்வாண்டுக்குள் ஏற்படுத்த வேண்டுமென அரசையும், அரசியல் ட்சிகளையும், அனைத்து சமூகங்களிடமும் இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகத்திடமும் இம் மாநாடு வேண்டுகோள் விடுக்கிறது.

அவ் அரசியல் தீர்வானது ஒருமித்த இலங்கை நாட்டில் தமிழ் மக்களின் இறையான்மை, சுய நிர்ணய உரிமை, மனித உரிமை வாழும் உரிமை அடிப்படையில் சமஷ்டிக் கட்டமைப்பில் பிராந்தியங்களினதும் தேசிய இனங்களினதும் தன்னாட்சி உரித்தை உறுதிப்படுத்தும் வகையில் அமைய வேண்டும் என இம் மாநாடு வற்புறுத்துகின்றது என்று அரசியல் தீர்வு தொடர்பாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (எ-21,105)

## காணாமல் ...

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 16ஆவது தேசிய மாநாடு நடைபெற்றது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அந்த மண்டபத்துக்கு முன்பாக மதியம் 12 மணியளவில் ஆர்ப்பாட்டதை ஆரம்பித்தனர். சுமார் 2 மணி நேரம் அவர்களின் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினை தொடர்பாக எந்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோதும் தம்முடன் எவரும் பேசுவதற்கு வரவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர். அது தமக்குக் கவலையை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர். (எ-37)

## தூக்குத்...

இவ்வாறு சிறிலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டின் அண்மைக்காலமாக வரையரையின்றிப் பெருகி வரும் போதைப் பொருள் பாவனையை இல்லாதொழிப்பதற்காகவே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார். இதற்கு முன்னர் இருந்த தலைவர்களோ அல்லது இப்போதுள்ள அமைச்சர்களோ போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையை கூட இது வரையில் எடுத்ததில்லை. அரச தலைவர் இந்த விடயத்தில் கவனம் செலுத்த ஆரம்பித்ததன் பின்னரே போதைப் பொருள் பாவனையும் கடத்தலும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. அதனுடன் தொடர்புடைய முக்கிய புள்ளிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பன்னாட்டுப் பயணங்கள் மேற்கொள்கின்ற சந்தர்ப்பங்களிலும், பன்னாட்டுத் தலைவர்கள் இலங்கைக்கு வருகின்ற போதிலும் போதைப் பொருளை இல்லாதொழிப்பது தொடர்பில் வலியுறுத்தியுள்ளார்.

அதற்காக முன்னெடுக்கப்படும் எந்தவொரு செயற்திட்டத்துக்கும் இலங்கைக்கு ஆதரவளிக்க தயார் என்று பன்னாடுகள் அரச தலைவரிடம் தெரிவித்துள்ளன. அவ்வாறு கூறிவிட்டு இப்போது தூக்குத் தண்டனைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதில் நியாயமில்லை. என்றார். (எ)

## அரச...

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ச நியமிக்கப்படுவார் என்று எதிர்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியில் அங்கம் வகிக்கும் இடதுசாரி கட்சிகள் இந்த நிலைப்பாடு தொடர்பில் அதிருப்தி தெரிவித்துள்ளன. அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே வாசுதேவ நாணயக்கார இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் பாதுகாப்பு செயலருக்கு எதிராக அமெரிக்காவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் இலங்கையில் அவர் தேர்தலில் போட்டியிடுவதில் தாக்கம் செலுத்தும். அதில் காணப்படும் சட்டரீதியான பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டாலும் தேர்தல் பரப்புரைகளின் போது பாதகமான நிலைமையையே தோற்றுவிக்கும். மக்கள் மத்தியில் அதிருப்தியையும் ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ)

## உடன்பாட்டால்...

அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றேன் என்றும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார்.

இது தொடர்பாக அமெரிக்க தூதரகப் பேச்சாளர் நான்சி வான்ஹோர்ன் கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கை தனது எல்லைக்குள்ளேயும், பிராந்திய கடல் மற்றும் வான் வெளியிலும், அமெரிக்க படையினர், கப்பல்கள், விமானங்கள் நுழைவதற்கு அல்லது வெளியேறுவதற்கு ஒப்புதல் அளிப்பதற்கும், மறுப்பதற்குமான அனைத்து இறையாண்மை உரிமைகளையும் கொண்டிருக்கும்.

இலங்கைக்கு பயிற்சிகள் மற்றும் அதிகார பூர்வ கடமைகளுக்காக வரும், அமெரிக்க படையினர் மற்றும் சிவில் பணியாளர்கள் தொடர்பாக, அமெரிக்காவும், இலங்கையும் , 1995இல் உடன்பாடு ஒன்றை செய்திருந்தன.

இந்த உடன்பாட்டில், தொழில்முறை உரிமங்களின் பரஸ்பர அங்கீகாரம், அமெரிக்க இராணுவ வீரர்கள் மற்றும் பாதுகாப்பு திணைக்கள சிவில் பணியாளர்கள் இலங்கைக்கு எவ்வாறு வரலாம், வழங்கப்பட்ட ஆதரவு சேவைகளுக்கான கட்டணம் மற்றும் வெளிநாட்டு மற்றும் உள்ளூர் ஒப்பந்தக்காரர்களை பணியமர்த்துவதற்கான விதிமுறைகள் போன்றன உள்ளிட்ட சில மேலதிக சிறப்புரிமைகளை உள்ளடக்கும் திருத்தங்களையே முன்மொழிந்திருக்கிறோம். இந்த உடன்பாட்டை புதுப்பிப்பதானது, ஏற்கனவே நடைமுறையில் உள்ள செயல்முறைகளை நெறிப்படுத்தும்

பயங்கரவாத எதிர்ப்பு நடைமுறைகள், கடல்சார் பாதுகாப்பு மற்றும் பொதுவான அக்கறை கொண்ட பிற பிரச்சினைகள் விடயத்தில் இலங்கை இராணுவத்துடன் ஒத்துழைக்க உதவும். இதுபோன்ற உடன்பாடுகளை அமெரிக்கா, பூகோள பங்காளர்களுடன் செய்து கொள்வது பொதுவான நடைமுறையாகும். உலகெங்கிலும் உள்ள 100 க்கும் மேற்பட்ட நாடுகளுடன் இதேபோன்ற உடன்பாடுகளை அமெரிக்கா செய்து கொண்டுள்ளது.

இந்த உடன்பாடுகள், பயிற்சிகள், ஒத்திகைகள் மற்றும் பரிமாற்றங்களுக்கு பரஸ்பரம் ஒப்புக்கொள்வதுடன், இரு நாடுகளின் நலன்களையும் உறுதிப்படுத்தும் வழக்கமான நிர்வாக நடைமுறைகளையும் இலகுபடுத்தும். - என்றார். (எ)

## வரலாற்றில் முதல் முறையாக



# வடகொரியாவில் கால் பதித்தார் ட்ரம்ப்

*சியோல்,ஜூலை 1*

*ஜப்பானின் ஒசாக நகரில் நடந்த ஜி20 மாநாட்டில் பங்குபற்றிவிட்டு நாடு திரும்பிய அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தனது பயணத்தின் இடைநடுவே நேற்றையதினம் வடகொரியாவுக்குச் சென்றார். அங்கு வட கொரிய எல்லையில் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னைச் சந்தித்து, கைகுலுக்கி வாழ்த்துத் தெரிவித்தார். அவருடன் கலந்துரையாடலிலும் ஈடு பட்டார். இது குறித்து மேலும் தெரியவருவதாவது:*

ஜப்பான் நாட்டின் ஒசாகா நகரில் நடைபெற்ற ஜி20 உச்சி மாநாட்டின் நிறைவு நாளான நேற்றுமுன்தினம் வடகொரியா அதிபர் கிம் ஜோங் உன்னைச் சந்தித்து 'ஹலோ' சொல்ல விரும்புவதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் குறிப்பிட்டார். இந்த யோசனை வரவேற்கத்தக்கது என வடகொரியா அரசு தெரிவித்தது. இதைத் தொடர்ந்து. ட்ரம்ப்-கிம் இடையில் அவசர சந்திப்புக்குத் தென்கொரியா அதிபர் மூன் ஜே இன் ஏற்பாடு செய்தார். இந்த நிலையில். தென்கொரியா- வடகொரியா போருக்குப் பின்னர் சமாதானப் பகுதியாக அறிவிக்கப்பட்ட பன்முன்ஜோம் நகரில் வடகொரியா அதிபர் கிம் ஜோங் உன் - ட்ரம்ப் ஆகியோர் சந்தித்தனர். சந்திப்பின்போது தென்கொரியா அதிபர் மூன் ஜே இன் உடனிருந்தார். வடகொரியா எல்லைக்குள் அமெரிக்க அதிபர் முதன்முதலாகக் கால் பதிப்பதால் இந்தச் சந்திப்பை செய்தியாக்குவதற்கு ஆயிரக்கணக்கானச் செய்தியாளர்கள் அங்கு குவிந்தனர். 1950 தொடக்கம் 1953 வரையான காலப்பகுதியில் நடந்த கொரியப் போருக்குப் பின்னர் இதுவரை அமெரிக்க அதிபர்கள் எவரும் வடகொரியாவுக்குச் சென்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## எகிப்து அதிபரின் சாவு குறித்து விரிவான விசாரணை அவசியம்

### *வலியுறுத்துகிறார் துருக்கி அதிபர்*

ஒசாகா.ஜூலை 1

எகிப்தின் முன்னாள் அதிபர் முகமது மோர்சியின் சாவு தொடர்பாக விரிவான விசாரணை நடத்த வேண்டும் எனத் துருக்கியின் அதிபர் எர்டோகன் வலியுறுத்தினார். ஜப்பானில் உள்ள ஒசாகா நகரில் நடந்த ஜி20 உச்சி மாநாட்டில் பங்கேற்றபோதே எர்டோகன் இவ்வாறு தெரிவித்தார். எகிப்தின் முன்னாள் அதிபர் முகமது மோர்சியின் சாவு குறித்து விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும். ஐக்கிய நாடுகள் சபையும் உலக நாடுகளில் உள்ள அரசியல் தலைவர்களும் இந்த விசாரணையை வலியுறுத்த வேண்டும் - என அவர் மேலும் குறிப்பிட்டார்.



**பின்னணி**



எகிப்தில் ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட முதலாவது அதிபர் முகமது மோர்சி. அவரை அதிபர் பதவியில்இருந்துநீக்குவதற்கு 2013ஆம் ஆண்டில் எகிப்தில் பெரும் போராட்டம் நடந்தது. இதையடுத்து. அந்த நாட்டு இராணுவம் அவரைப் பதவியில் இருந்து நீக்கியது. அதிபர் மாளிகையின் முன்பு போராட்டம் நடத்தியவர்களைக் கொல்லுமாறு கட்டளையிட்ட குற்றத்துக்காக. முகமது மோர்சிக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இதனிடையே வழக்கு விசாரணைக்காக அவர் கடந்த வாரம் நீதிமன்றத்தில் முன்னிலையானார். அப்போது நீதிமன்றத்திலே மயங்கிச் சரிந்த அவர் சாவடைந்தார். அவர் மாரடைப்பால் சாவடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும். முகமது மோர்சி கொலை செய்யப்பட்டுள்ளதாக அவரது ஆதரவாளர்கள் குற்றம்சாட்டினர். மோர்சியை எகிப்து அரசு கொன்றுவிட்டதாகத் துருக்கி அதிபர் குற்றம் சாட்டினார்.

see more news in
NEWUTHAYAN.COM

## எல்லைச் சுவர் கட்டுவதற்குத் தடை கலிபோர்ணியா நீதிமன்றம் அதிரடி


மெக்சிக்கோ சிற்றி. ஜூலை 1

அமெரிக்கா - மெக்சிக்கோ இடையே எல்லைச் சுவர் கட்டுவதற்குத் தடை விதித்துத் தீர்ப்பளித்தது அமெரிக்காவின் கலிபேர்ணியா மாநில நீதிமன்றம். அந்த மாநிலத்தின் நீதியரசர் ஹோவுட் கில்லியம் கடந்த வெள்ளிக்கிழமை இந்தத் தீர்ப்பை அளித்தார். கலிபோர்ணிய் அரசு சார்பிலும், சுற்றாடல் பாதுகாப்பு ஆதரவாளர்களும் முன் வைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னரே இந்தத் தீர்ப்புநீதியரசரால் வழங்கப்பட்டது. இந்தச் சுவர் கட்டுவதன் ஊடாகச் சுற்றாடல் மாசடைவதுடன். பல அரிய உயிரினங்களும் அழிந்துப் போகும் அபாயம் உள்ளது என்று நீதியரசர் கில்லியம் தனது தீர்ப்பில் கூறினார். அத்தோடு இராணுவத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து பெறப்படவுள்ள 2.5 பில்லியன் டொலர்களை எல்லைச் சுவருக்காகப் பெற்றமை சட்டவிரோதமானது என்றும் கில்லியம் தெரிவித்தார். இந்தச் சுவர் கட்டுவதற்கு நிதி வழங்க மறுத்து வந்த அமெரிக்காவின் நாடாளுமன்று இதற்காக 4.6பில்லியன் டொலர்களை வழங்குவதாகத் தெரிவித்திருக்கின்ற நிலையிலேயே இந்தத் தீர்ப்பு வெளியாகியுள்ளது. இந்தத் தீர்ப்பு பற்றிக் கருத்துத் தெரிவித்த ட்ரம்ப் இது பெரியதொரு அவமானமான செயல், நான் உடனேயே இதை எதிர்த்து மேன் முறையீடு செய்யப் போகிறேன், எப்படியும் இந்த எல்லைச் சுவர் கட்டப்படும் - என்றார்.

**பின்னணி**

கடந்த தேர்தலின்போது. அமரிக்காவுக்குள் நுழைகின்ற அகதிகளைத் தடுப்பதற்காக அமெரிக்கா - மெக்சிக்கோ இடையே எல்லைச்சுவர் கட்டுவதாக வாக்குறுதியளித்தார் ட்ரம்ப். தேர்தலில் வென்று அதிபரானதும் எல்லைச் சுவர் கட்டுவதற்காக 6.7 பில்லியன் டொலர்களைக் கோரினார். அமெரிக்க நாடாளுமன்று அதை வழங்க மறுத்தது. அதனால் அவசர காலச் சட்டத்தை அறிவித்தார் ட்ரம்ப். நாட்டின் சகல நடவடிக்கைகளும் முடங்கின. எதிர்வரும் அதிபர் தேர்தலிலும் ட்ரம்ப் போட்டியிட உள்ள நிலையில் இந்த எல்லைச் சுவர் வாக்குறுதி அவருக்குச் சவாலாக அமைந்தது. ஆகவே எப்படியாவது இந்த எல்லைச் சுவரைக் கட்டிவிடவேண்டும் என்று ட்ரம்ப் முனைகிறார். அமெரிக்க நாடாளுமன்றும் இதற்காகக் குறிப்பிட்டளவு நிதியை வழங்கச் சம்மதித்தது. தற்போது அதற்குத் தடை விதித்துள்ளது கலிபோர்ணியா மாநில நீதிமன்றம்.

## தலிபான்கள் – அமெரிக்கா இடையே 7 ஆவது சுற்றுப் பேச்சுக்கள் ஆரம்பம்



காபுல்.ஜூலை 1

ஆப்கானிஸ்தானில் ஆதிக்கம் செலுத்திவரும் தலிபான்களுடன் இணக்கத்தை ஏற்படுத்தும் அமெரிக்காவின் முயற்சியின் பலனாக அங்குள்ள தலிபான்களுடனான அமெரிக்கத் தரப்பின் 7ஆவது சுற்றுச் சமாதானப் பேச்சு கட்டாரிலுள்ள டோஹா நகரில் தொடங்கியது. ஆப்கானிஸ்தானின் காபுல் உட்படப் பல பகுதிகளில் தலிபான்கள் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்தத் தாக்குதல்களில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் சாவடைந்துள்ள நிலையில். தலிபான்களை ஒடுக்குவதற்காக அமெரிக்கப் படைகள் ஆப்கானிஸ்தானில் முகாமிட்டன. இந்த நிலையில், ஆப்கானிஸ்தானில் அமைதி நிலவுவது தொடர்பாக அமெரிக்காவுடன் பேசுவதற்றுத் தலிபான் இயக்கம் அழைப்பு விடுத்தது. இதைத் தொடர்ந்து. அமெரிக்க அதிகாரிகள் மற்றும் தலிபான் இயக்கப் பிரதிநிதிகள் இடையே இதுவரை 6சுற்றுப் பேச்சுக்கள் நடந்துள்ளன.

இவற்றில் ஓரளவுக்கு இணக்கம் ஏற்பட்டதால் அமெரிக்காவுடன் 7ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தை ஆரம்பித்திருப்பதாகத் தலிபான்களின் செய்தித் தொடர்பாளர் சபியுல்லா முஜாஹித் தெரிவித்தார்.

# அமெ. - ஈரான் பதற்றம் தணிக்கப்பட வேண்டும்

## ஜி20 மாநாட்டில் முடிவு

ஒசாகா,ஜூலை 1
ஈரான் - அமெரிக்கா இடையே உச்சமடைந்துவரும் பதற்றம் தவிர்க்கப்பட வேண்டும் என ஜி20 நாடுகளின் தலைவர்கள் வலியுறுத்தினர். ஜப்பானில் உள்ள ஒசாகா நகரில் நடைபெற்ற இந்த வருடத்துக்கான ஜி20 உச்சி மாநாட்டில் பங்கேற்ற பிரிட்டன் தலைமை அமைச்சர் தெரசா மே செய்தியாளர்களுக்கு வழங்கிய செவ்வியிலேயே இந்த விடயத்தை வெளிப்படுத்தினார். இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது:
ஈரான் விவகாரத்தில் பாரசீக வளைகுடாப் பகுதியில் பதற்றம் அதிகரித்து வருகிறது. அங்கு பதற்றம் அதிகரிப்பதில் யாருக்கும் விருப்பமில்லை. இந்தப் பதற்றத்தைத் தணிக்கவும், ஈரானை நிலைகுலைய வைக்கும் செயல்களைத் தடுக்கவும் ராஜதந்திரமான அணுகுமுறையில் தீர்வு காணப்பட வேண்டும் என்றே உலகத் தலைவர்கள் விரும்புகிறார்கள் என்று குறிப்பிட்டார்.




**பின்னணி**
ஈரானுடன் ஏற்படுத்திக் கொண்ட அணு ஒப்பந்தம் ஒன்றிலிருந்து விலகிக்கொண்ட அமெரிக்கா, ஈரானுடன் முரண்போக்கைக் கடைப்பிடித்து வருகிறது. ஈரானுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளையும் விதித்துள்ளது. அமெரிக்காவின் மிரட்டலுக்கு அஞ்ச மாட்டோம் என்று ஈரான் பதிலடி கொடுத்து வருகிறது. இந்தநிலையில் வளைகுடாவில் எண்ணெய்க் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதற்கு ஈரானே காரணம் என்றது அமெரிக்கா. பின்னர் அமெரிக்காவின் ஆளில்லா உளவு வானூர்தியை ஈரான் சுட்டு வீழ்த்தியது.
இதைத் தொடர்ந்து ஈரான் மீது புதிய பொருளாதாரத் தடைகளைப் பிறப்பித்தார் ட்ரம்ப். உளவு வானூர்தியைச் சுட்டு வீழ்த்தியதற்குப் பதிலடியாக ஈரான் மீது தாக்குதல் நடத்தவும் உத்தரவிட்டார். பின்னர் அந்தத் திட்டத்தைக் கைவிட்டார். இந்த நிலையிலேயே இந்த விவகாரம் குறித்து ஜி20 மாநாட்டில் ஆலோசிக்கப்பட்டுள்ளது.



*சீனாவின்தன்னாட்சிப்பிரதேசமானஹொங்கொங்கில்தங்கள்அலைபேசிகளைஒளிரவிட்டு அங்குள்ள மக்கள் அமைதிப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் முக்கிய வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு அணிவகுத்துச் சென்று, நடக்கின்ற ஜி20 உச்சிமாநாட்டில் ஹொங்கொங்கின் அவல நிலையைச் சீனாவுக்கு உணர்த்துமாறு மனுக்களைக் கையளித்தனர்.*

# ஐரோப்பாவில் தொடர் வெப்பம் பிரான்ஸில் அதிக தாக்கம்

பாரீஸ்,ஜூலை 1
குளிர்ப் பிராந்தியமான மேற்கு ஐரோப்பாவில் வெப்ப நிலை அதிகரிப்பு நீடித்து வருகிறது. அத்தோடு பிரான்ஸில் மிக அதிக அளவு வெப்பநிலை பதிவாகி உள்ளது. இதுவரை இல்லாத அளவுக்கு, 45.8 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பிரான்சில் பதிவாகி உள்ளது. 2003 ஆம் ஆண்டில், பிரான்சில் பதிவான 44.1 டிகிரி செல்ஸியஸே இதுவரை அங்கு பதிவான அதிக வெப்பநிலையாக இருந்தது. இந்த நிலையில் தற்போது அதன் அளவு அதிகரித்திருக்கிறது. வடக்கு ஆபிரிக்காவில் வீசி வரும் அனல் காற்றே இந்த நிலைமைக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. இதனிடையே கடும் வெயில் தாக்கத்தால், வயல்வெளிகளில் பணிபுரிந்த 17 வயது இளைஞர் உட்பட இரண்டு பேர் ஸ்பெயினில் சாவடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.









# இன்றைய நாள்

**மேடம்:** முன்யோசனையுடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபார வளர்ச்சிக்கு சில மாற்றங்களை பின்பற்றுவது நல்லது. பெண்கள் நகை இரவல் கொடுக்க வேண்டாம். வெகு நாள் பிரச்னை சுமுக தீர்வு பெறும்.

**இடபம்:** சிலரது பேச்சு உங்களை சங்கடப்படுத்தலாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாரான அளவில் இருக்கும். புதிய வழிகளில் பணச்செலவு அதிகரிக்கும். பயன்தராத பொருளை வாங்க வேண்டாம்.

**மிதுனம்:** நிகழ்வுகள் உங்கள் எதிர்பார்பிற்கு மாறாக இருக்கலாம். தொழில், வியாபாரத்தில் கடுமையான உழைப்பால் மட்டுமே எதிர்பார்த்த நன்மை கிடைக்கும்.

**கடகம்:** விலகிச் சென்ற உறவினர், விரும்பி சொந்தம் பாராட்டுவர். தொழில், வியாபாரம் செழித்து புதிய பரிமாணம் உருவாகும். விருந்து விழாவில் பங்கேற்பீர்கள்குடும்பத்தில் மகிழ்ச்சிகர சூழ்நிலை இருக்கும்.

**சிம்மம்:** உங்கள் மனதில் உருவான திட்டம், செயல் வடிவம் பெறும். தொழில், வியாபார நடைமுறை சிறந்து உற்பத்தி, விற்பனையை அதிகரிக்கும். தாராள பணவரவில் கொஞ்சம் சேமிப்பீர்கள்.

**கன்னி:** சுற்றுப்புற சூழ்நிலையின் தாக்கம் உணர்ந்து செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம்.

**துலாம்:** எதிர்வரும் பணிகளுக்கு முன்னேற்பாடு செய்வது அவசியமாகும். தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட சூழ்நிலை உருவாகி தொந்தரவு தரலாம். அளவான பணவரவு கிடைக்கும். போக்குவரத்தில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரம் செழித்து ஆதாய பணவரவு கிடைக்கும். குடும்பத்தில் சுப நிகழ்வு ஏற்படும்.

**தனுசு:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். கருணை மனதுடன் அன்பு பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். ஆதாய பணவரவு கிடைக்கும்.

**மகரம்:** பணிகள் தாமதமாவதால் மனதில் சஞ்சலம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலத்தன்மையை பாதுகாப்பது நல்லது. அளவான பணவரவு உண்டு.

**கும்பம்:** மாறுபட்ட சூழல் மனதில் அதிருப்தி உருவாக்கலாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற கூடுதல் உழைப்பு தேவை. வரவை விட செலவு அதிகரிக்கும்.

**மீனம்:** வழக்கத்திற்கு மாறான பணி உருவாகி தொந்தரவு தரலாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். நிலுவைப்பணம் கூடுதல் முயற்சியால் கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.



# தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் ஏழு இலக்குகளால் வென்றது

யாழ்ப்பாணம், ஜூலை 1

தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் மன்னார் மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் தாழ்வுபாடு பிறீமியர் லீக் ரி20 தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் அணி 7 இலக்குகளால் வெற்றிபெற்றது.

தாழ்வுபாடு விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து இந்து முன்னணி விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்து முன்னணி விளையாட்டுக் கழக அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ரஞ்சித் 30 ஓட்டங்களையும், குகன் 27 ஓட்டங்களையும், அஜந்தன் 24 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கிளிங்டன், சுஜன் இருவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.


136 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களம் இறங்கிய தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி 14.2 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. சுகந்தன் அதிகபட்சமாக 107 ஓட்டங்களையும், மேனன் 19 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சுகந்தன் 2 இலக்குகளை வீழ்த்தினார். (ம-23)

## போல்ட் ஹற்றிக்

உலகக்கிண்ணத் தொடரில் ஹற்றிக் வீழ்த்திய முதலாவது நியூசிலாந்து வீரர் என்ற அடைவை நிலைநாட்டினார் போல்ட்.

உலகக்கிண்ண கிரிக்கெட்டில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் நியூசிலாந்து இடதுகை வேகப்பந்து வீச்சாளர் டிரென்ட் போல்ட் கடைசி பந்துப்பரிமாற்றத்தில் தொடர்ச்சியாக 3 விக்கெட்டுகளை வீழ்த்தி ஹற்றிக் படைத்தார்.


கடைசிப் பந்துப்பரிமாற்றத்தின் 3ஆவது பந்தில் உஸ்மான் கவாஜா, 4ஆவது பந்தில் மிட்செல் ஸ்ராக், 5ஆவது பந்தில் பெஹ்ரண்டாப் ஆகியோரையும் அவர் 'வீழ்த்தினார். இதன் மூலம் உலகக்கோப்பை போட்டியில் ஹற்றிக் வீழ்த்திய முதல் நியூசிலாந்து வீரர் என்றஅடைவைநிலைநாட்டினார் போல்ட். (ம)



## பிராத்வைட்டுக்கு தண்டம் விதிப்பு

அகலப்பந்து வழங்கிய நடுவருடன் மோதல் போக்கைக் கடைப்பிடித்த மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னணி வீரர் பிராத்வைட்டுக்கு தண்டம் விதித்தது ஐ.சி.சி.

உலக்கிண்ண கிரிக்கெட் தொடரில் இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இந்தியா துடுப்பெடுத்தா டும் போது 42ஆவது பந்துப்பரிமாற்றத்தை கார்லோஸ் பிராத்வைட் வீசினார். அப்போது ஒரு பந்தை அகலப்பந்து என நடுவர் தெரிவித்தார். இதனால் பிராத்வைட் கோபம் அடைந்து நடுவரை நோக்கி முறைத்தார். அவரது செயல் ஐசிசி விதிமுறைக்கு எதிரானது என அவருக்கு போட்டி சம்பளத்தில் 15 சதவீதம் தண்டமாக விதிக்கப்பட்டுள்ளது. (ம)



### பெனால்டியில் கொலம்பியாவை வீழ்த்தி

# அரையிறுதிக்குள் நுழைந்தது சிலி

கோபா அமெரிக்கா கால்பந்து மூன்றாவது காலிறுதி ஆட்டத்தில் சமநிலை தகர்ப்பு உதை மூலம் கோல் அடித்து 5:4 என்ற கோல் கணக்கில் கொலம்பியாவை வீழ்த்தி சிலி அணி அரையிறுதிக்கு முன்னேற்றம். கோபா அமெரிக்க கால்பந்து தொடர் பிரேசில் நாட்டில் நடைபெற்று வருகின்றது. இதில் 12 அணிகள் பங்கேற்று விளையாடி வருகின்றன.

இந்தப் போட்டியில் காலிறுதிக்கு 8 அணிகள் தகுதி பெற்றன. இதில் முதலாவது காலிறுதியில் பிரேசில் அணியும், இரண்டாவது காலிறுதியில் ஆர்ஜென்ரீனா அணியும் அரையி றுதிக்குத் தகுதி பெற்றன.

மூன்றாவது காலிறுதியில் கொலம்பியா-சிலி அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

இரு அணிகளும் கோல் அடிக்க மேற்கண்ட முயற்சிகள் இறுதி வரை நிறைவேறவில்லை. கூடுதலாக வழங்கப்பட்ட நேரத்திலும் கோல்கள் எதுவும் பெறப்படாததால் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை முறை கடைப்பிடிக்கப்பட்டது. இதில் சிலி அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையி றுதிக்குத் தகுதி பெற்றது.

## சென். ஹென்றிஸ் அணி போராடி வென்றது

யாழ்ப்பாணம், ஜூலை 1

தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும் மன்னார் மாவட்ட துடுப்பாட் டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சென். ஹென்றிஸ் அணி வெற்றிபெற்றது.

தாழ்வுபாடு விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சென். ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். நீக்கிலஸ் விளை யாட்டுக் கழக அணி மோதியது.


முதலில் துடுப்பெடுத்தாடிய சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 124 ஓட்டங்களைப் பெற்றது. இதில் யூட்சன் 41 ஓட்டங்களையும், அன்ரனி 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜக்சன் 3 இலக்குகளையும், ஜெயந்தன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

125 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய சென். ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி 18.2 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது.


(ம-23)









# அசைக்க முடியாத ஆஸி. தொடர்ந்து முதலிடத்தில்!



உலகக்கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற ஆட்டத்தில் நியூசிலாந்தைத் தோற்கடித்து முதலிடத்தில் தொடர்கின்றது ஆஸ்திரேலிய அணி. ஆஸ்திரேலிய அணி அரையிறுதிக்கு ஏற்கனவே தகுதிபெற்றுவிட்ட நிலையில், நியூசிலாந்து அணி இந்த ஆட்டத்தில் வெற்றிபெற்றால் அரையிறுதி வாய்ப்பை உறுதிசெய்யும் நிலை இருந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 243 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கவாயா 88 ஓட்டங்களையும், ஹறி 71 ஓட்டங்களையும், கம்மின்ஸ் 23 ஓட்டங்களையும் பெற்றனர்: பந்துவீச்சில் போல்ட் 4 இலக்குகளையும், பேர்குசன், நீஸ்கம் இருவரும் தலா 2 இலக்குகளையும், வில்லியம்சன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணி 157 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து 86 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அணித் தலைவர் வில்லியம்சன் பெற்ற 40 ஓட்டங்களே அதிகபட்சம். அவரைவிட ரெய்லர் 30 ஓட்டங்களையும், கப்றில் 20 ஓட்டங்களையும் பெற்றனர். (ம)



# ஐ.சி.சியிடம் விளக்கம் கேட்கவுள்ளது ஆப்கான்

பாகிஸ்தானுக்கு எதிராக நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மைதான இலத்திரனியல் கணிப்பானின் தவறு தொடர்பில் ஐ.சி.சியிடம் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை விளக்கம் கேட்கவுள்ளது என்று தெரியவருகிறது.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் 49 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 221 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஷமியுல்லா சென்வாரி 49ஆவது பந்துப்பரிமாற்றத்தின் இறுதிப்பந்தை எதிர்கொண்டார். ஓர் ஓட்டத்துக்கான வாய்ப்பு இலகுவாக அமைந்தபோதிலும் அவர் அந்த ஓட்டத்தைப் பெறுவதற்கு முயற்சிக்கவில்லை. காரணம் மைதானத்தின் இலத்திரனியல் கணிப்பான் தாமதமாக இயங்கியமைதான்.

அதாவது 49ஆவது பந்துப்பரிமாற்றத்தின் இறுதிப்பந்து வீசப்பட்ட பின்னரும் கணிப்பான் 48.5 என்றே காட்டியது. இதனால் ஓர் ஓட்டத்தை பெறும் வாய்ப்பைத் தவிர்த்தார் சென்வாரி.

அவர் அந்த ஓட்டத்தைப் பெறாததால் இறுதிப்பந்துப் பரிமாற்றத்தை முஜிபுர் ரகுமான் எதிர்கொண்டார். அமீர் வீசிய அந்தப்பந்துப் பரிமாற்றத்தில் 6 ஓட்டங்களை அவர் பெற்றார். (ம)

## சிம்பாப்வே–அயர்லாந்து ஒருநாள் தொடர் இன்று!

சிம்பாப்வே - அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் இன்று ஆரம்பமாகவுள்ளது.

சிம்பாப்வே அணி அயர்லாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இரண்டு அணிகளுக்கும் இடையில் மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரும், மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி20 தொடரும் இடம்பெறவுள்ளது.

ஒருநாள் தொடர் இன்று ஆரம்பமாகிறது. இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் 4ஆம் திகதியும், மூன்றாவது ஆட்டம் எதிர்வரும் 7ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன. (ம)



# உருகுவேயை வீழ்த்தி பெரு அரையிறுதியில்

கோப்பா அமெரிக்கா கால்பந்துத் தொடரில் நேற்று அதிகாலை இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் உருகுவேயை வீழ்த்தி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது பெரு.

நான்காவது காலிறுதியாக இந்த ஆட்டம் அமைந்தது. ஆட்டத்தின் ஆரம்பம் முதல் இரண்டு அணிகளும் விடாப்போராட்டத்தை வெளிப்படுத்தின.

கோல்கள் இன்றி முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியிலும் கோல்கள் எவையும் பதிவாகவில்லை. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் கோல்கள் எதுவும் பதிவாகாததை அடுத்து சமநிலைத் தகர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 5:4 என்ற கோல் கணக்கில் பெரு வெற்றி பெற்றது.

அனைத்து வகைகளிலும் பெருவைவிடவும் உருகுவே சிறப்பாகச் செயற்பட்டது. கோல்களை நோக்கி 12 உதைகளை உருகுவே உதைந்தது. பெரு 3 உதைகளை மட்டுமே உதைந்தது. ஆட்டத்தின் 54 வீதமான பகுதியில் உருகுவே பந்தைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. பெரு 46 வீதமான நேரத்திலேயே பந்தைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. எனினும் சமநிலைத் தவிர்ப்பு உதை உருகுவேயை வெளியேற்றியது. (ம)



பழைமை வாய்ந்த கோப்பா அமெரிக்கத் தொடரின் காலிறுதியில் உருகுவே வெற்றிபெறும் என்ற பொதுவான எதிர்பார்ப்பு இருந்தது. எனினும் அந்த அணி தோல்வியடைந்தது. இதையடுத்து உருகுவே அணியின் தலைவர் சுவாரஸ் கண்ணீர்விட்டு அழுதார். (ம)

**Dealer or Marketing agent Wanted**

Hatton இல் இருந்து இயங்கிவரும் Vegetable & Meat Supplier இற்கு Jaffna இல் Agent/ Marketing Staff தேவை.

077 348 4467

# பிபா தரப்படுத்தலில் பெல்ஜியம் முதலிடம்



பன்னாட்டுக் கால்பந்தாட்ட சம்மேளனமான பிபா வெளியிட்டுள்ள தரப்படுத்தலில் பெல்ஜியம் அணி முதலிடத்தில் தொடர்கிறது. ஆயிரத்து 746 புள்ளிகளுடன் பெல்ஜியம் முதலிடத்தில் உள்ளது. பிரான்ஸ் அணி ஆயிரத்து 718 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், பிரேசில் ஆயிரத்து 681 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், இங்கிலாந்து ஆயிரத்து 652 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும், போர்த்துக்கல் ஆயிரத்து 631 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளன.

ஆறு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே குரோசியா, ஸ்பெய்ன், உருகுவே, சுவிற்சர்லாந்து, டென்மார்க் ஆகிய அணிகள் உள்ளன. (ம)

## தென்னிந்திய யாத்திரை

**தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரியூடான யாத்திரை**

ஆரம்பம் : 05.08.2019 | யாத்திரீகர் : 10 | நாள்கள் : 16

**தரிசிக்கும் இடங்கள் :-** உச்சிப்பிள்ளையார், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர், திருப்பதி, ஸ்ரீரெங்கம், சமயபுரம், பிரம்மாகோயில், இராமேஸ்வரம், பழனி, திருத்தணி, திருப்பரம்குன்றம், திருச்செந்தூர், சிதம்பரம், ஏகாம்பரேஸ்வரர், காள கஸ்திரி, திருவெண்ணாமலை, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை, திருவானைக்காவல், மேல்மருவத்தூர், தஞ்சாவூர், நவபாஷானம், சூரியன், சந்திரன், சுக்கிரன், புதன், வியாழபகவான், செவ்வாய், ராகு, கேது, சனி பகவான், திருநள்ளாறு, நளன்குளத்தில் நீராடல், தோணியப்பர், குருவாயூர், மைசூர் சாமூண்டீஸ்வரி, நந்திகோவில், கன்னியாக்குமரி, சுசீந்திரம், மனக்குழவிநாயகர், திருக்கடையூர் பஞ்சவடி பிள்ளையார், பட்டி விநாயகர், வடபழனி முருகன் உட்பட 60 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன் மெரீனாபீச், பாண்டிச்சேரி பீச், MGR, ஜெயலலிதா, அண்ணா சமாதி களையும் மைசூர் பாலஸ், பிருந்தாவனம் காடின், அப்துல் கலாமின் மணிமண்டபமும் பார்க்கலாம்.

**தாங்களிடம் பெற்றுக் கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை :-** இருவழி விமான ரிக்கட், மூன்றுவேளை சுத்தமான சைவ உணவு, குடிநீர், 2 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகள், AC வாகன வசதி, கொழும்பில் இருந்து ஏயர்போட் போகவும் வரவும் வாகன வசதி. இவை அனைத்தும் எமது சேவை.

மேலும் விவரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்யவும். சகல ஆலயங்களும் பூசை நேரத்தில் தரிசிக்கலாம்.(இத்துடன் யாழ் - கொழும்பு, யாழ் போக வர வாகன வசதி செய்து தரப்படும்)

**வந்தவரைக் கேளுங்கள் சென்றுவரலாம் வாருங்கள்.**

(C 2069) (04.17)

தொடர்புகளுக்கு: கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
59, 3/6, செட்டியார்தெரு, கொழும்பு -11,
srirangnathan1944@gmail.com
sriranganathan2601@gmail.com
077 768 0102
077 736 2154

## வேலையாள்கள் தேவை

01. நிர்வாக அலுவலர்
02. மனிதவள முகாமையாளர்
03. காசாளர்
04. வரவேற்பாளர்
05. பார்மசி மருந்தாளர்
06. பார்மசி பயிலுனர்
07. அனுபவம் உள்ள தாதியர்
08. சுத்திகரிப்பு தொழிலாளர் (ஆண்/பெண்)

(சுத்திகரிப்பு தொழிலாளர்க்கு நாள் ஒன்றிற்கு 800/= - 1200 /= வரை வழங்கப்படும்)

நேர்முகத்தேர்வுக்கு 03.07.2019 புதன் மு.ப 10 மணிக்கு நேரில் வரவும்.

நியூ யாழ் வைத்தியசாலை
315, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
077 310 7685

**கணினிகள் மற்றும் Japan Amplifier, Speaker என்பன விற்பனைக்கு**

அமெரிக்கா, தென்கொரியா ஆகிய நாடுகளில் பாவிக்கப்பட்ட கணினிகள் மற்றும் Japan தயாரிப்புக்களான Kenwood, Pionieer, Yamaha, TEAC, JVC Amplifier மற்றும் Speaker என்பன விற்பனைக்குண்டு.

076 050 3863
077 945 9445




TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
accountabilitylab

## நீங்கா நினைவலைகள்

8 ஆம் ஆண்டு | 9 ஆம் ஆண்டு



பிறப்பு 05.02.1933 — இறப்பு 30.06.2011
பிறப்பு 04.06.1935 — இறப்பு 16.08.2010

மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும், சங்கானை, பழைய தபால்கந்தோர் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் வேலுப்பிள்ளை பூபாலசிங்கம்**

(காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன-முன்னாள் உத்தியோகத்தர்)

திதி: அபரபக்க சதுர்த்தசி (01.07.2019)

உங்கள் இருவரையும் தேடி ஊர் உலகம் தேடி
நாயாய் அலைகின்றோம் எப்போ கிடைப்பீர்கள்?
யாரைக் கேட்கிறது எங்கே ஆறுவோம்?

அம்மாவின் பிரிவுத்துயர் தாழாமல்
அவரோடு நீங்களும் சென்றது ஏன் தொடர்ந்து?
உங்கள் திருமண தினத்தன்று
அக்கினியில் நீங்கள் செய்துகொண்ட
சத்தியம் தான் காரணமோ?

வேதலைகள் வேர் வரை சென்றாலும்
விழுதுகளாய் எம்மைத் தாங்கினீர்கள்!
உங்கள் இருவரின் குரல் கேட்காமல்
பரிதவிக்கும் எங்கள் குமுறல்கள்
உங்கள் காதுகளில் கேட்கிறதா?

ஊர் விட்டு வந்து நம் சொந்த ஊருக்கு
திரும்ப முடியாமல் தவித்த தவிப்பும்
இப்போ ஊருக்கு போகு நிலை வந்தும்
போவதற்கு நீங்கள் இல்லையே அப்பா....

உயரங்கள் நாம் காண எம்
வாழ்க்கைப் பயணத்தில் துணையாய் இருந்த
ஈரிரண்டு கண்களையும் கண்கெட்ட
எமனுக்கோ பொறுக்கவில்லை

நாள்கள் வாரமாகி வாரங்கள் மாதமாகி
மாதங்கள் ஆண்டாகி போனாலும்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் வார்த்தைகள் எம்மை வாழவைக்கும்
உங்கள் நினைவுகள் எம்மை வாழ்த்திடும்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**திருமதி பாக்கியம் பூபாலசிங்கம்**

திதி: பூர்பக்க அட்டமி (08.08.2019)

அம்மா நீ சென்ற கணமும்
அம்மா நீ சொன்ன வார்த்தைகளும்
அம்மா நீ செய்த உன்னதங்களும்
அம்மா நீ தந்த நெறிகளும்
எம் நெஞ்சினில் என்றும் அழியாதம்மா
எழுகின்ற கேள்விகளுக்கெல்லாம்

நாளும் விடை தேடுகின்றோம் அம்மா!
எங்கள் வலிகளைத் தாங்க
யாருமே இல்லையம்மா
அப்பா அம்மா இல்லாத
அநாதைகளானோம் அம்மா
அந்த இறைவனே கண்ணீரைப் பரிசாகத் தந்து
மௌனம் காணுகின்றார் அம்மா
அன்பு அம்மாவே!
கொடிய நோய் வடிவில் காலன்
கொன்றுவிட்டானே உங்களை
அன்று மாலைவரை நீங்கள் புரிந்த அன்பு மழை
இன்னும் எம் கண்முன்னே வந்து செல்லுதம்மா.....
நாடு கடந்து வந்து நாம் உங்களைக் கண்டு
நாளும் பொழுதும் மகிழ்ந்து இருந்த கணங்களும்
மருமகளையும், பேரப்பிள்ளைகளையும்
நீ கொஞ்சிக் குலாவிய தருணங்களும்
என்றும் உங்களை நினைவூட்டுகின்றது அம்மா.....
நீங்கள் எனக்காக கட்டிய வீடு
இன்று பாலைவனமாய் கிடக்கின்றது
நீங்கள் இன்று இருந்திருந்தால்
நீங்களாவது அந்த வீட்டில் இருந்திருப்பீர்களே அம்மா....
உயிரைத் தந்து உடலில் சுமந்து
உலகில் வாழ உருவம் தந்த
தெய்வம் நீயம்மா!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மாதகல் மேற்கு,
மாதகல்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
077 774 3185 (மகன்)

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

**20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்**

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**

1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.07.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.